கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை
207
ஆடி 2023
10.07.2023
ஆளுமைச் சிறப்பிதழ்

# ஜீவநதி

100/-
பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



கந்தர்மடம் அ.அஜந்தன்
தாட்சாயணி
ப.தயாளன்
தி.செல்வமனோகரன்
த.அஜந்தகுமார்
வ.ந.கிரிதரன்
தமிழ்க்கவி

# தமிழ்க்கவி சிறப்பிதழ்

15 DEC 2023
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கிய மாத சஞ்சிகை
2023 - ஆடி - ஆளுமைச் சிறப்பிதழ்

# பொருளடக்கம்

## கட்டுரைகள்

**தமிழ்க்கவியின் "இருள் இனி விலகும்" நாவல் ம(றை)றக்கப்பட்ட பெண்ணிய வரலாற்றின் முக்கிய அத்தியாயங்கள்**
கந்தர்மடம் அ.அஜந்தன்...................... 03

**"இனி ஒரு போதும்" சுழலில் சிக்கிய வாழ்வு**
தாட்சாயணி.......................................... 07

**தமிழ்க்கவியின் சிறுகதைத்தொகுதி "நரையன்"**
ப.தயாளன்.......................................... 17

**தமிழ்க்கவியின் ஊழிக்காலம்**
வ.ந.கிரிதரன்.......................................... 23

**இனி வானம் வெளிச்சிரும் தமிழ்க்கவியின் எழுத்தின் மீதான ஒரு வாசிப்பு**
தி.செல்வமனோகரன்.......................... 25

**தமிழ்க்கவியின் நாவல்கள்**
த.அஜந்தகுமார்.................................... 27





**சிறுகதை**
தமிழ்க்கவி - 10, 21



**கவிதை**
தமிழ்க்கவி - 13



**நேர்காணல்**
தமிழ்க்கவி - 12

பொது நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2023 ஆடி இதழ் - 207**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

**மனந்தளராத படைப்பாளி**

தமயந்தி என்னும் இயற்பெயரை உடைய தமிழ்க்கவியை ஈழத்து இலக்கிய உலகம் நன்கறியும். ஈழத்து போராட்டத்தில் தன் இரு பிள்ளைகளின் இணைவுக்கு பின்னர் தானும் இணைந்து செயற்பட்டவர். தன் பிள்ளைகளை மண்ணுக்காக வித்திட்டவர். போராளியாக இணைந்த காலத்திலேயே இவரது முதல் நூல் வெளியானது. தொடர்ச்சியாக 5 நூல்களை தற்போது வரையில் வெளியிட்டுள்ளார். வவுனியாவில் உள்ள சின்னப் புதுக்குளத்தில் பிறந்த இவர் சிறு பிள்ளையாக இருந்த காலம் தொட்டு தற்போது வரையில் வாசிப்பில் ஈடுபாடு உடையவராக இருக்கின்றார். பெண்களின் பிரச்சினைகள், கிராமப்புறப் பெண்கள் அனுபவிக்கும் அடக்குமுறைகள், போராட்டகாலப் பிரச்சனைகள், தமிழ் மக்கள் அனுபவித்த இன்னல்கள், இறுதிக்கட்டப்போர் என்பவற்றை இவரது எழுத்துக்கள் வாயிலாக தரிசிக்க முடிகின்றது. இவரது எழுத்துக்கள் பல வரலாற்றுப் பதிவுகளாக கொள்ளத்தக்கனவாக விளங்குகின்றன. இறுதிப் போரின் போதான சம்பவங்களை உள்ளடக்கி எழுதப்பட்ட "ஊழிக்காலம்" சில முரணான கருத்துக்களை முன்வைத்த போதும் மக்களுக்கு பல்வேறு விடயங் களை எடுத்தியம்பியுள்ளதையும் மனதில் கொள்ள வேண்டும். எந்த கோட்பாடுகளுக்குள்ளோ, இசங்களுக்குள்ளோ தன்னை ஆட்படுத்தாது தான் நினைத்ததை எழுத்தில் வடித்துவிட்டு செல்லும் மனப்பாங்கை உடையவர் தமிழ்கவி. இனிவானம் வெளிச்சிரும், ஊழிக்காலம், நரையன் ஆகிய நூல்கள் பரிசுகளைப் பெற்றுக் கொண்டன. முதலமைச்சர் விருது, வடக்கு கிழக்கு ஆளுநர் விருது, கலாபூஷணம் விருது பவளம்மாள் விருது என்பவற்றைப் பெற்றிருக்கின்றார். எவ்வளவோ இன்னல்களை சிறுவயது முதல் அனுபவித்தபோதும் மனந்தளராத வலிமை மிகுந்த பெண்ணாக வாழ்ந்து வருபவர். யாருக்கும் அச்சமில்லாது தனது கருத்துகளை தெரிவித்து வருகின்றார். இவரது இலக்கிய பங்களிப்பை மதித்து அவருக்கு இச்சிறப்பிதழை வெளியிடுவதையிட்டு ஜீவநதி மகிழ்வு அடைகின்றது.

– க.பரணீதரன்


**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ கந்தர்மடம் அ.அஜந்தன்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# தமிழ்க்கவியின் “இருள் இனி விலகும்” நாவல் ம(றை)றக்கப்பட்ட பெண்ணிய வரலாற்றின் முக்கிய அத்தியாயங்கள்

தமிழ்க்கவி என்ற புனைப்பெயர் கொண்ட தமயந்தி சிவசுந்தரலிங்கம், சின்னப்புதுக்குளம் என்ற வன்னிப் பிரதேசத்தைச் சார்ந்த முன்னாள் போராளி. இவரது பிள்ளைகள் இருவர் விடுதலைப் போரில் தம்மை அர்ப்பணித்தவர்கள். இந்த நூல் வெளிவரும்பொழுது இவர்களில் ஒருவர் மாவீரராக தன்னையே இந்த மண்ணிற்கு அர்ப்பணித்தவர். தமிழ்க்கவி 1964 முதல் எழுத்துலகில் பயணிப்பவர். இருப்பினும் 1967 முதல் 1982 வரையில் எழுத்துப் பணியிலிருந்து விலகியிருந்துள்ளார். இவரது “இனி வானம் வெளிச்சிரும்” என்ற நாவல் பலராலும் பேசப்பட்ட படைப்பாக குறிப்பிடப் பட்டுள்ளது. அதன்பின் 2004 இல் “இருள் இனி விலகும்” என்ற இந்த நாவல் 138 பக்கங்களோடு அறிவமது பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

தனது முன்னுரையில் இந் நாவலின் தளம்பற்றி கூறுகையில்: “இது ஒரு வரலாற்றுப் பதிவு. என்றென்றும் எனதுள்ளத்தில் அழியாமல் நிலைத்து விட்ட வடு” என்று குறிப்பிட்டுள்ளார். இந்த நாவலில் வான்தொடமுடியாமல் சிறகொடிந்து வீழ்ந்த பறவைகள் என்பதும், எதுவும் கற்பனைப் பாத்திரங்கள் அல்ல என்பதும் மனதில் பலமான காயங்களை ஏற்படுத்தத் தவறவில்லை. “என்னுடன் உண்டு, உறங்கி, உறவாடிக் களிப்பில் சிரித்து, கனவில் மிதந்து, கோபத்தில் குதித்து, பிரிவில் அழுது அடிப்படை மனித உணர்வுடன் வலம் வந்தவர்கள்” என்று அவரின் நாவலில் துணிவோடும் வேட்கையோடும் சலனமின்றிக் களமாடி மடிந்த வேங்கைகளை அறிமுகப் படுத்தியுள்ளார். 1996 முதல் 2000 ஆம் ஆண்டுவரை பல் வேறு களங்களில் தம் உயிரைத் தியாகம் செய்தவர்களே அந்தக் கதாபாத்திரங்கள். அதுமட்டுமன்றி நாவலின் முடிவில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 ஆண்களும் 12 பெண்களுமாக அத்தனை மாவீரர்களின் புகைப்படங்களும் அவர்களின் இயற் பெயர், பதவி நிலையோடு இயக்கப் பெயரும், வீர மரணமடைந்த திகதி மற்றும் சம்பவ விபரிப்புடன் பதிவிடப்பட்டது நூலை நுகரும்பொழுது பலமுறை அவர்களின் முகங்களைப் புரட்டிப்பார்க்கவே மனதைத் தூண்டு கின்றது. அத்துடன் தனது முதலாவது நூலை வெளி யிடக் காரணமாக இருந்ததோடு இந்த நாவலை எழுதத்தூண்டிய லெப்.கேணல் தணிகைச்செல்வியின் புகைப்படத்தையும், இந்த நாவலுக்கான சில புகைப் படங்களை வழங்கிய கப்டன் பிரசன்னாவின் (பெண் போராளி) புகைப்படத்தையும் பதிவிட்டு அவர் களையே இந்த நாவலின் நாயகிகளாக எழுத நேர்ந்தது தமிழ்க்கவியை அதிகம் பாதித்திருக்கின்றது என்பது அவரது முன்னுரையில் புலப்படுகின்றது. இந்த நாவலுக் காக தரவுகளையும், புகைப் படங்களையும் வழங்கிய போராளிகளுக்கும், ஒப்புநோக்குநர்களாக நாவலைச் சரிபார்த்த பல முன்னிலைப் போராளிகளுக்கும் சக போராளி என்பதற்கு அப்பால் ஒரு நூலாசிரியராக முன்னுரையில் நன்றி கூறியுள்ளார்.

உலகின் பேசுபொருளாகவும் பல்வேறு போராட்டங்களின் கருப்பொருளாகவும் இடம்பிடித்த பால்நிலைச் சமத்துவத்தை ஒரு போர்க்களத்தில் மட்டுமே பார்க்க முடிந்தது என்றால் அதுதான் தமிழினத்தின் விடுதலைக்கான ஈழப்போர். இதில் பெண்கள் தமது உரிமைக்காகப் போராடவில்லை. ஒரு இனத்தின் விடிவிற்காக, ஒரு தாய் நிலப்பரப்பின் மீட்பிற் காக, தமிழ் மக்களின் உரிமைக்காகவே போராடினார்கள். பால் என்பது உயிரியல் மற்றும் உடலியல் சார்ந்தது ஆனால் பால்நிலை என்பது சமூகம் மற்றும் கலாசாரத்தி னால் தீர்மானிக்கப்படுவது. எமது சமூகத்தில் மட்டு மன்றி உலகம் முழுவதும் பணிகளும் பதவிகளும் அதிகாரங்களும் பெண்களுக்கென்று தனித்துவமாகவும் ஆண்களுக்கென்று தனித்துவமாகவுமே வரையறுக்கப் பட்டிருக்கின்றது. பாரதியின் பல பாடல்களில் இந்த பால்நிலைச் சமத்துவமே பெண் விடுதலையாகப் பேசப்பட்டது.

மனமெனும் பெண்ணே! வாழி நீ கேளாய்
ஒன்றையே பற்றி யூச லாடுவாய்
அடுத்ததை நோக்கி யடுத்தடுத் துலவுவாய்
நன்றையே கொள்ளெனிற் சோர்ந்துகை நழுவுவாய்
விட்டுவி டென்றதை விடாதுபோய் விழுவாய்
தொட்டதை மீள மீளவுந் தொடுவாய்
புதிய காணிற் புலனழிந் திடுவாய்
புதியதை விரும்புவாய் புதியதை யஞ்சுவாய்
அடிக்கடி மதுவினை யணுகிடும் வண்டுபோல்
பழமையாம் பொருளிற் பரிந்துபோய் வீழ்வாய்
பழமையே யன்றிப் பார்மிசை யேதும்
புதுமைகா ணோமெனப் பொருமுவாய், சீச்சீ!
பிணத்தினை விரும்பும் காக்கையே போல
அழுகுதல், சாதல், அஞ்சுதல் முதலிய
இழிபொருள் காணில் விரைந்ததி லிசைவாய்...

என்று நீளும் இந்தப் பாரதியின் கவிதைவரிகளால் பேசப்படும் பெண்களின் வாழ்வியலும் தமிழ்க்கவியின் "இருள் இனி விலகும்" நாவலில் வலம்வரும் பெண் வேங்கைகளின் கொள்கை நழுவா போரியலும் ஒப்பு நோக்குதற்குரியது. பாரதி எதிர்பார்த்த புதுமைப் பெண் கள் (அல்லது அதற்கும் மேல்) நம் தேசத்தில் வாழ்ந்து காண்பித்துள்ளனர் என்பதற்கு இந்த நாவல் ஒரு சான்று.

சில பெண்கள் பழமையில் மூழ்கித் தம் விருப்புக்களைத் தொலைத்திடுவர், அச்சத்தில் மூழ்கித் தினம் தம் நாட்பொழுதுகளைத் தொலைத்திடுவர், அழுகையே பெண்களின் கடைசி ஆயுதமென்று சொல்லிற்கிணங்க அடிக்கடி அழுது தம் எதிர்ப்பை வெளிப்படுத்துவர், தோல்விகளைத் தாங்கமுடியாமல் தற்கொலை செய்துகொள்வர் இவர்கள் அனைவரும் பாரதி நொந்து சொல்கின்ற சராசரிப் பெண்கள். நாம் இந்த நாவலில் காண்கின்ற பெண்கள் இவற்றுக்கு சவால் விடுகின்ற புயல்கள் என்பதை நாவலைப் படிக்கும்போது புரிந்துகொள்வீர்கள். இலங்கையில் 1983 கலவரத்தின் பின் மிக அதிகமான தற்கொலைகள் இடம்பெற்றுள்ள தாகவும் குறிப்பாக தமிழ்ச் சமூகத்தில் இவை அதிகம் இடம்பெற்றிருப்பதையும் தற்கொலை தொடர்பான காவல்துறை மற்றும் வைத்தியசாலைத் தரவுகள் சொல் கின்றன. அதிலும் 100,000 பேரை எடுத்துக்கொண்டால் சுமார் 65 பேர் 17 -25 வயதையுடைய இளைஞர் யுவதி களாகவே இருந்துள்ளனர். ஆனால் 1995 இடப்பெயர்வு காலத்திலிருந்து 2000 ஆண்டு வரை அதாவது இந்த நாவலில் இடம்பெற்ற சம்பவங்கள் இடம்பெற்ற காலப் பகுதியில் அதே வயதெல்லையில் இந்த தற்கொலை 100,000 பேரை எடுத்துக்கொண்டால் 35 இல் இருந்து 25 வரை குறைந்துள்ளது. இளைஞர்கள் யுவதிகளின் போராட்டச் சிந்தனையும் அவர்களின் கனவுகள் நம் தேசத்தின் விடிவை நோக்கியதாக அமைந்ததும் இதற் கொரு காரணமாக அமைந்திருக்கலாம். ஆனால் 2009 இல் 22.70% ஆக மீண்டும் அதிகரித்து மீண்டும் 2020 ஆம் ஆண்டுவரை 14.00% ஆகவே தொடர்ந்துள்ளது. இத்தரவினை இந்த இடத்தில் பதிவிடுவதன் நோக்கம் உயிரின் பெறுமதியை உணராதவர்களே இவ்வாறான தற்கொலை முடிவுக்குள் செல்கின்றனர்.

ஆனால் இந்த நாவலில் வருகின்ற போராளிகள் இந்த வயதெல்லைக்கு உட்பட்டவர்கள். இவர்களது தியாகத்தில் ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்துள்ளன. அவர்கள் ஒவ்வொருவரது உயிர்த் தியாகத்திற்கும் அள வில்லாப் பெறுமதி உள்ளது, உயர்வான மதிப்புள்ளது, இறந்தும் நம் மனங்களில் வாழும் அந்தஸ்த்தைப் பெற்றுள்ளனர். இருள் சூழும் நம் வாழ்வின் ஒளி விளக்காய் ஒளிர்கின்ற இவர்களின் ஆத்மாக்கள் புனித மானவை. இராணுவ மரியாதைகளின்றி, உறவினரின் ஒப்பாரிகளின்றி, சமயக் கிரிகைகளின்றி, புலிக்கொடி உடலில் போர்த்தமுடியாமல், புனித மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கமுடியாமல், மக்களின் அஞ்சலி களின்றி அனாதரவாக வீதியில் சுட்டும், வெடித்தும் சிதறிக்கிடந்த அவர்களின் உடல்கள் மனக்கண்ணில் தோன்றி மனதை நிலைகுலைய வைக்கின்றது. தமிழ்க்கவி சொல்வதுபோல் இவர்களும் சராசரி மனித னாக பல கனவுகளோடு இருந்தவர்கள்தான் ஆனாலும் இன விடுதலைக்காக தம் அத்தனை பெறுடைய கனவு களையும் இவ் வான்பரப்பில் பறக்கவிட்டு தமிழர்களின் சுதந்திர வாழ்வை தமது ஒரே கனவாக அத்தனை போராளிகளும் ஏற்று அந்தக் கனவோடை தம்முயிர் நீத்த அந்த வேங்கைகள் ஒவ்வொருவராலும் நினைவு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கூறப்படவேண்டியவர்கள் என்பதை இந்த நாவல் உணர்த்துகின்றது.

ஈழப்போராட்டத்தின் நியாயங்கள், போராட்ட முறைகள் தொடர்பான இருவேறு கருத்துக்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டதாக அமைந்தாலும் அவர்கள் இருசாராரது மனங்களிலும் உலகின் அளவிடமுடியாத் தியாகமே இவர்களின் மரணங்கள் என்ற உண்மையை நிலைக்க வைக்கும் விதத்தில் நாவலின் அமைப்பும், பாத்திரங்களின் விபரிப்பும் தத்துருபமானதும், உணர்வெழுச்சியானதுமாக பக்கத்திற்குப் பக்கம் தமிழ்க்கவி மிகவும் சிரத்தையோடு எழுதியுள்ளது அவரின் எழுத்து அனுபவத்தின் முதிர்ச்சியைக் காண்பிக்கின்றது. சம்பவங்கள், பெயர்கள், உச்சரிக்கப்பட்ட பெரும்பாலான சொற்கள்கூட அப்படியே எழுத்துருப் பெற்றுள்ளதாகவே தமிழ்க்கவி குறிப்பிட்டுள்ளார். 1995 இல் இடம் பெற்ற யாழ்ப்பாண இடப்பெயர்வு மக்களை எப்படிப் பாதித்ததோ அதேபோல் போராளிகளின் வீரத்துக்கும் தன்மானத்திற்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதாகவே இந்த நாவலின் ஆரம்பம் அமைந்துள்ளது. கற்பனைக்கு இடமின்றிய கதை நகர்வே இந் நாவலின் சிறப்பு. முறிவற்ற வசன அமைப்புக்களும், சொல்லாட்சியும், பேச்சுவழக்குத் தமிழும், இடங்களை வர்ணித்த முறையும் கதைக் களத்தின் காலத்தைப் பிரதிபலித்துள்ளது. பொதுவாக நூலாசிரியரின் எண்ணங்களும், வாழ்வனுபவங்களுமே நாவல்களில் நிறைந்திருக்கும். அதனால் நூலாசிரியரே ஒவ்வொரு பக்கங்களிலும் பல்வேறு பாத்திரங்களாக வலம் வந்திருப்பார் ஆனால் அதற்கு மாறாக உண்மைச் சம்பவங்களை எழுதியுள்ளதால் தன்னையும் தாண்டி ஒவ்வொரு பாத்திரங்களையும் வாசகரின் மனதில் பதியும்வகையில் உரையாடல்களூடாகவும், வர்ணனைகளூடாகவும், உருவ அடையாளப்படுத்தலின் ஊடாகவும் உயிரோட்டமான தமிழால் சிறப்பாக இந்த நாவலை ஆக்கியுள்ளார்.

ஈழப்போர் படைரீதியான பல்வகைமைக் கட்டமைப்புக்களால் வடிவமைக்கப்பட்டிருந்தது. அதற்கான விசேட பயிற்சிகள், அந்தப் படைப் பிரிவிற்கான தெரிவுகள், அதில் உள்ள சவால்கள், அதைக் கையாளும் நுட்பங்கள், மக்களின் ஆதரவு, எதிர்ப்பு, காட்டிக் கொடுப்பு, தற்துணிவான தாக்குதல் திட்டங்கள், அதில் தம்மையே கொள்கைக்காகப் பலிகொடுத்த வேங்கைகள் என விறுவிறுப்பாக நாவல் நகர்கின்றது. அதே சமயம் போராளிகள் தமக்கு அடுத்த நொடியில் எதுவும் நடக்கலாம் என்ற கவனத்துடனும் அது எனக்கோ அல்லது ஏனைய எனது சக தோழிக்கோ அல்லது தோழனுக்கோ நடக்கலாம் என்ற எதிர்பார்ப்போடும் தமது நாட்களை கடப்பதுபோல அவர்களுக்கு ஏதும் நடந்துவிடுமோ என்ற ஏக்கத்துடனே இந்த நாவலின் ஒவ்வொரு பக்கத்தையும் புரட்டவேண்டியுள்ளது.

நமது தேசத்தின் விடிவுக்காக தம்மை அர்ப்பணித்த அந்த இளம் வேங்கைகள் தினமும் உணவுக்காக அலைவதும் பல வீடுகள் அவர்களை ஆதரித்தபோதும் சில வீடுகள் அவர்களை நிராகரித்ததும் மனதை நெருடிச் செல்வதோடு எமக்குள் குற்ற உணர்வுகளையும் ஆங்காங்கே விட்டுச் செல்கின்றது. எதிரியிடம் உயிருடன் பிடிபடக் கூடாதென்ற தம் தலைவரின் கொள்கையை தமதாக்கி சில போராளிகள் இறுதி தோட்டாக்களாலும்,



குண்டுகளாலும் தம் விடுதலையை தாமே தேடிக் கொண்டமை உலகம் வியந்த அல்லது பயந்த ஒரு அர்ப்பணிப்பு. இறுதி யுத்தத்தில் இசைப் பிரியா உட்பட்ட பலரது முடிவுகள் மாறாத வடுவாக எம்முள் புதைந்திருக்கும் வேளையில் இந் நாவலில் வரும் பெண் போராளிகளின் தியாக மரணங்கள் எதிரியின் பலவீனத்தையும் மூர்க்கத்தனத்தையும் எதிர்வுகூறிய ஒன்றாகவே பார்க்க முடிகின்றது.

விதம் விதமான ஆடைகளிலும், நகைகளிலும், அலங்காரச் சாதனங்களிலும், வாசனைத் திரவியங்களிலும், நீண்ட கூந்தல் மீதும் மோகம்கொள்ளும் பெண்களுக்குள் இத்தனைமீதும் பற்றிழந்து வரியுடையும், சைனற் மாலையும், கட்டையாக வெட்டிய அல்லது மடித்துக் கட்டிய தலைமுடியும், சேற்றில் அமிழ்ந்தும், நீரேரியில் நனைந்தும், வெய்யிலில் காய்ந்தும், வீதியில் சைக்கிளில் அலைந்தும் தம் வாழ்வை தானமாய்க் கொடுத்தவர்களே இந்தப் பெண் வேங்கைகள். சராசரி பெண்ணாக ஆடை அணியவும், தலைவாரவும், மற்றவர்களோடு பழகவும் பயிற்சி வழங்கப்படுவதை தமிழ்க்கவி இவ்வாறு கூறுகின்றார்.

"கேட்க சிரிப்பு வரத்தான் செய்யும், பெண்களுக்கு அணிமணிகள் அணிய பயிற்சி தேவையில்லைத் தான். இவர்கள் இராணுவப் பயிற்சியின் மூலம் ஒரு காத்திரமான உறுதியான திடமான நடையைப் பெற்றுவிட்டதால் மீண்டும் சாதாரண பெண்களாக மாறப் பயிலவேண்டியுள்ளது".

வெளியிலுள்ள பலருக்கு ஒரு சினிமா நட்சத்திரத்துடன் புகைப்படம் எடுப்பதும் அதனை முகநூலில் பிரசுரிப்பதும் ஒரு மோகம். தற்பொழுது அதனையும் தாண்டி இந்தியத் தொலைக்காட்சியில் கலந்துகொள்வதும் பிரபல்யமாவதும் ஒரு கனவாக வளர்ந்துவருகின்றது. ஆனால் ஒவ்வொரு போராளிகளுக்குள்ளும் அப்படியொரு கனவு உண்டென்றால் அது "அண்ணை" என்று அன்போடு அழைக்கும் தனது தலைவரை நேரில் சந்திக்கவேண்டும் ஒரு புகைப்படம் எடுக்கவேண்டும் என்பதுதான். இந்தப் படைப் பிரிவுக்கு இரு முறை அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது. அதனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய சாதனையாகவே அவர்கள் பார்த்தார்கள்.

இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட யாழ் மண்ணில் பெண்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கு கிருசாந்தி கொலைச் சம்பவம் ஒரு உதாரணம். இராணுவத்தோடு மோதுவதற்கு அவர்களது கட்டுப் பாட்டுக்குள் நுழையும் முதலாவது பெண்கள் அணியாக லெப்.கேணல் தணிகைச்செல்வியின் தலைமையிலான மேஜர் நிசாந்தி (சின்ன நிசாந்தி), மேஜர் நிசாந்தி (பெரிய நிசாந்தி), மேஜர் இளவதனி, கப்டன் பூமணி ஆகியோர் களத்திற்குள் நுழைகின்றனர். அங்கு ஏற்கனவே களப்பணி செய்துகொண்டிருந்த மேஜர் செந்தமிழன், கப்டன் வெண்ணிலவன், கப்டன் அற்புதன், மேஜர் குலதீபன், கப்டன் சிவஒளி, மேஜர் துளசி, கப்டன் செல்வா, மேஜர் கண்ணன் ஆகியோருடன் இணைந்து தமது பணிகளைச் செய்தனர். பின்பு கப்டன் ராகினி, கப்டன் பிரசன்னா, கப்டன் லோகா, மேஜர் இளவரசி, கப்டன் பூவரசி, கப்டன் நற்குணம் ஆகியோருடன் இன்னும் சில போராளிகளும் இந்த நாவலில் வலம்வரும் நிஜமான கதாபாத்திரங்கள். இவர்களில் லெப்.கேணல் தணிகைச்செல்வி தன் அணிக்கு முன்னுதாரணமாக "எனக்கு அனுபவமில்லாத ஒன்றை என் பிள்ளைகளைச் செய்யச் சொல்லமாட்டேன். எனவே நானும் அவர் களுடன் போகின்றேன்" என்று களம் புகுந்தவர். இருப்பினும் தலைமையின் ஆணைக்கிணங்கி சிறிது காலத்தின்பின் மீண்டும் பயிற்சிப் பொறுப்பிற்குச் சென்றவர் பின்பு 1999 இல் மன்னார் ரணகோச ராணுவ நடவடிக்கையில் வீரமரணம் அடைந்தார். மேஜர் மொழி 1997 யாழ் நுழையும்பயிற்சியை முடித்து ஒரு நேரடித்தாக்குதல் அனுபவத்தைப் பெறுவதற்கு ஆனை யிறவு தளங்கள் மீதான தாக்குதலில் விழுப்புண்ணுற்றுக் காவியமானார். கப்டன் பூமணி ஏனைய பெண்போராளி கள் கொல்லப்பட்டபின் இழப்புத் துயருடன் மீண்டும் வன்னிக்குச் சென்றார். பின்பு 1998 இல் பூமணியும் பரந்தன் ஆனையிறவு முகாம் மீதான தாக்குதலில் களப் பலியானார். ஏனையோரின் மரணங்கள் யாழ் மாவட்டத் திற்குள் தாவடி, கொக்குவில், உரும்பிராய், வடமராட்சி, மண்டான், நாகர்கோவில், கந்தரோடை, உடுவில், கோண்டாவில், மிருசுவில் ஆகிய பிரதேசங் களில் பல் வேறு சந்தர்ப்பங்களில் இருவர் இருவராகவே தம் உயிர் களை விட்டுச் சென்றுள்ளனர். அதிலும் சில மரணங் களை நேரில் பார்த்த அல்லது அவர்களின் உடலைப் பார்த்தபோதும் உணர்வுகளை அடக்கி பின் தம் தோழியர் களிடம் சொல்லியழும் சந்தர்ப்பங்கள் அவர்களின் பெண்மையின் அல்லது மென்மையின் மீள்துளிர்ப்பு.

இவர்களின் வீர வரலாற்றை இயம்பும் இந்த நாவல் எமது நாட்டு மக்களால் மறைக்கப்பட்ட அல்லது மறக்கப்பட்ட பெண்ணிய வரலாற்றின் ஒரு முக்கிய அத்தியாயம். இவர்கள் வெறும் போராளிகளாக வளர்த்தெடுக்கப்படவில்லை என்பதை தமிழ்க்கவி அவர்களின் அறிமுகங்களில் சொல்லத் தவறவில்லை. மக்கள் சேவையில், மேடைப் பேச்சுக்களில், புகைப்படத் துறையில், பெண்கள் ஆய்வகத்தில், வெளியீட்டுப் பிரிவில், போசாக்குப் பூங்காவில், நீச்சலில், படை கோட்டத்தில், நிர்வாக சேவையில், அரசியல்த் துறையில், வழிகாட்டும் பிரிவில்... என்று இவர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் பல அனுபவங்களும், திறமைகளும், பொறுப்புக்களும் பொதிந்திருந்தன. இருப்பினும் கொள்கைக்காக ஒரு இலக்கைத் தெரிவு செய்து களமாடியவர்கள் எதிரிக்கு எப்பொழுதுமே ஒரு புதிராகவும் சவாலாகவும் அன்று இருந்துள்ளனர்.

இந்த நூலை படித்து முடிக்கையில் அவர்களின் இலட்சியங்களும் கனவுகளும் இன்னும் இந்த மண்ணில் சிதறுண்டு கிடப்பதை உணர்வீர்கள். அவர்களது ஆத்மாக்கள் காற்றில் கலந்து நம் சுவாசத்தில் ஒன்றித்து சூடாக வெளியேறுவதை உணர்வீர்கள். இத்தனை தியாகங்களுக்கு மத்தியிலும், வெற்றிகளுக்குப் பின்பும் போராட்டம் தோற்றுவிட்டது. இவர்களின் தியாகங்கள் வெறும் நினைதலுக்குரியதாக அமைந்துவிட்டது வேதனைக்குரிய விடயமே. இறுதி யுத்தம் முடிவுற்ற பொழுது எனக்கு ஒரு வைத்தியர் சொன்ன விடயம் நினைவுக்கு வந்தது.

"ஒரு தாய் தான் பத்து மாதங்கள் பக்குவமாய்ப் பார்த்துப் பார்த்து வளர்க்கும் கரு குழந்தையாக பிறக்கு மென்றெண்ணி அழகான ஆடைகளும், தலைக்குத் தொப்பியும், காலுக்கு சொக்சுமாக நிறம்பார்த்து, தரம் பார்த்து இரவு பகலாக தைத்து முடித்தபின் குழந்தை இறந்து பிறந்தது போல எமது ஈழப்போரில் கட்டு மானங்கள், ஒரு நாட்டுக்கான சட்டங்கள், அபிவிருத்திப் பணிகள், பல படையணிகள் என வளர்த்தெடுத்தபின் சர்வதேச ஆதரவோடு எமது போராட்டம் மௌனித்து விட்டது".

தற்போதுள்ள இளைய சமூகம் தற்கொலை, போதை, அதிவேகம், கொலை என்று எம் இனத்தை நாங்களே அழிக்கக்கூடிய பாதையிலேயே பயணிக் கின்றது. இவர்களுக்கு இந்த நாவலில் உள்ள ஒவ்வொரு பாத்திரங்களதும் தியாகத்தின் கனதியையும் புரிய வைப்பது ஒரு பெரும் பணியென்றே நான் கருது கின்றேன். இத்தனை இழப்பின் பின்னும் தியாகத்தின் பின்னும் நாம் அடிமையாகவே வாழ்கின்றோம் என்பது கசப்பான உண்மைதான். இவர்களை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு இன்று மாவீரர் குடும்பமென்ற கௌரவம் கூட கொடுக்கமுடியாத, அவர்களின் இழப்புக்கு நியாயம் பகிர முடியாத சமூகமாக நாம் ஒதுங்கி யிருப்பது வேதனைக்குரியது. இருப்பினும் தமிழ்க்கவி போன்ற பலர் அந்தப் போராளிகளோடு வாழ்ந்த நினைவு களால் எப்படி ஆட்கொள்ளப்பட்டுள்ளனர் என்பதை இந்த நாவல் தெளிவுபடுத்துகின்றது. முறம்கொண்டு புலி விரட்டிய பழம் கதைகள் மங்கி ஒரு புது யுகம் படைத்த பெண்களை சக போராளியாக உள்ளிருந்து தனது நேரடி அனுபவத்திலும் திரட்டப்பட்ட தகவல் களின் அடிப்படையிலும் எழுதப்பட்ட நாவல் காலத் தால் அழிக்கப்படக் கூடாத ஒன்று. தமிழர் நம் அடை யாளங்களும், வீரவரலாறுகளும் ஏன் ஆன்மீகத் ஸ்தலங் களுமே திட்டமிட்டு அழிக்கப்படுகின்ற பொழுது எமது அடுத்த சந்ததிக்கு அன்னியநாட்டு வரலாறுகளையா நாம் சொல்லிக் கொடுக்கப் போகின்றோம்?. இனி எப்பொழுதும் இப்படியான வீரப் பெண்களை இந்த நாடு காணப்போவதில்லை என்பது எதிரிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. இவ்வாறான ஒரு சிறந்த நாவலைப்படைத்த தமிழ்க்கவிக்கு அந்தப் போராளி களின் ஆத்மாக்களோடு நாமும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம். ●


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

■ தாட்சாயணி

# "இனி ஒருபோதும்" சுழலில் சிக்கிய வாழ்வு



தமிழ்க்கவியின் நாவல்கள் எதனையும் இது வரைக்கும் நான் வாசித்ததில்லை. போர் முடிவுற்ற பின்னர் வெளிவந்த "ஊழிக்காலம்" நாவலைப் பற்றிய கருத்துக்களும், இடையிடையே வாசித்த சிறுகதைகளும் அவரது எழுத்துக்கள் குறித்த பிம்பத்தை என்னுள் ஏற்படுத்தியிருந்தன. அதைவிட போர்க்காலத்தில் வன்னிப் பிரதேசத்தில் அவர் செயற்பட்ட கலை சார்ந்த செயற்பாடுகள் பற்றியும் அறிந்திருந்தேன். சாதாரணமாக இலக்கியச் செயற்பாட்டில் இளம் வயதில் நுழைகிற பெண்கள் குடும்பப் பொறுப்பு அவர்கள் மீது குவிந்த பிறகு, தம் இலக்கியப் பங்களிப்பைக் குறைத்து விடுவதையே அவதானிக்கக் கூடிய சந்தர்ப்பத்தில் தமிழ்க்கவி தனது முதிர்பருவத்திலும் தளராது செயற்பட்டுக் கொண்டிருப்பது, எனக்குள் ஆச்சரியத்தை ஏற்படுத்திய ஒன்றாகும். அதற்கு அவரது சலியாத நெஞ்சுரம் காரணமென அறிய முடிந்த போதிலும், அத்தகு முயற்சியின் விளைகனிகள் நூல்கள் ஆவதென்பதன் சாத்தியம் பற்றி அத்துறையில் ஈடுபட்டு விலகியவர்கள் நன்கு அறியக் கூடும்.

"இனி ஒருபோதும்" அண்மையில் எனக்கு வாசிக்கக் கிடைத்த தமிழ்க்கவியின் நாவலாகும். வன்னிப் பெருநிலத்தில் வாழ்ந்த குடும்பமொன்றில் இளம்பெண்ணொருத்தி எவ்வாறு காதல்வசப்படுகிறாள் என்பதுவும், அவளை சிறுவயதிலிருந்து தன் பொறுப்பிலெடுத்த அம்மம்மா, அக்காதலை அணுகும் விதமும், அவளுக்கும், அக்காதலுக்கும் காட்டுகின்ற ஆதரவும் எனப் படிப்படியாக நீளும் சம்பவங்களினூடாக அவள் காதலின் முடிவு எப்படியாகப் போகிறது எனும் ஆர்வம் வாசகனுக்குத் தொற்றிக் கொள்கிறது. கதையின் கூறுமுறையில் மூன்று கதைசொல்லிகள் அத்தியாயத்திற்கு அத்தியாயம் பிரிந்து கதை கூறினாலும் உண்மையில் கதை சொல்லியிருப்பது அம்மம்மாவாகிய தமிழ்க்கவிதான். இக்கதையை வாசிக்கும்போது பார்வதி அம்மாள் என்கின்ற அம்மம்மாவின் பாத்திரத்திற்குக் கச்சிதமாகவே பொருந்துகிறார் தமிழ்க்கவி.

ஆரம்பத்தில் பொறுப்பற்ற குடிகாரத் தந்தையிடமிருந்து சிறுவயது மீனாவைத் தன்னோடு தங்கவைத்துப் படிப்பிக்கப் போவதாகப் பார்வதி கூறுகிறபோது, "போனால் இனி ஒருநாளும் வராதே" எனும் விதமாக அனுப்பி வைக்கிறார் தந்தை. அதை ஏற்றுக் கொண்டே மீனா கிளம்புகிறாள். அவளை ஒரு பேரூந்தில் ஏற்றிப் புதுக்குடியிருப்பில் இறங்கச் சொல்லி விட்டுத் தனக்குரிய பேரூந்தில் அம்மம்மா ஏறி வருகிற போது மீனா தொலைந்து போய் விடுகிறாள். அவள் முறிகண்டியில் இறங்கிப் பின் ஏறிய பேரூந்து பள்ளமடுவிற்கு உரியதாக அவள் பள்ள மடுவில் இறங்கித் திகைத்துப் போய் விடுகிறாள். தெய்வாதீனமாக அக்காலங்களில் வன்னிப் பெரு நிலங்களில் குற்றங்கள் இல்லாமலிருந்ததால் அவளால் உரிய இடத்திற்கு வந்து சேர முடிகிறது.

இச்சந்தர்ப்பத்தில் அக்காலமும், அம்மனிதர்களும் மீள நினைவு கொள்ளப்பட வேண்டியவர்களாகவும், அத்தகைய ஒரு காலம் இருந்ததென்பதும் மனத்துயருடன் நினைவு கொள்ள வேண்டிய ஒன்றாகிறது. சிறு வயதிலிருந்து மீனாவின் பள்ளிக் காலம் வன்னியில் வாழ்ந்த அநேக பள்ளிச் சிறுமிகளைப் போலவே நகர்கிறது. படிப்பில் அவளது கவனம் குறிப்பிடத் தகுந்தபடி இல்லாவிட்டாலும், இதர விளையாட்டுச் செயற்பாடுகளில் முன் நிற்கும் அவள் ஏதோ ஒரு விதத்தில் பிறரின் கவனத்தைத் தன் மீது குவிப்பவள் ஆகிறாள். பார்வதி பாத்திரம் எப்போதும் சமூக மேம்பட்ட நிலை நோக்கி அசைவதாகவே ஒவ்வொரு நகர்விலும் சித்தரிக்கப்படுகிறது. பள்ளிச் சிறுவர்களுடைய பாடத்தில் செலுத்தும் கவனத்திலிருந்து, வாழ்க்கையை முன்னேற்றும் திட்டங்கள் வரைக்கும் அவள் தன்னையும் முன்னிறுத்தித், தான் தாங்கிக் கொண்டிருக்கும் குடும்பங்களையும் முன்நகர்த்த வழி காட்டுகிறாள். ஒரு பெண்ணாக அவள் தன் சுய காலில் நிற்பதற்கு எடுத்துக் கொள்கின்ற முயற்சி போலவே தன்னை அண்டியுள்ள பெண்களையும் அவள் முன்னேற்றப் பாடுபடுகிறாள். இயக்கம் சார்ந்த கலை வேலைகள் அவளது மன ஈடுபாட்டிற்கேற்ப அமைவதுடன் அவளது வருமானத்திற்கும் வழிகாட்டுகின்றன. நாடகமும், படப்பிடிப்புமென அவள் தனக்குக் கிடைக்கும் நேரங்களைப் பயனுடையதாக்குகிறாள். அது மட்டுமன்றி அவள் எழுதிக் கொண்டேயிருப்பவள். சமூக முன்னேற்றக்கருத்துகள், பெண் விழிப்புணர்வு நிகழ்வு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் எல்லாவற்றிலும் அவள் தனக்கென ஒரு முத்திரை பதித்தவள். அதன் அடிப்படையிலேயே அவளுக்கு இயக்கத்தில் பலரையும் தெரிந்திருக்கிறது. அவர்கள் மத்தியில் செல்வாக்கு நிறைந்தவளாய்த் திகழ்கிறாள்.

மீனாவோவெனில், அவளது பேர்த்தி. தனது அம்மம்மாவை நம்பி அவளுடன் கூட வந்தவள். அம்மம்மாவின் மீது பாசம் பொழிந்து கொண்டிருந்தாலும், அவளுக்குப் படிப்பு ஏறவில்லை. விளையாட்டில் முன் நிற்கிறாள். தையல் பயிற்சிக்குப் போகிறாள். மீனாவின் மனதில் அம்மம்மாவிற்கு மறைத்து மனதில் அரும்பிய காதலே அவளின் பிற்பாதி வாழ்க்கையை இழுத்துக் கொண்டு நகர்கிறது.

மது இந்தக் கதையில் மீனாவின் எதிர்கால சிதைவிற்கு முழுக்க, முழுக்கக் காரணமானவன். அவனை மட்டும் குற்றம் சொல்ல முடியாதெனினும், அவனது அந்தக் காதல் குறுக்கிடாதிருந்தால் மீனா தன் அம்மம்மாவின் சொல் கேட்டே நடந்திருக்கக்கூடும்.

மது ஆரம்பத்தில் குடும்பத்தை இழந்த அனாதையாக மீனாவின் வீட்டிற்கு அருகிலிருந்த கடையில் வேலைக்கு நிற்கிறான். அவனைப் பெற்றவர்கள் தமிழ்நாட்டிற்கு அகதிகளாகத் தப்பியோடிய நிலையில் அவன் தனியனாக இக்கடையில் ஒதுங்கி நிற்க வேண்டிய நிலை. அவன் முதலில் மீனா பரிசு பெறும் ஒரு புகைப் படத்தை எடுத்ததன் மூலம் அவள் மனதுள் ஒரு நிழற்படமாக விழுகிறான். பதின்மம் அவள் மனதினுள் பல வானவிற்களைப் பிரகாசிக்க வைக்கிறது. மீனா வீட்டில் அவர்கள் விளையாடுகிற "சற்றில் கொக்" அவனை இவர்களின் பார்வையாளனாக்குகிறது. மீனாவின் மாமன் மகள் அபிராமி மூலம் அவன் அடிக்கடி இந்த வீட்டோடு தொடர்பைப் பேணிக் கொள்கிறான். சுதன் அவனோடு நண்பனாக ஆனதன்பின் அவ்வீட்டோடு அவன் நெருங்கிப் போகிறான். மீனாவுடனான தனிமைப் பொழுது வாய்க்கிற போதெல்லாம் அவன் அவளது மனத்தைக் கரைக்கும் விதமாக உரையாட ஆரம்பிக்கிறான். பார்வதியைப் போன்ற மன வைராக்கியம் மீனாவுக்கு இருந்ததில்லை. பார்வதியும் கூடக் காதலுக்கு எதிரானவள் இல்லை. அந்த வீட்டுக் கல்யாணங்கள் அனைத்தும் காதல் கல்யாணங்கள் எனும் போது இவர்கள் காதலில் என்ன குறையைப் பார்வதியால் இனங்காண இயலும்? கண்டும் காணாமலும் அந்தக் காதல் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பகிரங்கமாகிறது.

சமாதான காலப் பகுதியில் ஊரில் வந்திறங்கும் மதுவின் தாய் மூலம் அந்தக் காதலின் குலைவிற்கு வழி ஏற்படுத்தப்படுகிறது. பார்வதி அம்மாள் உலக அறிவு மிக்கவள். முதல் பார்வையிலேயே சரசுவை அவள் எடை போட்டு விட்டாள். விளைவாக அந்தக் கல் யாணம் நடக்கவே நடக்காது எனும் முடிவு அவளுக்கு வந்து விடுகிறது. சீதனத்தை இலக்காக வைத்து அவள் மதுவைக் கட்டுப்படுத்துவதும், இதுவரை பிரிந்திருந்த தாய் வந்து அழுதவுடன் அவள் முன், கரைந்து விடுபவனாகவும் மது நிறம் மாற்றப்படுகிறான். தந்தை ஒரு குடிகாரராகவும், தாய் ஒரு நாடகக்காரியாகவும் இருந்தமை மதுவின் மனத்தைத் தாழ்வு மனப்பாங்கிற்குள் தள்ளுகிறது. தாங்கள் குறைந்தவர்கள் என்பதை எவ்வாறு மீனாவிடம் மறைப்பது? அறிய வந்தால் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா? என மனம் குழம்புகிறான். அது ஒன்றும் தமக்குப் பொருட்டல்ல என்று பார்வதி தெரிவித்த பின்பும் அவன் தயங்குவது அவனது மனத்தடை தாயினாலேயே ஏற்படுத்தப்பட்டது என்பதை மேலும் உறுதி செய்கிறது.

மது ஒரு தடவை "போய்ஸ்" திரைப்படப் பிரதியை வைத்திருந்தமைக்காகக் காவல்துறையால் கைது செய்யப்படுகிறான். அப்போது அவனை விடுவிப்பதற்குப் பார்வதி அம்மாளே உதவியாக இருக்கிறாள். அவனுக்காக, அவனை விரும்பும் மீனாவுக்காக பார்வதி அம்மாள் அதனைச் செய்கிறாள். நேர்மையானவளாக, எதையும் நிமிர்ந்து நின்று செய்யும் பார்வதி அம்மா அவர்களிடம் அவனை விடுவிக்குமாறு கோரும் போது கூனிக் குறுகி நிற்கிறாள். நேர்மைவாதிகள் என்றிருப் போர் குடும்பம் எனும் தளைக்குள் அகப்பட்ட பிறகு எதிர் கொள்ள நேரும் தலைகுனிவினை இச்சம்பவம் மிகவும் நேர்த்தியாகப் பதிவு செய்கிறது. இது மீனாவிற்கு வருத்தத்தையே அளிக்கிறது. எனினும் மதுவின் விடுதலையை மேவிய எந்த உணர்வும் அவளுக்கு ஒரு பொருட்டல்லவே.

இயக்கத்தினால் அக்காலப்பகுதியில் மக்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளையும், அவற்றை மீறுவோருக்கு வழங்கப்படும் தண்டனைகளையும், இயக்கத்தில் சேர்வதற்கு முன் பிள்ளைகளிடம் குழைவாக நடந்து கொள்ளும் போராளிகள், இணைக்கப்பட்ட பின்னர் அவர்களைக் கடுமையாக நடத்துவதையும் அருகிலிருந்து பார்த்த விதத்தில் மையக்கரு சிதையாத வகையில் நிகழ்த்திச் செல்கிறார் தமிழ்க்கவி.

பார்வதி அம்மாளின் குணத்தை அறிந்திருந்தாலும் சரசு கல்யாணத் திகதியை வைப்பதும் குழப்புவதுமாய் இருக்கிறாள். மது மீனா வீட்டிற்கு வருவதையே நிறுத்தி விடுகிறான். அவனை நினைத்து வெம்பி வெதும்பும் மீனா இறுதியில் கடவுளரை மட்டும் நம்பித் தன் காதலை ஒப்படைகிறாள். விரதங்களின் முடிவிலும் பலனற்றுப் போக அம்மம்மாவின் பெயருக்குத் தான் இப்படியே இருந்து இழுக்கு வர வைக்கக் கூடாதென்றெண்ணி இயக்கத்தில் இணைகிறாள். இயக்கத்தில் இணைந்த பிறகான பயிற்சியும், பயிற்சியின் முடிவில் குடும்பத்தினருடனான சந்திப்பும் அவளது வாழ்வின் பெரும் மாற்றத்தைச் சித்தரிக்கின்றன. மது குறித்த எல்லாக் கவலைகளையும் விலக்கி அவள் உண்மையான இலட்சியமிக்க போராளியாக ஆகி விட்டதை இச்சந்திப்பு வாசகனுக்கும் உணர்த்துகிறது.

கடைசி யுத்தகாலத்தில் கிபீர் விமானங்களும், கூடாரங்களும், குண்டு வெடிப்பின் புகையும் நிறைந்த வன்னியைத் தரிசிக்க முடிகிறது. அம்மம்மாவின் கூடாரத்தினை எப்படியோ வந்தடையும் மீனாவுக்கும், அவள் தோழர்களுக்கும் நீண்ட நாளைக்குப் பின், பிட்டவித்துப் பரிமாறுகிறார் பார்வதியம்மா. குடும்பத்தோடு இணைந்து தப்பித்துப் போக சந்தர்ப்பம் கிடைத்தும் வெடிகுண்டைச் சுமந்து செல்லும் சக போராளியோடு அவர்களைப் பிரிந்து போகிறாள் தமிழொளியாகிய மீனா. வெடிச்சத்தங்கள் கேட்கின்றன. யுத்தம் முடிவடைகிறது. விடுவிக்கப்பட்ட பிரதேசத்திற்கு வந்து சேரும் அவளது சக போராளி அவளும் விடுவிக்கப்பட்ட பிரதேசத்திற்கே வந்ததாகக் கூறுகிறான். ஆனால், அவள் வந்து சேரவில்லை. யுத்தம் முடிந்த போது உயிருடனிருந்த மீனா, யுத்தம் முடிந்த பின் என்னவானாள்? இனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு போதும் இந்தக் கேள்விக்கு விடையே இருக்காது என்பது எத்தனை பெரிய பாறாங்கல்லாக மனதை அழுத்துகிறது? இந்நாவலின் இறுதியில் நாம் தரிசிப்பது கடவுளாலும் கைவிடப்பட்ட பல்லாயிரக்கணக்கான இளம் குருத்துகளின் கடைசிக்கண வேதனையை. பதிலற்றுப் போன சில கேள்விகள் அக்குருத்துகளின் உறவுகளை எரிநரகில் தள்ளும் விறகுகளாகியிருப்பதற்கு பார்வதியம்மாவை விட நெருங்கிய சாட்சி யார் உளர்?

இக்கதையில் வரும் கிராமிய உரையாடல்கள், வன்னியின் வழக்காற்றுச் சொற்கள் என்பன வாசகன் மனதில் ஆற்றொழுக்காகச் சலசலத்து இறங்குகின்றன. சீதனம் பற்றிய பார்வதி அம்மாளின் கருத்து ஆண்கள் மீது நெற்றியடியாக இறங்குகிறது. சரசு பாத்திரம் ஆண் பிள்ளைகளைப் பெற்று அவர்களை ஒரு முதலீடாகப் பார்க்கின்ற தாயின் நிலையில், உணர்வற்ற சடமாக மகனைக் கருதுகின்ற அதே நேரம், மதுவோ தாய்மை என்ற சொல்லுக்குக் கட்டுப்பட்டுவிடுகின்றவனாகத், தன்னைக் கை விட்டுப் போனவளும் அவளேதான் என்பதை மறந்து விட்டவனாகத், தாயின் பசப்பு வார்த்தைகளால், அவளுக்கு நன்மை செய்ய எஞ்சி யிருப்பவன் தான் ஒருவனே எனும் மாயையில் ஆழ்ந்து, தனது செயல் தாயின் நலனுக்கானதே என்பதனை மீள, மீள மனதுக்குள் உருப்போடுபவனாய் வருகிறபோது வாசகனுக்கு அவன் மீதில் எழும் ஆத்திரம் நியாயமான தாகவே தோன்றுகிறது. அப்படி இருக்க அனுபவத்தி னால் பழுத்த பார்வதிக்கு அவன் ஒரு மோசக்காரனாகத் தோன்றுவதில் ஆச்சரியமில்லையே.

பெண்களின் பலவீனமுணர்ந்து, மகனை அனுப்பிக் காதல் செய்வித்து அவளது குடும்பத்தி னரிடம் தான் விரும்பும் அளவு சீதனத்தை வாங்கி விட்டே திருமணத்தை எழுதுவிப்பது போல ஒரு நிலையை ஏற்படுத்தி, அப்பெண் காதலித்ததால் அவளுக்குச் சமூகத்தில் மாறாத ஒரு அவப்பெயரை உண்டாக்கி, திருமணச்சந்தையில் அவள் தரத்தைக் கீழிறக்கி விலை போக மாட்டாமல் செய்து பேரம் பேசித் தன் மகனுக்கான விலையை உயர்த்தும் கீழ்மைக் குணம் கொண்ட சரசுவைப் பார்வதி சரியாகவே புரிந்து கொள் கிறாள். ஒருவேளை மீனா பார்வதியின் உணர்வுகளையே கொண்டிருந்தால், சரசுவுக்குச் சரியான பாடத்தைப் புகட்டியிருக்கக் கூடும். இப்படியும் மனிதர்கள் இருக்கக் கூடுமா எனும் திகைப்பை ஏற்படுத்தும் சரசுவை இப்படித் தான் மனிதர்கள் இருக்கிறார்கள் என முகத்தில் அறைந் தாற்போல் சொல்கிறார் தமிழ்க்கவி.

வன்னிப்போர் நிலத்தில் வீரம் செறிந்த இளம் தலைமுறையில் பலவீன மிக்க பாத்திரமாக, காதலில் வீழ்ந்து அந்தக் காதலுக்காகத் துணிச்சலாக உறவு களை எதிர்க்கும் வல்லமை தெரியாதவ னாகச் சித்தரிக்கப்படும் மது சீதனத்தை எதிர்நோக்கும் தாய்மாரின் பல்வேறு பட்ட மகன்களின் ஒரு பிரதிநிதியாகவே இங்கு இனங் காட்டப்படுகிறான். அவன் எப்போதும் ஒரு உறவின் அருகாமையை நாடுகிறான். யாருமற்ற அனாதையாக அவன் கடையிலிருந்த போது அவனுக்குச் சுதன் காட்டிய ஆதரவு, அவனது குடும்பத்தையே மதுவுக்கு நெருக்கமாக்குகிறது. அவன் நோயுற்ற வேளை தண்ணீர் கேட்டால் தேநீரையே தருகிற மீனா அவனுக் குத் தாய்மையின் அன்பைத் தான் உணர வைத்தாள் என நாவலின் பிற்பகுதி அதிர்ச்சியாக உணர வைக்கிறது. யாருமற்ற பொழுதில் அவளது அருகாமையை நாடுபவன், அவனது தாயின் அண்மை கிடைத்தவுடன் வெகு சீக்கிரத்தில் அவளை உதறி விடுகிறான். அவளை இழப்பது அவன் வரையில் பெரு வலியை அவனிடம் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. கதையின் இறுதி யிலும் அவளுக்காக அவன் பச்சாதாபப் படுவதோடு, தான் அவளுக்குச் செய்த துரோகம் குறித்துக் குன்றுகின்றானே தவிர அவள் மீதான மானசீகமான காதல் அவனை வருத்துவதாய்த் தெரியவில்லை. அவ் வகையில் அவன் பாசத்திற்கேங்கிய சராசரி கோழை ஆண் மகன் எனவே அவனை உணர்ந்து கொள்ள முடிகிறது.

மீனா பார்வதி அம்மாவின் பேர்த்தி. காதலில் அவளால் தன்னைப் பணயம் வைத்து உள்ளிறங்க முடிகிறது. அவளது ஆழுள்ளம் அவனை விரும்பிய பிறகு அவனுக்கொரு தீங்கு நடக்க அனுமதிப்பதில்லை. பார்வதி காவல்துறையில் முறைப்பாடு கொடுத்து அவளது திருமணத்தை எழுதி விட எவ்வளவோ முயல் கிறாள். “பதிவிரதை, அவனைக் காப்பற்றித் திரியுறா” என அவளைத் திட்டியும் இருக்கிறாள். எனினும் மீனா அதற்கு இணங்கவில்லை. அவள் தனக்குரிய மானம், மரியாதையை அவனுக்கும் சேர்த்தே பேணுகிறாள். அவற்றை விற்று அவனை ஒரு அடிமையாக்கித் துணை கொள்ள அவள் மனம் ஏற்பதில்லை. அவள் அவனை அவனாகவே ஏற்க விரும்புகிறாள். அதே போல அவனை வற்புறுத்தாமல் அவனாகவே வரவேண்டும் என்று விரும்புகிறாள். அவளது துரதிருஷ்டம். அவன் கடைசி வரை வரவேயில்லை.

எத்தனை எளிய ஆசைகள் நிறைந்த எளிய பெண் அவள். கேதாரகௌரி விரதத்திற்கென அவள் சேலை யைத் தெரிவு செய்யும் போதும், பார்வதி கொடுத்த பணத்தில் நகைகளை வாங்கிச் சேர்த்த போதும் எளிய ஆசைகளால் தன்னை நிரப்பிக் கொண்ட வெகுளிப் பெண் அவள். அவன் தன்னைக் கை விட மாட்டான் என்கின்ற உறுதியான எண்ணம் சரிந்த பிறகு, அவன் மீதான காதல் இறுகி, இறுகிக் கல்லான பிறகு அவள் எடுத்த முடிவிலிருந்து பின் ஒரு போதும் அவள் சரிய வில்லை. இயக்கத்திற்குப் போன பின் அவனைக் காண நேர்ந்த சந்தர்ப்பத்தில் கூட, அவள் மனதில் சிறு சலனமும் ஏற்படவில்லை. இயக்கத்தில் நுழைய முதல் இருந்த மீனா வேறு. இயக்கத் திற்குப் போன பிறகு இருந்த தமிழொளி வேறு. மீனா தமிழொளியாக, அசல் போராளி யாக மாறியபின், நிர்ப்பந்தம் காரணமாக இயக் கத்தினுள் நுழைந்தவள் போலில்லாமல் இறுதி வரை போராடுகிறாள் அவள்லட்சியமாக வரித்துக் கொண்டது கடமை ஒன்றையே. இவ்வாறாக மூன்று வேறு உணர்வுக் கொந்தளிப்புகள் வழி யாகக் காதலும், போராட் டமும் இணைந்த வாழ்க்கையொன்றை வாசகர்களுக்கு இனங் காட்டி வன்னியின் போர்ச் சிதைவு கள் தலை தூக்கும் வரலாற்றின் வீதியோரமாக நம்மை வழிநடத்திச் சென்றிருக்கிறார் தமிழ்க்கவி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலம்

■ தமிழ்க்கவி

வைத்தியசாலைக்குப் போய் விட வேண்டியது தான் இனிப் பொறுக்க முடியாது ஆ... அய்யோ... ஸ்ஸ்ப்பா...அருள் முக்கி முனகி அரைக்குண்டியி லிருந்து அந்தரித்தான்.

அவன் மனைவியால் எதுவும் பேச முடியவில்லை. மூலக் கொதியில நிக்கிறவனோட எப்பிடிப் பேசுவது. தொடர்ந்து நான்கு நாட்களாக வேலையில்லை இதே அனத்தல்தான்.

இரண்டு நாட்களுக்கு முன் கைக்காசு ஆஸ்பத்திரியில் காட்டுவதற்கு கொண்டு போனாள்.

அந்த ஊருக்குள் புதிதாக திறக்கப்பட்ட கிளினிக் "ரஜீவன் கிளினிக்." தூர எங்க போறது அவர் இந்த அந்தரப்படுறார் உதில காட்டுவம். ஓட்டோ இதில நிப் பாட்டு என்று சொல்லி அவனை இறக்கினாள். அவனுடைய இயலாமை அதை ஒப்புக் கொண்டது. அந்த டாக்டர் எப்படிப் பட்டவர் என்பது அவர்களுக்குத் தெரியாது.

அருள் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனான். மெல்லிய புன்னகையுடன், "உட்காருங்க" என்றார் அவர்.

"ஐயா இருக்கேலாது.மருந்தத் தாங்கோ நான் நிக்கிறன்" என்றான்.

"உப்பிடி அவசரப்பட்டா என்ன செய்யிறது முதல் இருங்க நான் பாத்திட்டு மருந்து தாறன்,"

"இருக்க ஏலாது டொக்டர்"

"என்ன வருத்தமெண்டாலும் சொல்லுங்க"


"டொக்டர் எனக்கு இருக்கிற இடத்தில ஏதோ கட்டியா தெரியுது... இருக்க ஏலாது... நடக்க ஏலாது... கொதிவலியாக்கிடக்கு"

அவன் பேசி முடிப்பதற்குள் அவர் மருந்தை எழுதி முடித்தார்" எழுந்து தானே இருவகை மாத்திரை களை பொட்டலம் கட்டினார். ஒரு களிம்பும் கொடுத்தார். இதைப் பூசி விடுங்க, மாத்திரையள சாப்பாட்டுக்கு முன் ஒவ்வொன்று எடுங்க "சரியாப் போகும் என்றார். அருள் தவ்வித்தவ்வி வெளியே வந்தான் அவனை கைத் தாங்கலாக பிடித்து வாகனத்தில் இருத்தினாள் மனைவி அரைச்சாய்வில் அவன் உட்கார அருகில் லேசாக ஒண்டிக்கொள்ள ஆசனம் சரியாக விருந்தது.

ஓட்டோ வீட்டை அடைந்த போது அவனுடைய சின்னப் பையன் விளையாடிக் கொண்டிருந்தான் இவனைக் கண்டதும் ஓடி மறைந்து கொண்டான். "இண்டைக்கு எப்பிடியும் சுகமாயிரும்" எண்றெண்ணிக் கொண்டே தனது அறையுள் நுழைந்து "அட்டாச் பாத்ரூமை" திறந்தான். மலங் கழிக்க வேண்டுமென்ற உந்துதலை அடக்கி னான். என்றாலும் குழாயைத்திறந்து நீரை சொரியவிட்டபோது அவனாலும் அடக்க முடியவில்லை.தரைக்குழி பாத்ரூம். உட்கார முடியவில்லை. குனிந்து நின்றபடியே லேசாக முக்க(முன், "புரீச்" செனப் பாய்ந்த மலம் சுவரில் சித்திரம் வரைந்தது. "அய்யோ... ஸ்... கடவுளே" மனைவியைக் கூப்பிட்டால்... மானக் கேடு. பல்லைக் கடித்துக் கொண்டுபக்கட்டை நிரப்பி சுவருக்கு எற்றினான்.

"சசு வருத்தம் வாறதுதான். ஒரு காச்சல் தலையிடி என்றாலே அவனை என்ன பாடு படுத்துவான். இப்ப கக்கூசுக்கு தண்ணியூத்தவும் கேக்கேலாம கவுரவம் தடுக்கிது. மனிசருக்கு எங்கயெண்டாலும் எந்த வருத்தமெண்டாலும் வரலாம். இப்படி வரக்கூடாத இடத்தில வருத்தம் வந்தா என்ன செய்யலாம்." எண்ணி எண்ணி மாய்ந்து போகிறான் அருள்.

போன சித்திரையில விறகு கொத்தப் போய் கோடாலிப் பிடி கழண்டு கால்ல கொத்திப் போட்டுது கொஞ்சம் பெரிய காயந்தான். ஆசுப்பத்திரி எண்டு போயிருந்தா ஏழு தையல் தப்பாது. அதற்குப் பயந்து முனியாண்டியப்பாவிடம் போய் பச்சிலை மருந்துதான்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கட்டினவன. அந்தாள் பச்சிலையை உள்ளங்கையில் வைத்து கசக்கி பிழிந்து சாறை காயத்தின் மேல் விட்டு அப்படியே அந்த இலையைக்கசக்கி காயத்தில் வைத்தால் அண்டபிண்டமெல்லாம் பத்தியெரியும் அய்யோ அய்யோ என்று காயக்காலைத் தூக்கிப் பிடித்த படி ஒற்றைக்காலில் நின்று "ரொக்கன்ற் ரோலே ஆடி விடுவான். அதுவும் சிலநாளில் மாறிட்டுது.

முனியாண்டியப்பா கெடு வச்சா வச்சதுதான். "தம்பீ... வெட்டுக்காயம் பதினாலுநாள் எரிகாயம் இருபத்தொருநாள். நீராவி சுட்டா காயமாற அதில கட்டு வரும். அதுக்குமேல நாள்பட்டா அது கவனயீனம். சிதம்பல்தான். பிறகு சிதல்கூட்டி ஓதாளம் வெச்சிடும். உவன் பெரியபம்பி கவனியாம விட்டதில புழுவைச் சிட்டுது தெரியுமோ...ம்...கவனம். தண்ணி படலாம். ஆனா கட்டு என்ர கையாலதான் அவுழ்க்க வேணும்."

அந்த நாளையில முனியாண்டியப்பாவுக்கு பிறகு தான் ஆசுபத்திரி. இப்ப அந்தாள் செத்தும் சிவலோகம் போட்டுது. அருள் மனதுக்குள் நொந்தான். அருள் சுவரைக்கழுவியபின் தன்னைக்கழுவ தண்ணீரை மலவாசலுக்கு எற்றினான். "ஆ... அய்யோ ஸ்ப்பா" மல வாசலில் தண்ணீர்பட உயிர் ஒடுங்கியது கைவைக்க முடியவில்லை. தண்ணீரையே ஊற்றி சுத்தம் பண்ணிவிட்டு வந்துபடுத்தான்

மிக கரிசனையோடு மூன்றாவது நேர மாத்திரை களையும் விழுங்கினான். களிம்பையும் மெதுவாக கட்டியிலேயே வைத்து பிதுக்கிவிட்டான்.

"நாகம்மா! என்ன இஞ்சாலுப்பக்கம்."

"உவன் அருளுக்கேதோ சுகமில்லையாம். பாத்திட்டு வருவமெண்டு போறன்."

"ஆமோ என்னவாம்"

"என்ன கோதாரியோ ...அவன் ஆரிட்டயும் காட்டினாயெல்லோ கட்டெண்டான் மூலமெண்டான் ஓண்டுமா விளங்கேல்ல"

"முனியாண்டியப்பாட சின்னப்பிள்ளையக்கா மருந்து செய்யிறாதானே காட்டிப்பாக்கலாமே"

"எங்கயக்கா கைக்காசு கட்டி மருந்தெடுத்ததாம். ஆர் உவர் நஜீவனிட்ட ம்... அந்தாள் வருத்தத்தை பாராமலே மருந்தெழுதும். அஞ்நூறு ரூவாக் குடுத்த தாம் சரிவரயில்ல"

வெளியே தெருவில் நடக்கும் உரையாடல் அருளுக்கும் கேட்டது. "அந்தாள் பாராமத்தான் மருந் தெழுதினது அதுதான் கொஞ்சமும் வலி குறையேல்ல" கண்களை மூடி தவளைப்பாச்சலில் கிடந்தவாறே இந்தக் கதைகளையெல்லாங் கேட்டுக் கொண்டிருக்க எரிச்சலாக இருந்தது.

"அப்பூ...அருள் என்னைய்யா செய்யிது?" என்றவாறே உள்ளே வந்தாள் நாகம்மா. அவனுடைய மாமி அருளுடைய தாய் அவன் குழந்தையாக இருக்கும் போதே இறந்து போனாள். நாகம்மாதான் அவனை சீராட்டி வளர்த்தவள். அந்த பாசம் மதிப்பு எல்லாம் அருளுக்குண்டு.

அருள் முக்கி முனகி திரும்பினான். கடைக் கண்ணில் நீர் வருமளவுக்கு வலியிருந்தது.

"பொறு பொறு ஏலாட்டி ஏன் திரும்பிறாய்" நாகம்மா துடித்துப் போனாள். "என்னவாம் டாக்குத்தர்"

"அவனெங்க பாக்கக்கூட இல்ல மருந்து தாறான்". அருளுக்கு பூமி இருளுவது போல இருந்தது.

"மெய்யேப்பு சின்னப்பிள்ளையக்காவிட்ட காட்டுவமே"

"அவா மருந்து செய்வாவே"

"ஏன் தேப்பன் இருக்கயுக்கயே அவாதானே மூலிகை பிடுங்கிறது மருந்தரைக்கிறதெல்லாம் பாப் பாத்திக்கு உண்ணாக்கு பாத்து விட்டதெல்லாம் மனிசி தானே."

"வேண்டாம் மாமி ஆசுபத்திரிக்குப் போவம். ஏறிக்கொள்ள மாட்டன். உவன் பவாவின்ர ஆட்டோ வுக்கு சொல்லி விடுங்கோ"

நாகம்மா எதுவும் தோன்றாதவளாய் ஆட்டோக் காரப் பெடியனுக்கு தொலைபேசினாள்.

"மாமி நீங்களும் வாங்கோ எனக்கு தலை சுத்துற மாதிரி கிடக்கு."

"ஆட்டோ படலைக்க வந்திட்டுது சுமதி குரல் கொடுத்தாள். அருளுக்கு வருத்தாம் வந்த இந்த ஒரு கிழமையா அவள்தான் ஓடுங்கிப் போனாள். வாயைத் திறந்தாலே சீறி விழுந்தான் நேற்று சாப்பாடு கொடுக்கப் போன போது பாய்ந்தானே ஒரு பாய்ச்சல் அடி விழாத குறைதான்.

"நானென்னப்பா செய்யிறது காலமையும் நீங்கள் சாப்பிடேல்ல"

அவன் பற்களை நறநறவெனக் கடித்தான். அவளைக் கொல்லப் போவதைப் போல பார்த்தான்.

"சாப்பாடு...? மனிசர் படுற பாட்டுக்க உனக்கு வேளாவேளைக்கு அவிச்சுத் திண்டாச்சரி"

"நான் எனக்கே அவிக்கிறன் ...பிள்ளையளப்பா"

"பொத்திக்கொண்டுபோ அங்காலஸ்ஸ்ஸ்ப்பா"

ஆட்டோ புறப்படும் சத்தம் கேட்டபிறகுதான் சுமதிக்கு உயிர் வந்தது.

"பாவம் வருத்தத்திலதான் பாயுறார் வருத்தம் அப்பிடி என்ன செய்யிறது" தனக்குள் முணுமுணுத்த வாறே திரும்பினாள்.

ஆட்டோ வைத்தியசாலையை அடைந்ததும் "தம்பீ நடக்கேலாட்டி வீல்செயார எடுப்பம்" என்றாள் நாகம்மா.

"ஸ்ஸஸப்பா....ச்சசங்க்... வேண்டாம் இருக்கேலாது மாமி மெள்ள நடப்பம்."

மெதுவாக வெளிநோயாளர் பகுதி டொக்டரை நெருங்கிவிட்டான். இதற்குள் வலியில் வேர்த்துவிட்டது அவனுக்கு.

வோட்டில் நிற்கும்படி டிக்கட் போட்டார் அவர்.

"பின்ன சொல்லுறாய், வாட்டில நிக்கிற அளவுக்கு பெரிய வருத்தந்தானே" நாகம்மா தேவையான பொருட் களை வாங்கிக் கொடுத்துவிட்டு வந்த ஆட்டோவில் திரும்பினாள்.

சுமதி மத்தியான சாப்பாட்டையுங் கட்டிக் கொண்டு பிள்ளைகளை மாமியாரின் பொறுப்பில் விட்டுவிட்டு புறப் பட்டாள். வைத்தியசாலையில் அருள் விழிகள் சொருக சரிந்து படுத்திருந்தான். இதுவரை ஈசிஜீ. மூத்திரம் இரத்தம் எல்லாம் எடுத்தாச்சு இன்னும் கட்டியமட்டும் ஒருவரும் பாக்கேல்ல."என்றான் முனகலாக.

தாதியர் இருவர் ஒருவர் பின் ஒருவராக வந்து அவனது பெயர் விலாசம் முழுப்பெயர் எல்லாம் எழுதினார்கள். அதன்பின் ஒரு டாக்டர் வந்தார். அவன் கட்டி இருக்குமிடத்தை தொட்டுக் காட்டினான். அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிலைச்சுற்றி மறைப்பிடப் பட்டது.அவனை சரிந்து படுக்கப்பணித்தார். சாரத்தை தூக்கச் சொன்னார். அவன் கூச்சப்படாமல் தூக்கினான். இன்னொரு டாக்டர் உள்ளே வந்து குறிப்பெடுத்தார். இருவரும் போன பின் ஒரு பெரிய டொக்டர் வந்தார். அவரும் கட்டியை பார்வை யிட்டபின் முன்னர் வந்து குறிப்பெடுத்தவர்களை அழைத்து அவர்களது குறிப்பை கவனமாக பார்த்தார். அதில் ஏதோ எழுதினார் பின்னர் அவர்களுடன் ஏதோ பேசினார். மேலும் இருவர் அங்கு விரைந்து வந்தனர் அவர்களுக்கும் ஏதோ கூறிய இவர் இந்தக்கட்டியை காட்டி ஏதோ விளக்கினார். பின்னர் அடுத்த கட்டிலுக்கு நகர்ந்தார். புதிதாக வந்தவர்கள் இவனிடம் தமது விசாரணையை ஆரம்பித்தனர்

"எப்பயிருந்து வலிக்குது?...முதல் எப்பவாவது இப்படி வலி வந்ததா?..."

ஐந்து டொக்டர்கள் பார்த்த நிலையில் அருள் தனக்கு வந்திருப்பது புற்று நோயோ என்ற அச்சத்திற் குள்ளானான். பயம் அவன் வலியை விடப் பெரிதானது.

இந்த நிலையில் வந்த சுமதி பேயறைந்ததுபோல் கிடந்த தன் கணவனைக்கண்டு ஒரேயடியாகக் கலவரப் பட்டாள்.

" என்னவாமப்பா ஏதும் மருந்து தந்தவங்களே?"

"மருந்தோ" அப்போதுதான் தனக்கு இன்னும் மருந்துகள் எதுவும் தரவில்லை என்பது நினைவுக்கு வந்தது.

"இல்லையப்பா என அவன் சொல்லி முடிக்க,

"ஹாஹா. பேத் கண்டஎண்ட்" என்ற குரல் கேட்டது "ம்...மருந்து எடுக்க வாங்க" தமிழிலும் ஒருத்தி அழைத்தாள்.அருளின் பெயர் கூப்பிடப்பட்டபோது சுமதி போய் மருந்தை வாங்கிவந்தாள். அதை கையில் வாங்கிய அருள் "பேந்தென்னப்பா உதைத்தானே ரறீவன் டொக்டரும் தந்தவர்" என்றவாறே அதை விழுங்கி வைத்தான்.

தொடர்ந்தும் நாற்பத்தெட்டு மணி நேரமாக அவன் சாரத்தை அடிக்கடி தூக்கி விட்டான். மேலும் மேலும் வைத்தியர்கள் குறிப்பெடுத்துக் கொண்டனர். கட்டி மட்டுமல்ல வலியும் அப்படியே இருந்தது.

மூன்றாம் நாள் காலையில் வந்த பெரிய டொக்டரிடம் அருள் துணிந்து கேட்டான்.

"ஏதும் பிரச்சனையோ சேர்"

"ச்சீச்சீச்சீ நீர் ஏன் பயப்படுறீர். இது நோமலா வாறதுதான்"

" அப்ப கன டொக்டர்மார்வந்து...."

"ச்சீச்சீசீ அவை படிக்கிற டொக்டர்மார் வாற நோயளையும் தன்மையளையும் பார்த்து பழக வருகினம். இது போதனா வைத்தியசாலைதானே" அவர் அடுத்த கட்டிலுக்கு நகர்ந்தார்.

ஐயா எனக்கிப்ப சுகம் நான் வீட்ட போகட்டே..? அருளை திரும்பிப் பார்த்த டொக்டர் அவனுடைய டிக்கற்றை வாங்கி ஏதோ எழுதிவிட்டு தாதியிடம் கொடுத்தார்.

அருள் சற்றும் அருளாமல் வீட்டுக்கு வந்து விட் டான். "நான் பேயன்... வலியில துடிக்க அவர் என்னை வச்சு வகுப்பெடுக்கிறார்..." பொருமியவாறே வலியில் நெளிந்தான்.

"வாங்கக்கா ஒருக்கா வந்து பாருங்க" சின்னப் பிள்ளையக்காவை கூட்டிவந்தாள் நாகம்மா.

"அப்பூ அருள்... ஒருக்கா அக்காவிட்ட காட்டு மேனை... அப்பூ! வைரவா! நீதான் எல்லாத்திக்கும்" நாகம்மா குலதெய்வத்தை துணைக்கழைத்தாள்.

"வாங்கக்கா..."

அருள் குப்புறக்கிடந்தான். "எத்தினை பேருக்கு காட்டியாச்சு இனியென்ன"

சாரத்தை நீக்கிப் பார்த்த சின்னப்பிள்ளையக்கா சண்டியிலையை ஆய்ந்து வந்து அதில் விளக்கெண் ணையை தளும்பப் பூசினா...அப்படியே மலவாசலில் வைத்து தன் ஆட்காட்டி விரலால் லேசாக வருடிவிட, அருள் ரெண்டு தரம் துள்ள மூலம் உள்ளே சென்று பதுங்கியது.

கண்கள் இருண்டு சொருக பெரும்பாரம் நீங்கியது போல அருள் பெருமூச்சு விட்டான். "அப்பாடா... எத்தினை நாள் கஸ்டப்பட்டன் இது தெரியாமப்போச்சே" என்ற அருளிடம் சின்னப்பிள்ளையக்கா சொன்னாள்.

"தம்பி இது தற்காலிகந்தான் திரும்ப வரும். நாப்பத் தெட்டுநாள் பத்தியத்தோட மருந்து தின்ன வேணும். பிறகும் சில பொருளுகள சாப்பாட்டில தள்ளி வைக்க வேணும். ஆனா ஆசுப்பத்திரியில இப்ப இதை அறுவைச் சிகிச்சை செய்து அகற்றுகினம். ரொம்ப சுலபம். பெரிய ஒப்ரேசனில்ல . செய்துகொள். இப்போதைக்கு திரும்ப வந்தா இப்பிடி செய் தற்காலிகமா சுகப்படும் அப்ப வரட்டே..."

"இரக்கா தேத்தண்ணியூத்திறன் குடிச்சிட்டுப் போ"

---

## சோகம்

வன்னிக்கு வந்த வாழ்மானம் பெரிதெனினும்
சென்னிமேல் கைதூக்கி நாம்போற்ற முன்னின்ற
வீரமறவர்களின் விடுதலைப்போர் வரலாறு
ஈரமற்றுப் போகாதென்றுணர்.

கார்காலம் பொய்க்குமோ கடல் வற்றிப்போகுமோ
நேர்நின்றவீரம் நிழலற்றுப் போகுமோ- சீர் கொண்டு
வாழ்த்தினோர் வாழ்த்தி வாய்க்கரிசி போட்டோர்
ஆழ்மனதின் கனவாம் அது

பண்டார வன்னியனும் படைநடத்தி சென்ற உயர்
கொண்டாளும் வீரவன்னி மண்மீது வண்டாரும்
கூந்தல் மடமாதர் கூடிநின்று தேரிழுத்த
வெந்தணலால் வெந்த பெரும்காடு.

கட்டப் பொம்மனும் காரிகை ஜான்சியும்
துட்டர்களால் அழிந்து துவம்சமாய்போனாலும் - எட்டநின்று
இன்றுவரை மாவீரம் இவ்வுலகம் பேசுவது
குன்றா உறுதியினாலன்றோ..

வெற்றியின்றேல் வீர மரணமென சாற்றியோர்
பற்றினை விட்டு உயிர் துச்சமென நின்றதனால்- சுற்றிநின்ற
சொந்தமக்கள் படுமதுயரம் சூழ்வினையால் என்பார்
எந்தவகை என்றறியார் மூடர்.

கடலில் ஒருதுளிநீர் கரையொதுங்கும் சடலத்தின்
உடலம் கண்டதில்லை காண்- விண்டுரைக்கின்
கரைசேரும் சடலத்தின் காரணத்தில் அதற்கும்
திரைகடலின் துளியதனால் பங்கு.

- தமிழ்க்கவி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்



தமிழ்க்கவி அவர்களை தெரியாத ஈழத்து வாசகர்கள் இருக்க முடியாது எனலாம். வீரமான பெண்ணாக திகழ்பவர். ஈழப் போராட்டத்தில் பங்கு பற்றியவர். போராட்ட காலம் தொடக்கம் தற்போது வரை தொடர்ந்து எழுத்து செயற்பாட்டில் ஈடுபட்டு வருபவர். தமயந்தி என்னும் இயற்பெயரை உடைய தமிழ்க்கவி அவர்கள் சிறுகதை, நாவல், கவிதை என இலக்கியத் தளங்களில் தன் கால்களை ஆழப்பதித்தவர்.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

## தமிழ்க்கவி
## சந்திப்பு :பரணீ

**பரணீ:**
பிறந்த இடம், பெற்றோர், கல்வி கற்ற பாடசாலை பற்றி அறிய விரும்புகின்றோம்

**தமிழ்க்கவி:**
வவுனியா சின்னப்புதுக்குளம் என்னும் கிராமத்தில் (இப்போது நகரம்) வீட்டில் பிறந்தேன் 1947.7.19ம் திகதி பிறந்தேன். தந்தை கந்தப்பு தாயார் லட்சுமி. இரண்டாவது மகள். குடும்பத்தில் மொத்தம் பதினொரு பிள்ளைகள். பதினோராவது மகன் என் தம்பி தலை மன்னாரில் வசிக்கிறான். அரிவரி தொடக்கம் எட்டாம் வகுப்பு வரை சீசீ பாடசாலையிலும் அதன்பின் உயர் வகுப்பை றம்பைக்குளம் மகளிர் வித்தியாலயத்திலும் (அப் போது அது றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை) படித்தேன்.

**பரணீ:**
சிறு பராய கிராம வாழ்க்கை.

**தமிழ்க்கவி:**
மிக ஆனந்தமான வாழ்க்கை அந்த வாழ்க்கையின் சிறு பகுதியே "காடுலாவு காதை" நாவலாக வெளி வரக்காத்திருக்கிறது அது தொடராக நடு சஞ்சிகையில் வந்தது. அப்போது வவுனியா நகரத்திலேயே காடுகள் மண்டியிருந்தன. கண்டி வீதியிலுள்ள பஸ்தரிப்புநிலையம், நகர சபையை அடுத்து தெற்கே பரந்திருக்கும் இடம் றெயில்வே வரைக்கும் கச்சேரியின் பின்புறம் அனைத்தும் பெரும் முதிரங்காடு. வவுனியா வைத்தியசாலையில் பன்னிரண்டு கட்டில்களுடன் ஆண்கள் வாட்டும். எட்டுக்கட்டில்களுடன் பெண்கள் வாட்டும் அதேயளவு கட்டில்களுடன் பிரசவ வாட்டும் இருந்தது. ஒரு வைத்தியர் ஒரு ஓடலி. கோவில்களில் பிராமணர் பூசை செய்யும் கோயில்கள் குடியிருப்பு பிள்ளையார் கந்தசுவாமி கோவில் புளியங்குளம் வைரவர் கோவில் ஒரே ஐயர் ஓடியோடி பூசை செய்வார் அவரது விரைவு கருதி அவரை எஞ்சின்ஐயர் என்பர். அந்தச்சூழலில் நாமே ஒரு மைல் நடந்து பாடசாலைக்கு வந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு நேரப் பாடசாலையில் படித்ததால் மத்தியான இடைவேளையில் நகரச் சூழலை அளந்து திரியவும், பின்னேரங்களில் சேனைப்பிலவிலிருந்து எமது பெற்றோர் வரும் வரை கிராமத்து அயலவருடனும் தோழர்களுடனும் காடேறியாய் அலைவோம். ஐந்து மணிக்கெல்லாம் கணித வாய்பாட்டையோ அல்லது நல்வழி மூதுரை செய்யுள்களையோ அல்லது ஆசிரியர் டிக்டேசனுக்காக தந்த சொற்களையோ உருப் போட்டுக் கொண்டே மேச்சற்றரவையிலிருந்து பட்டிக்கு மாடு சாய்க்கப் போவோம், மாலை ஊரவர்களுக்காக தந்தை கதை வாசிப்பார் அதை கேட்போம். வீட்டு வேலை எதிலும் நான் பங்கு கொள்ள மாட்டேன் தந்தை செல்லம். அம்மா நோயாளி ஆகையால் அப்பாதான் குளிப்பாட்டவோ உணவூட்டவோ தூங்கவைக்கவோ செய்து வந்தார். வளர்ந்த பிறகும் நான் தந்தை செல்லம் தான் என்பது மட்டுமல்ல இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு அவர் சாகும் வரை நான் அவர் பேச்சை மீறியதில்லை. வேறு யார் பேச்சையும் கேட்டதுமில்லை. என்னை அச்சம் தவிர், ஏன் என்று கேள், நிமிர்ந்து நில், பெண் என்பதற்காக குனிந்து கொள்ளாதே என்று சொல்லி வளர்த்தவர். காற்றிலே பறந்து வரும் ஒரு கடதாசியும் உன் காலில் பட்டால் எடுத்து வாசி அதில் உனக்கு தேவையான தகவல் ஏதும் வரலாம். வாசி வாசியென்று அவர் தந்த பாடம் இன்று என்னை உயர்த்தி யுள்ளது. அவரோடு நான் அளந்த காடுகளும் அனுபவங் களும் என் இளமைக்காலத்தை பசுஞ்சோலையாகவே வைத்துள்ளது. என்று சொல்வது மிகையல்ல.

**பரணீ:**

**தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்த காரணம்.**

**தமிழ்க்கவி:**

பிள்ளைகள் எந்த இயக்கத்துக்கும் போய்விடக்கூடாது என்பதற்காக முதல் மகனை அவனது பத்தொன்பதா வது வயதிலேயே திருமணம் செய்ய அனுமதித்தேன். இரண்டாவது மகனை இந்தியப்படையின் துணையுடன் ஆள் பிடித்தவர்கள் பலவந்தமாக பயிற்சி கொடுக்க கொண்டு போனார்கள். அவனை மீட்க நான் அலைந்த போது அவனும் சில நண்பர்களுடன் தப்பிவிட்டான் என்ற செய்தி கிடைத்தது. மற்றவனை இன்னொரு இயக்கம் பிடித்துவிட்டது. அவன் அப்போது ஓயெல் படித்துக் கொண்டிருந்தான். அவனை விட்டு விடுவோம் என்று அவர்கள் சொன்னாலும் அது சாத்தியமில்லை என அவனே நினைத்து வேறு சில இளைஞர்களுடன் காட்டுக்குள் ஓடித்தப்பித்தான் அவர்கள் பலநாள் வனத் தில் அலைந்து பசியும் பட்டினியுமாக கிராமத்தவர் களால் மீட்கப்பட்டு வந்து சேர்ந்தார்கள்.

ஆச்சா..இப்போது நிலை மாறியது விடுதலைப் புலிகள் நகரத்துக்குள் வந்து விட்டனர். மாற்று இயக்கங் களால் பிடித்து செல்லப்பட்டவர்களை தேடியழித்தனர். நீங்களாக சரணடைந்தால் பொது மன்னிப்பு என்றும் ஒலி பெருக்கியில் அறிவித்தனர். அந்த வரையறைக்குள் என்னிடம் இரண்டு மகன்களும் வந்துவிட்டாலும் என்னுடன் இருந்தது ஒருவனே திடீரென வீட்டில் புகுந்த விடுதலைப்புலிகள் அவனை தமது வாகனத்தில் ஏற்றிக் கொண்டு சென்றார்கள் ஆனால் என்னை தம்மை தொடர்ந்து வரும்படி சொன்னார்கள். நான் போனபோது எமது கிராமங்களே அங்கு குவிந்திருந்தது ஒவ்வொரு வீட்டிலும் பிள்ளைகளை கொண்டு வந்திருந்தார்கள். ஒருவகையில் நான் பேசி என் மகனை வீட்டுக்கு கொண்டு வந்தேன்.

இலங்கை அரசுடனான உறவு முறிந்து புலிகள் போரை ஆரம்பித்தபோது நான் பிள்ளைகளுடன் ஏனைய இயக்கங்கள் வாழும் பகுதிக்குள் வாழ முடியவில்லை எனவே நாங்கள் முழுமையாக வீட்டிலிருந்து வெளி யேறி புலிகள் வாழும் காட்டுக்குள் வந்தோம். அதற்கு முன்பே நான் வி.புலிகளின் மாதர் மாநாட்டுக்கு அவர் களால் அழைத்து செல்லப்பட்டேன் அங்கே நான்கு தினங்கள் தங்கி மாநாட்டில் கலந்து கொண்டுபின்னர் தலைவர் வே .பிரபாகரனை சந்தித்து உரையாடவும் கிடைத்தது. என்னுடன் மொத்தம் இருபது பெண்கள் சென்றிருந்தோம் அவரே எங்களை தம்முடன் இணையும்படி கேட்டார் எனினும் நான் மறுத்து விட்டேன். மாத்தையா தலைவரை சுட்டுவிட்டார் என்ற செய்தி உலவிய நேரம் அவரை முழுமையாக அருகில் வைத்து பார்த்து பேசியதை நான் பெருமையாக நினைத் தேன். அந்த போராளிப் பெண்களிடையே இருந்த பிணைப்பு என்னை அவாக்கொள்ள வைத்தது. ஆயினும் நான் மறுத்து விட்டேன் அவர்களது எல்லைக்குள் வந்த பின் திட்டமிட்டே உங்களை நாங்கள் எம்மிடம் இணைத்தோம் என்று லெப்.கேணல் நளாயினி சொன்னபோது எனக்கு மகிழ்ச்சியாகத்தான் இருந்தது. அது தனிக்கதை.

**பரணீ:**

**கல்வியை தொடராது விட்ட காரணம்.**

**தமிழ்க்கவி:**

1958ம் ஆண்டு இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எமது வீட்டிற்கு அருகே இருந்த நெற் களஞ்சியத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர் அவர் களது துயரக்கதைகளை அறிந்திருந்தோம். அடுத்து சத்தியாக்கிரகப்போர் அது முடிவதற்குள் இராணுவம் நிலை கொண்டது. மேலும் பாடசாலைகளை அர சாங்கம் பொறுப்பேற்றது இதனை எதிர்த்து எமது பாட சாலையில் பெற்றோர் புகுந்து அங்கேயே வாழும் ஒரு போராட்டத்தை நடத்தினார்கள் இதனால் பாடசாலை கள் நடைபெறவில்லை. எல்லாவற்றிலும் இராணுவ தலையீடு வரும் என்றறிந்த போது என் வீட்டில் நாம், நானும் அக்காவும் பாடசாலைக்கு செல்வதை நிறுத்த வேண்டியதாயிற்று மேலும் எமது வீட்டில் நாங்கள் படித்தே ஆக வேண்டும் என்று யாரும் வற்புறுத்த வில்லை சொல்லப்போனால் நான் ஐந்தாம் வகுப்புடன் நின்று விட்டேன் சேனைக்கு குரங்குக்காவலுக்கு. அப்பா அனுப்பினார். அந்த வருடத்தில் ஐந்தாம் வகுப்பு அரசாங்க பரீட்சையில் நான் முதல் மாணவியாக தேறியிருந்தேன் அதற்கான விருது பாடசாலைக்கு வந்தபோது தலைமை ஆசிரியர் என்னை தேட, நான் பாடசாலைவிட்டு நிறுத்தப்பட்ட செய்தி கிடைத்தது. அதன்பின் அவர் எமது கிராமத்தை சேர்ந்த ஆசிரியரை அனுப்பி என் தந்தையை அதட்டி என்னை பாட சாலைக்கு அழைத்துச் சென்றார். அப்படியே படித்தா


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

லும் இராணுவ நடமாட்டம் என் கல்வியை இடைநிறுத்த வைத்தது. பத்தாம்பசலிப் பெற்றோர் என்ன செய்வது.

**பரணீ:**

**புலிகளுடன் இணையும் போது வயது அவர்கள் ஏற்றுக் கொண்டார்களா? என்ன வாயிற்று?**

**தமிழ்க்கவி:**

நாற்பது வயதில் இணைந்தேன் ஆயினும் அப்போது பயிற்சி எடுக்கும் எண்ணம் இல்லை. ஆயினும் பயிற்சி இல்லாத பிள்ளைகளும் அங்கிருந்தார்கள் காரணம் ஆனையிறவுச்சமர் முடிந்து சிலமாதங்களாக பயிற்சிகள் தொடங்கவில்லை அந்தக்காலத்தில் சேர்ந்தவர்கள் பயிற்சி இல்லாமலே அரசியல் வேலைகளை செய்து வந்தார்கள். பழைய போராளிகள் அவர்களை கொஞ்சம் குறைவாகவே மதித்தார்கள் எனவே அவர்கள் பயிற்சிக்கு போகவே விரும்பினார்கள் தமிழினியும் அவர்களில் ஒருத்திதான். முதற்கட்டமாக பயிற்சி தொடங்கும்போது கொஞ்சப்பிள்ளைகள் போனார்கள். அதற்கும் அடுத்த அணியில் நானும் இணைந்து கொண்டேன். அதேதான் ஏழு மாதங்கள் முழுமையான பயிற்சி பெற்று நான் வந்த பிறகும் எனக்கான பணி எதுவும் ஒதுக்கப்படவில்லை. அவர்களது பிரச்சனைகளால் ஒரு ஆலோசனைக்காக என்னை பயன்படுத்தினார்கள். அவ்வளவுதான் ஆனால் ஆண் போராளிகளுடன் எனக்கு பணியாற்றக் கிடைத்த போது (அது தற்செயல்தான்) பெரும் வரவேற்பும் மதிப்பும் கிடைத்தது. அதன்பின் எனக்கு ஒரு திறமான நூலகத்தில் சிப்பந்தியாக கிடைத்தது என்றாலும் அவர்களது பார்வையில் நான் வன்னிக்காடு. அது எனக்கு பெரிய வாய்ப்பாக அமைந்தது. நாளாந்தம் படித்தேன்" படித்தேன் படித்தேன். காலையிலிருந்து இரவு படுக்கும்வரை படித்தேன் காலை மாலை நான் தியானம் செய்யும் நேரம் தவிர மற்ற நேரமெல்லாம் படித்தேன். தமிழ் புத்தகங்களை ஒதுக்கி ஆங்கில நாவல்களை திக்கித்திணறி வாசிக்க வாசிக்க அதன் சுவை என்னை பாடாய்ப் படுத்தியது. எத்தனை நாடுகள் எத்தனை கொள்கைகள், எத்தனைவிதமான எழுத்தாளர்கள். மொழிபெயர்ப்பு நாவல்களோ மிக அதிகம். எனக்கு இப்போது வேலை இல்லை என்பதே பிரச்சனையற்றதாயிற்று இந்த புத்தகக் கடலுள் முத்தெடுக்க ஆர்த்தி, அடேல் ஆன் போன்றோர் உதவினார்கள். உண்மையில் நான் முன்னர் இருந்தது காடுதான் வன்னிக்காடு இது புத்தகக்காடு. படிக்கபடிக்க எனது பேச்சாற்றலும் மெருகேறியது.

**பரணீ:**

**பணியாற்றிய துறை....**

**தமிழ்க்கவி:**

முன்னர் குறித்த ஆண் போராளிகளுடன் வேலை செய்த போது அறிமுகமான ஒருவர் அந்த வேலை முடிய புலிகளின் குரல் வானொலியில் பதில் பொறுப்பாளராக வந்திருந்தார். நான் வீதியில் போகும் போது என்னைக் கண்டவர் தமது நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். நீங்கள் பேசும் போது கவனித்தேன் உங்களால் எழுதவும் முடியும் வானொலிக்கு ஏதாவது எழுதுங்களேன் என்றார். நானும் மாதிரிக்காக ஒரு பிரதி கேட்டேன்" "குயிலோசை" என்கிற நாட்டார் கலை நிகழ்ச்சிப்பிரதி கிடைத்தது. அதை வாசித்து பார்த்தபின், கற்பனை கலக்காத நாட்டார்பாடல்களுடன் ஒரு பிரதியை கொடுத்தேன் அதன்பின் ஒரு சிறுகதையும் கொடுத்தேன். பாடல்களை நானே பாடியும் கொடுத்தேன். இரண்டும் பாராட்டப்பட்டது பின் தொடர்ந்து குயிலோசைக்கு எழுதினேன் இடையிடையே சிறுகதையும் . அதுவரை நான் எழுதியதையெல்லாம் ஒரு உரப்பையில் சேர்த்து வைத்து அது நிரம்பியதும் கொழுத்தி விடுவேன் .ஆனால் இதன்பிறகு எழுதுவதெல்லாம் ஒலிபரப்பாகத் தொடங்கியது. அதற்காகவும் படித்தேன். ஊடகங்கள் என்னை மெல்லமெல்ல இழுத்துக் கொண்டது. பிரச்சாரப் பேச்சிலும் படிப்பிலும் நேரம் கரைந்தது.

**பரணீ:**

**சமர்களில் பங்கு கொண்டீர்களா?**

**தமிழ்க்கவி:**

இல்லை

**பரணீ:**

**பிள்ளைகள் பற்றி**

**தமிழ்க்கவி:**

என்பிள்ளைகளும் அமைப்பில்தான் இருந்தார்கள் ஒருவன் வீரச்சாவு. இன்னொருவன் விடுதலைப்புலிகளில் இணைந்தவன் அவனையும் இழந்தேன். திருமணமாகி வாழ்ந்தவன் நோயில் மாண்டான். ஒருவன் வெளிநாடொன்றில் குடும்பத்துடன் வாழ்கிறான்.

பெண்மகள்கள் இங்கேயே திருமணமாகி பேரன் பேத்திகளுடன் வாழ்கிறார்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணி:

வெளிவந்த படைப்புகள் நூல்கள்

தமிழ்க்கவி:

இனி வானம் வெளிச்சிரும், இருள் இனிவிலகும், இனி ஒரு போதும், ஊழிக்காலம், ஆகிய நாவல்கள். நரையன் சிறுகதைத் தொகுதி. இவை தவிர மலைகள், ஆம்பல். நடு, ஆக்காட்டி, ஈழமுரசு, எதிரொலி உலகத்தமிழர், எரிமலை, போன்ற வெளிநாட்டுப்பத்திரிகைகளிலும் சுதந்திரப்பறவைகள், வெளிச்சம் நாற்று ஆகிய இயக்க பத்திரிகை களிலும் வீரகேசரி, தினக்குரல், தினகரன், தமிழர் பொருண்மியம், தீம்புனல், ஜீவநதி, காலைக்கதிர், உள்ளம் போன்ற வெளியீடுகளில் சிலவற்றில் பத்தியும் அவ்வப்போது சிலவற்றிலும் எழுதிவருகிறேன். குறும்படங்கள் சிலவற்றிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பிலும் கடமையாற்றியுள்ளேன் சில நிறுவனங்களுக்காக யூ ரியூப் நிகழ்ச்சிகளையும் செய் திருக்கிறேன். ஆறாவது நிலம் படத்திலும் நடித்துள்ளேன்.



பரணி:

ஏன்?எழுத்துக்களூடாக பயணிக்க வேண்டும் என நினைத்தீர்கள்.

தமிழ்க்கவி:

அது ஒரு விபத்து. எனது முதல் நாவல் என் வாழ்க்கைப்பாதையை எழுதி வைப்பதற்காகத்தான் எனக்கு கிடைத்தது. எழுத்தை நான் வெறுத்தேன் அல்லது சலித்தேன் . காலம் கனிந்து வெளிவந்த நாவல் அகில இலங்கையின் அனைத்துப்பரிசில்களையும் வென்றது. எனது வாழ்க்கை அனுபவங்களுக்கு பெரும் வரவேற்பு இருந்ததை அப்போது அறிந்தேன் எழுத்து மிக சுயமாக என்னை வழிநடத்த ஆரம்பித்தது தொடங்கினேன் என்னையறியாமலே அது எழுத எழுத வாசிக்கவிரும்பிய என் தோழிகளால் ஊக்குவிக்கப்பட்டு நீண்ட கதையாக முடிந்தது.. முன்னர் குறித்ததுபோல புலிகளின் குரல் வானொலிக்காக நான் எழுதியதைவிட இது மாறுபட்டதாக இருந்தது.. அதையும் வழமைபோல கட்டிப் பரணில் போட்டேன். உணர்ச்சிகரமான எனது பிரச்சாரப் பேச்சுக்களே பெரும்பாலும் ரசிகர்களை எனக்கு உருவாக்கியிருந்தது. இப்போது எமது பத்திரிகை கள் சஞ்சிகைகள் எல்லாம் புல்ஸ்காப் தாள் எனப்படும் கோட்டுப் பேப்பரிலேயே வந்து கொண்டிருந்தது. பொருளாதாரத்தடை. எனவே எனது புத்தகம் தலை வருக்கு அனுப்பப்பட்டு அவருடைய அனுமதியைப் பெற்றாலும் ஏழு வருடங்கள் கிடப்பில் போடப்பட்டு இரண்டு பாரிய இடப்பெயர்வுகளில் முழுப்பிரதியும் தொலைந்தும் போயிற்று. தலைவருக்கு அனுப்பிய பிரதி மட்டுமே எனக்கு கிடைத்து அது பிரசுரமானபோது அகில இலங்கையின் அவ்வருட பரிசில்கள் அனைத்தை யும் வென்றது. எழுத்து என்னை வளைத்துப் போட எனது அனுபவங்களை அதில் கொட்டினேன் அது உண்மைக்கு கிடைத்த பேறு.

பரணி:

போராட்டம் பற்றிய கருத்து.

தமிழ்க்கவி:

*11* போராட்டம் ஒரு கடல் அதன் கிளைகளாக பல பகுதிகள் உண்டு பயிற்சி, துணிவு, தந்திரம் என்பவையை அடிப்படையாக வைத்து, போர்க்களம் உபபிரிவுகளாக அரசியல் மருத்துவம், தொலைத் தொடர்பு, புலனாய்வு வேவு, திட்டமிடல், கண்காணிப்பு, நிழல்நிர்வாகம், பிரசாரம், ஊடகங்கள் உற்பத்தி, கைத்தொழில், பொருளாதார தடைகள் மத்தியில் புதிய கண்டுபிடிப்புகள் கல்வி சிறுவர் பாதுகாப்பு அவர்களுடைய போசாக்கு நோய்த்தடுப்பு கள். உதாரணமாக கொலரா மலேரியா.. பாதிக்கப் பட்டோர், பெண்கள் புனர்வாழ்வு, மன நோயாளர் காப்பகம் அநாதைச்சிறுவர் சிறுமியருக்கான காப்பகங்கள் இடம் பெயர்வோருக்கான புனர்வாழ்வு?! இது செய்ய முடியாத போதும் செய்தார்கள். வங்கி, பொலிஸ் நீதிமன்றம் பொருண்மிய வளர்ச்சி போக்கு வரத்து கடவுச்சீட்டு வழங்கல் தடைமுகாம் பரி சோதனைகள். நிதி முகாமை வரி திறை நடவடிக் கைகள். அத்தியாவசியப் பொருட்களை தரை கடல் வழியாக கடத்தல். அப்பாடா களைப்பாக இருக்கிறது. காயமடைந்த போராளிகளுக்கு மாற்றுத்திறன் கல்விச் சாலைகள் அறவே பாதிக்கப்பட்டவர்களின் பராமரிப்பு. இன்னும் திருமணம், அவர்களுடைய குழந்தைகளுக் கான பராமரிப்பு நிலையங்கள். வெளிநாட்டுத் தொடர்புகள், இலங்கையின் ஏனைய பகுதிகளிலான நடவடிக்கைகள். ஏன் அதிகம் தாக்குதல் அதாவது படைப்பிரிவிலேயே பல வகைப்பிரிவுகள்.... எல்லாம் சொன்னால் போராட்டம் தனியே குண்டெறிவதோ சுடுவதோ மட்டுமல்ல. இத்தனை வேலைகளையும் (இன்னும் உண்டு) செய்வதற்கு ஆட்களை விசுவாச மான ஆட்களை நியமித்தல் மிக முக்கியம். ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் சிறிய ஓட்டை விழுந்தாலும் கப்பல் கவிழ்வது தப்பாது. இவ்வளவையும் செய்யும் வல்லமை படைத்தோர் இருந்தால்... அதுதான் போராட்டம்.

**பரணீ:**
புரியவில்லை போராட்டம் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறதே...!

**தமிழ்க்கவி:**
ஒவ்வொரு உயிரியும் ஏதோ ஒரு வழியில் ஏதோ ஒன்றுக்காக போராடிக் கொண்டுதான் இருக்கின்றன. சின்ன உயிர்களை பெரிய உயிர்கள் உண்டு வாழ் கின்றமை இயல்பு. அப்படித்தான் உலகம் படைக்கப் பட்டிருக்கிறது. வேட்டையாடிய மனித இனம் இன்று சட்டதிட்டங்களைப் போட்டு தனக்குத் தனக்கென தனியாக அரசுகளை நிறுவி வாழ்கின்றன. என்றாலும் போர் ஓய்ந்து விடவில்லையே. எல்லோரும் தாமே தலை வராக இருக்க.) விரும்புகிறார்கள். அடிப்படை கிராம அபிவிருத்தி சங்கமாகட்டும் அரசியல்கட்சிகளாகட்டும் விசேடமாக (தமிழ் கட்சிகள்) தாமே தலைவராக இருக்கவேண்டும் என்பதற்காகவே பாடுபட்டு புதியபுதிய கட்சிகளை உருவாக்கி மக்களை துண்டாடிக் கொண்டி ருக்கிறார்கள். அந்த வகை போராட்டம் ஒழியும் வரை தொடரும்தானே.

**பரணீ:**
போராட்டத்தில் செயற்பட்ட வாழ்வு மகிழ்ச்சியாக இருந்ததா?

**தமிழ்க்கவி:**
மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இன்றுவரை அதை பெருமையாகவும் கருதுகிறேன்.

**பரணீ:**
**தமிழ்மக்களது இன்னல்களை போக்க என்ன வழி?**

**தமிழ்க்கவி:**
தமிழ்மக்களுக்கு இன்னலா என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவர்கள் அவர்களாகவே தேறி வாழ்வார்கள் யாரோ ஒரு சிலருடைய நன்மைக்காக அவர்களுடைய புண் கீறி விடப்பட்டுக் கொண்டே இருக்கிறது. காலம் காலமாக போர்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றது ஆனாலும் உலகில் மக்கள் தொகை அழியவில்லையே. மரணம் நேராத வீடுகள் எங்காவது உண்டா? மூன்று ஆண்மக்களை அவர்களது விடலைப்பருவத்தில் இழந்தவள் நான். மக்களுக்கான கருத்துக்கள் ஆலோசனைகள்; ஆறுதல் கள் தாமாக ஏற்படும் அதை விட்டு அவர்களை இலவ மரத்தின் கீழ் அமர்த்தி காத்திருக்கச் செய்வது என்ன செயல். உற்பத்திக்காக எதிர்காலம் ஏங்கிக் கிடக்கிறது. வளரும் சந்ததியை காப்பாற்ற நாம் பாடுபட வேண்டுமே யொழிய போன வாழ்க்கையை திருப்ப முயற்சி செய்வது இன்னல் என்ற வகைக்குள் வருமா என்ன? பாருங்கள் கல்லெறி வாங்கவென்றே சில கேள்விகளை தந்திருக் கிறீர்கள். நானும் இயல்பது கரவேல் என்பதாக எனது கருத்தை சொல்லி விட்டேன். பொறுங்க தலைக்கு கெல்மெட்டை போட்டுக்கொள்கிறேன்.

**பரணீ:**
**போராட்டகாலத்தில் ஆதரவாக எழுதிய கூறிய கருத்துகளை போர் முடிந்தபின் மாறான கருத்துகளை கூறுவதாக அமைகிறது அதுபற்றி.**

**தமிழ்க்கவி:**
இப்படி குருடன் பெண்டிலுக்கடிச்ச கதையா சொன்னா எப்படி எந்தக்கருத்தில் உங்களுக்கு சந்தேகம் ஒன்றிரண்டை கட்டலாமே..

**பரணீ:**
**"போராட்டம் பற்றி நீங்கள் இப்போது நம்பிக்கையற்றிருந்ததாக பேசுகிறீர்கள்.? அதுபற்றி?**

**தமிழ்க்கவி:**
"நம்பிக்கை இருந்ததால்தான் எனது பிள்ளைகளையும், மட்டுமன்றி நானும் அதில் இணைந்தேன். பின்னால் என் பேரனும் பேத்தியும்கூட போராளிகளாகினர். என்பதை முதலில் சொல்லிக் கொள்கிறேன். அதற்காக தன்னை நம்பி தமது வாழ்நாள் உழைப்பினால் வந்த அனைத்தை யும் உதறிவிட்டு பிள்ளைகளையும் கொடுத்துவிட்டு அவர்களை மதித்து தமது வாழிடங்களை விட்டு தொடர்ந்து வந்த மக்களை விடுதலைப்புலிகளின் சிற்றரசர்கள் எனப்பட்ட கிளைப் பொறுப்பாளர்கள் நடத்திய விதம் எனக்கு உடன்பாடல்ல கடலில் ஒரு துளி நீராக நானும் அதற்குள்தான் இருந்தேன். அந்தப்பாவம் என்னையும் சாரும் நான் இப்போதும் அமைப்பில் இருப்பதாக நினைத்தே எமது தவறுகளை திறந்து கொட்டுகிறேன் மக்களால் முடிந்தால் மன்னிக்கட்டும். அவர்களுக்கு அது உண்மை என்பதும் தெரியும் கண்டவர்கள் அவர்கள். கண்டவர்களைக் கண்டவர் களும் காதால் மட்டுமே கேட்டவர்களும் புளுகித் தள்ளுவது போல என்னால் செய்ய முடியாது. எனது மனச்சாட்சி என்னைக் கொல்லும் அவ்வளவுதான்.

**பரணீ:**
**போராட்ட காலமென்றாலே குழப்பங்கள் சில பிரச்சனைகள் வரத் தான் செய்யும். அதை முழுமையாக குறை சொல்ல முடியுமா?**

**தமிழ்க்கவி:**
"ஊகும் முடியாது. படுகளத்தில் ஒப்பாரி ஏது?"

**பரணீ:**
**ஊழிக்காலம் புலிகளை குறை கூறுவதாக அமைந்துள்ளது. நீங்கள் சேர்ந்து இயங்கிய இயக்கம் பற்றி ஏன் அப்படி எழுதினீர்கள்.**

**தமிழ்க்கவி:**
ஊழிக்காலம் நாவல் என்பதற்கு அப்பால் அது ஒரு வரலாற்றுப்பதிவு. ஒரு வழிவழியாக இடப்பெயர்வை சந்தித்த மக்களின் சோகம் கலந்த வீர வரலாறு எப்படி மிகச்சுளுவாக மீண்டும் அடிமைத்தளைக்குள் தள்ளப் படுகிறது என்பதன் வரலாறு. அதில் பொய்யில்லை எத்தனை ஆண்டுகள் கழித்தும் இந்த போராட்டம் ஏன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறிப்போனது என்பதற்கான உண்மையான படிப்பினை. இதில் நான் வீர வசனங்களை எழுதி வரப் போகும் ஏதாவது ஒரு காலத்தில் போராடத் துணியும் ஒரு சந்ததியை ஏமாற்ற முடியாது. மேலும் அது என்னுடைய நாட்குறிப்பு அன்றன்றைக்கு நடப்பதை எழுதி வைத்திருந்த கொப்பியை புனர்வாழ்வு முகாமில் இருந்து நாம் விடுவிக்கப்படுவோமா என்று கூட தெரியாத நிலையில் எழுதிய புத்தகம். பல விடயங்களை திகதி வாரியாக எழுதியுள்ளேன் அதில் புலிகளைப்பற்றி அப்படி என்ன தப்பாக எழுதியிருக்கிறேன். என்பது எனக்கு விளங்கவில்லை சுட்டிக்காட்டினாலும் அது உண்மையாகத்தான் இருக்கும். இப்போதெல்லாம் எமது மண்ணில் மட்டுமல்ல அயல் தேசங்களிலிருந்து கூட அந்த இடப்பெயர்வு பற்றிய நாவல்கள் எழுதப்படு கின்றன. தவிர யுத்தம் தீவரமடைந்தபோது எல்லைக் காவலுக்கே செல்லப்பயந்து இராணுவ வலயங்களுக் குள் தப்பியோடியவர்கள் மிக வீரம்பேசும் நாவல்களை எழுதித்தான் உள்ளார்கள் அவை கலகலப்பாகவும் பேசப்படுகின்றன. அன்பான தம்பி கண்டகாட்சிகளை உணர்ந்த விடயங்களை நான் எழுதியிருக்கிறேன். அதன் நிறைவு வாக்கியத்தை வாசியுங்கள் புரியும். ஆனால் காட்சிகளை கண்டவரைக்கண்டு சித்தரிப்பதற்கு தமிழ்க்கவி தேவையில்லை. ஒரு சொற்பொறுக்கிகளே போதும். மூன்று லட்சம் மக்கள் அனுபவித்த துயரை நான் முக்காடு போட்டு மறைக்க அது கற்பனையல்ல வரலாறு. இன்னும் புனர்வாழ்வு முகாம் வாழ்க்கையை "ஊழிக்காலம் 2 புயலுக்குப்பின்" என்ற பெயரில் தொடராக எழுதி முடித்துள்ளேன் அது மெல் பேர்ண் எதிரொலி பத்திரிகையில் இரண்டு வருட மாக வந்துள்ளது. அதுவும் அப்பட்டமான உண்மைகள்தான்

**பரணீ:**

**கதைகளில் பாலியல்சார்ந்த அம்சங்கள் அதிகம் பேசப்படுவது பற்றி?**

தமிழ்க்கவி:

நான் வெட்கப்படவில்லை. அதை வாசித்த ஒரு ஆய்வாளர் "நான் ஆணாக இருப்பதாலோ என்னவோ அவற்றை வாசிக்கும் போது எனக்கு அருவருப்பாக இருந்தது" என்றார். அதுவே கதையின் வெற்றியாகும். ஆண்களால் பெண்களுக்கு போடப் பட்டிருக்கும் வேலிகளில் ஒன்று அவர்கள் தமது உள்ளக்கிடக்கை களை பேசமுடியாது பேசக்கூடாது. ஏங்க இதைவிட மோசமாக உடல் உறவுகளையே பின்னின்று குறிப் பெடுத்து எழுதும் ஏராளமான எழுத்தாளன்களுக்கு இந்த கேள்வி போவதில்லையே ஏன்?

**பரணீ:**

**இன்று நடைபெறும் கலாசார சீர்கேடு களைக்கட்டுக்குள் கொண்டுவர...**

தமிழ்க்கவி:

வெளிநாடுகளில் எமது கலாச்சாரங்களைப் பேணித் தான் நடக்கிறார்கள் ஆனால் நாய்விற்ற காசு குரைப்பது போல அங்கிருந்து வரும் பெரும் பணம் இங்கே தண்ணீராய் செலவிடப்படுகிறது. அவர்களைப்போல தாமும் சடங்குகள் செய்ய விளைவதன் வெளிப்பாடு இது. நாகரீகம் என்பது மாறிமாறித்தான் வரும் தானாக அது கட்டுக்குள் வரும் தொடை தெரிய போட்ட ஆடை இப்போது நிலம் அசைய வருகிறது. புழுக்ககாலம் முதுகில் காற்றோட்டமாக இருக்க யன்னல் தேவை தானே. மற்றப்படி இன்னும் எமது மண்ணில் தலைவிரி கோலமாக அலைவதும் ஆரம்பித்துள்ளது. கேட்டால் பார்வதி லட்சுமி சரஸ்வதி எல்லோரும் அப்படித்தானே இருக்கிறார்கள் என்று பதில் வரும் ஆண்களும் அவசர மாக மலசலம் கழிப்பதற்கு இலகுவாக இடையில் அணி வதை காலில் அணிகிறார்கள் கேட்டால் அது காற் சட்டைதானே என்பார்கள் அவர்கள் குனியும் போது முகத்தை திருப்பிக் கொள்வது நல்லது என வைத்திருக்கிறேன்.

**பரணீ:**

**பெற்ற விருதுகள் பட்டங்கள்...**



தமிழ்க்கவி:

இனிவானம் வெளிச்சிரும். ஊழிக்காலம், நரையன் ஆகியவை விருதுகளை வென்றன. முதலமைச்சர் விருது வடக்கு கிழக்கு ஆளுநர் விருது, கலாபூஷணம் விருது பவளம்மாள் விருது ஆகியவை பெற்றிருக்கிறேன்.

**பரணீ:**

**எதிர்கால திட்டம் என்ன தமிழ் மக்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?**

தமிழ்க்கவி:

அப்படி ஒரு திட்டமுமில்லை இப்படியே வாழ்ந்துவிட விளைகிறேன்.

நான் தமிழ்மக்களுக்கு என்ன கூற முடியும் அவர்கள் தமது சொந்த வாழ்க்கையில் கவனம் செலுத்துவதே சிறப்பு அதை நான்தான் சொல்ல வேண்டுமென்பதில்லை. அவர்களுக்கே புரியும். யாருடைய வாழ்க்கையும் திட்டமிட்டபடி நடப்பதில்லை. காலம்தான் நடத்துகிறது என்பது எனது நம்பிக்கை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க்கவியின் சிறுகதைத்தொகுதி

## நரையன்



ப.தயாளன்

தான் அறிந்த உண்மைகளை சலிக்காது பிறருக்கு எடுத்துரைக்கும் பணியை எழுத்து வழியாக ஆற்றுகின்ற படைப்பாளியாக - ஆச்சரியமூட்டும் ஆளுமையாக இருப்பவர் திருமதி தமிழ்க்கவி அவர்கள். கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள் என்பன சமகாலத்தில் அவர் கொடிகட்டிப் பறக்கும் துறைகளாக இருப்பினும் புனை கதைகள் என்று சொல்லத்தக்க படைப்பு முயற்சியே அவரது முக்கிய ஆக்கத்துறையாக, நூல்களாக வெளி வந்துள்ளன. பெண் படைப்பாளியாக இதுவரை அவர் எழுதியுள்ள நாவல்கள், சிறுகதைகள், நமது தமிழ்ச் சமூகம் எதிர்பார்த்திராத அதிர்ச்சி மிகு செய்திகளைச் சொல்கின்றன என்பது ஈழத்துச் சூழலில் மிக முக்கிய மானது.

கண்களும் அகமும் அறிந்த, உணர்ந்த மெய்மை களே அவரது பெரும்பாலான கதைகள். சிறுகதைகளாக எழுதியிருக்கின்ற பலநூறு படைப்புக்கள் அவரது கால்கள் உலாவிய ஒவ்வொரு கிராமங்களினதும் காடு களினதும் போர்க்களங்களினதும் வலிகளைச் சுமந்திருப் பவை. மூன்றாம் நிலை மனிதராக நின்று பேசியவையா கவோ ஆண்களின் பார்வையில் பேசப்பட்ட பெண் பாடுகளாகவோ அமைந்தவை தான் கடந்து போன காலத்திலும் சமகாலத்திலும் இதே பகைப்புலங்களில் வெளிவந்த பலரது கதைகள். எனினும், தமிழ்க்கவி அவர்களது பார்வையில் - கருப்பொருளில் வந்தவை மிக வேறுபட்டவை. தன் கண்களால் கண்டவற்றை, அனுபவித்தவற்றை நேரடியாகச் சொல்பவை.

துணிச்சல் மிகுந்த பெண்களால் எழுத முடிந்த கதைகளை தமிழ்க்கவி எழுதியிருக்கின்றார். தனது வயது தந்த தைரியத்தில் எழுதியதாக அவர் கூறியிருப்பினும் அது அசாதாரணமான நிகழ்வே. பொதுப்போக்கில் இருந்து மாறுபட்டு உண்மைகளையும் நியாயத்தையும் கூற விழையும் தைரியமே அவற்றை எழுதக்காரண மாகின. வெளிப்படையாக எந்தப் பூடகங்களும் அற்றுப் பேசுகின்ற கதைகள் யதார்த்தத்தில் விரும்பப்படுவ தில்லை. எனினும், அதை கூறத் தயங்காத விடுதலைக் குரல் அவருடையது என்பதில் மாறுபாடில்லை.

இந்தத் தொகுதியில் இடம்பெற்றுள்ள கதைகள் போர்க்களத்தின் நிகழ்வுகள், பெண்களின் பாடுகள் என இருவகைப்பட்டன. இரண்டாவது வகைக்கதைகள் பேசாப் பொருளைப் பேசியவை. இவற்றை வெகு தொலைவில் நின்று பார்க்கும் பார்வையாக அல்லாது மிக நெருங்கி நின்று அனுபவித்து அவதானித்தவை யாகப் பேசுபவை. ஏற்கனவே அவர் எழுதிய ஊழிக் காலம், இருள் இனி விலகிடும். இனி வானம் வெளிச் சிடும் போன்ற நாவல்களில் முயன்று சொல்ல முடியாது போனவற்றை எஞ்சியவற்றை இந்தச் சிறுகதைகளில் கூறியிருக்கின்றார் என்று கருதலாம்.

இறுதிப் போரின் போது நிகழ்ந்த சம்பவங்களை "உயிருக்குப் பின்" என்ற சிறுகதையும் போர்க்களத்தில் நின்ற போராளிகளின் வாழ்க்கையை "சாவை நோக்கி", "போருக்குள்" ஆகிய சிறுகதைகளும் பிரதிபலிக்கின்றன. போரியல் சார்ந்தவை என்று இவற்றை வகைப்படுத்தி னால் இவை போருக்குப் பின் வெளிவந்த இத்தகைய கதைகளில் முக்கியமானவை. நேரடியாக களத்தைத்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தரிசித்த அனுபவங்களுடன் பேசுகின்றவை.

"கல்லோயா கறுத்தப் போத்தல்": பதின்னான்கு வயது சிறுமிக்கு ஒரே நாளில் முடிவெடுத்து செய்து வைக்கப்படுகின்ற இருபத்தெட்டு வயதுடையவருட னான திருமணம் மிகச் சாதாரணமாக கிராமங்களில் நடந்தன என்பதை அதிர்ச்சியூட்டும் விதமாக பேசு கின்றது. "உலகத்தின் லட்சக்கணக்கான பெண்களுடன் ஒருத்தியாக மனசுக்குள் உள்ள கதவுகளை எல்லாம் அடைத்துவிட்டு ஒரு மரக்கட்டை போல வீழ்ந்து கிடந்த ஒரு பெண்ணின் ஏமாற்றம் மிகுந்த வாழ்வின் துயரப்பக்கங்களை புரட்டுகின்றன.

"நரையன்" என்பது உழவு மாட்டின் பெயராயி னும் கதையில் அது ஒரு குறியீடாக மிகப் பழைமையாக சிந்தனையுடன் இருக்கும் மனிதர்களின் அகத்தை பிரதி பலிக்கின்றது. தொகுதியின் பெயராகவும் அமையும் இச்சிறுகதை, கிராமங்களில் பெண்களை தனியாக நடமாட அனுமதிக்காததன் சூட்சுமத்தை பெண் துஷ் பிரயோகம் என்பதை "காத்து கறுப்பு பிடிக்கும்" என்ற ஐதீகமாகக் கொள்வதை சமூகவியல் கண்ணோட்டத்தில் சித்திரிக்கின்றது.

"கொடுத்த இன்பம்" சிறுகதை நவீன மருத்துவத் தின் வசதிகள் சென்றடைந்தும் அதனைப் பயன்படுத்த அஞ்சும் கிராமத்தின் வீடுகளில் நிகழ்ந்த பிரசவங்களில் ஒன்றைப் பற்றிக் கூறுகின்றது. நீண்ட பிரசவலியால் துடிக்கும் பெண்ணொருத்தி கணவன் இல்லாத இரவு நேரத்தில் கிராமத்து மருத்துவிச்சியின் துணையுடன் குழந்தையைப் பிரசவிக்கின்றாள். காலையில் வயலில் இருந்து திரும்பிய கணவன் அந்த வலிகள் எதையும் அறியாது குழந்தையை காணும் இன்பத்தை மட்டுமே அறிகின்றான். "தான் அவளுக்கு கொடுத்துப் பெற்ற இன்பத்தை, இப்படித் திரட்டித் தந்திருக்கிறாள் என்று வியப்புறும் ஆண்களுக்கு ஒருபோதும் தெரியப்போவ தில்லை அவள் பட்ட துன்பம். அதைத் தெரிந்துகொள்ள முயற்சி செய்யப் போவதுமில்லை ஆண்களின் உலகம்." என்று நிறைவு பெறுகின்றது கதை.

"கற்பெனப்படுவது" மெய்யாகவே பேசாப் பொருளைப் பேசுகின்றது. காதலும் கலவியும் இரு பாலருக்கும் பொதுவானது. எனினும், அவை குறித்து பேசுவது ஆண்களுக்கு மட்டுமே உரித்தானதாக மாறி இருக்கும் சூழலில் பெண் ஒருத்தி வலியோடு தான் கடந்து வந்த வாழ்வினை கூறுவதாக இச்சிறுகதை அமைகின்றது. "பிறன் இல் விழையும்" ஆண்கள் தமது மனைவி கற்புடன் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்கின்றனர் என்ற முரண்பாட்டை சுருக்கெனத் தைக்கும் விதமாக சொல்கின்றது.



"காணி வைத்தியம்" என்கிற கதையும் கூட ஒரு பேசாப்பொருள் தான். பாகுபாடுகளும் ஒடுக்குமுறை களும் ஏமாற்றுக்களும் எல்லா இடங் களிலும் இருந்தன. அதற்கு எந்த அரசிய லும் விதிவிலக்கல்ல என்பதை சொல் கின்றது. அதிகமானோருக்கு சகித்துக் கொள்ள கடிமான கதையாக இது இருக்கக்கூடும். எனினும், அசாதாரணமான விடயங்களைப் பேசுகின்ற மனத்திடம் தமிழ்க்கவி அவர்களுக்கு வாய்த்துள்ளது என்பதை திரும்பவும் இதில் நிறுவுகின்றார்.

"பெண்ணுக்குள் என்ன உண்டு" மிகுந்த வலியுடைய சிறுகதை. நம்பிக்கைக்குரிய பாத்திரங்கள் தம்மை நம்பிய சிறுமியரை பாலியல் வக்கிரங்களைத் தீர்க்கும் வடிகால்களாக்கிக் கொள்கின்றதான என்று முள்ள யதார்த்தத்தை முகத்தில் அறைகின்றது. மனதளவிலும் உடலளவிலும் பெண் குழந்தைகளின் உடல் என்னவாக இருந்தது; எப்படிப் பார்க்கப்பட்டது; நிகழும், தொடரும் கொடுமைகளை எவ்வாறானது என்பதை கதைக்குள் பெரும் வலியோடு கொண்டு வந்து இருக்கிறார் சிறுகதையாசிரியர்.

"ஒப்பாரி" என்கிற சிறுகதை, செத்துப்போன பரமசிவத்தின் கடந்த கால வாழ்க்கையும் அவர் உடல் நலிவுற்றதும் மனைவி மற்றும் பிள்ளைகளால் சந்திக்கும் பாடுகளையும் கதையின் உச்சமாக மனைவியின் ஒப்பாரி வீடியோ படமாக்கப்படுவதையும் எள்ளலுடன் விளாசு கின்றது.

"சிவில் பாதுகாப்பு" கதை அலுவலக நிர்வாக முறையில் உள்ள நிகழ்கால செயல்பாடுகளை எள்ளல் செய்கின்றது. "மாற்றங்கள்" என்ற கதை பல்தேசிய நிறுவனங்கள் எமது நிலத்தை எப்படி வகை மாற்றம் செய்து நாசம் செய்கின்றன, கொள்கையிடுகின்றன என்பதன் அடிநாதமான சிறுபொறியைப் பற்றி கூறு கின்றது. இயற்கை உரத்தை விவசாயச் செய்கையில் அறிமுகம் செய்ய முயன்ற செயன்முறையை பல்தேசிய நிறுவனங்கள் சூழ்ச்சிகள் மூலம் இலங்கையில் போட்டுடைத்தன. ஆரம்பத்தில் இரசாயன உரங்களை அறிமுகம் செய்யும் போதே அது பற்றிய எச்சரிக்கை உணர்வு கிராமங்களில் இருந்தன என்பதை இக்கதை உணர்த்துகின்றது.


திருமதி தமிழ்க்கவி அவர்கள் நேரடியாக வெளிப்படையாகவே கதை சொல்கின்றார். ஆரம்பித்த தில் இருந்து நேர்கோட்டு முறையில் பயணித்து முடிக்கின்ற உத்தி முறையே அவருடையது. தான் சொல்லக்கருதியவற்றைச் சொல்லியாக வேண்டும் என்ற உந்துதலின் வெளிப்பாடுகள் அவை. இதனால், இவரது கதைகள் சில அவசர வேகத்தில் சென்று முடிந்து விடுகின்றன போலத் தோன்றுகின்றன

இன்னும் விரிவாக எழுதியிருக்கலாம் என்று எண்ணத்தோன்றுகின்ற கதைகளாக மாற்றங்கள், சிவில் பாதுகாப்பு என்பன காணப்படுகின்றன. கதைகளைச் சொல்லிமுடித்துவிட வேண்டும் என்று அவர் கருதுகின்ற அவசரத்தின் நிமித்தமாக கையாண்டி ருக்கக் கூடிய வேறுவேறு வகையான உத்திமுறைகளை, கலைத்துவமான வெளிப்பாடுகளைத் தவற விடுகின்றாரோ என்று தோன்றுகின்றது. எண்ணிலடங் காத அனுபவக்களஞ்சியமாக மனதில் தேங்கிக்கிடப்பவற்றை இறக்கி வைத்து விட வேண்டும் என்ற அவசரம் இதற்கு காரணம் என்பதைப் புரிந்து கொள்ள லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சும்மாயிரு



தமிழ்கவி

"எப்ப வாயத்திறந்தாலும் உனக்கொண்டும் தெரியாது சும்மாயிரு" எனக்கு பத்திக்கொண்டு வரும் கண்டியளோ. சும்மாயிருந்தனெண்டா தெரியும் எண்டைக்கெண்டாலும் ஒரு நாளைக்கு சும்மாயிருந்தனெண்டா அப்ப விளங்கும் உந்த வாய் வல்லமை. நீ நினைக்கிறியோ வாழ்க்கை எண்டது எல்லாருக்கும் பிடிச்சமாதிரித்தான் அமையுமெண்டு, சும்மா போ "இரப்பானப்பிடிச்சுதாம் பர பிராந்து அவனையும் பிடிச்சு தாம் நளலையில் சனியனெ"ண்டு ஒவ்வொருத்தருக்கு விதியடி. ஏன்ர சோகம் எதோ கொஞ்சமெண்டாலும் போய் பள்ளிக் கூடத்தில படிக்கேல்லயே எண்டதுதான். பின்ன குடிகாறன் ஞாயத்தைத்தைத்தான் கதைச்சாலும் ஆரும் அதை ஏத்துக் கொள்ளப்போறதில்லை. பின்ன நான் என்ன நல்லதைத்தான் சொல்லு... படிக்காதது வந்து ஞாயம் பறையுது எண்டளவிலதான் முடியுது.

எனக்கும் இருந்திருந்து ஒரு வெப்பியாரம். இல்லத் தெரியாமத்தான் கேக்கிறன். அவ்வையார் எந்தக்கம்பெசில படிச்சவா...வள்ளுவர் எந்த யூனிவசிட்டியில பட்டம் வாங்கினவர். அவயள் எழுதின நூலுகள் நாலாபக்கமும் பாடப்புத்தகங்களில போடேல்லயே. பின்னச் சொல்லுறியள்.

என்ன அவனுகளப்போல புத்தகங்களை கட்டுக்கட்டா தூக்கிக் கொண்டு பள்ளிக்கூடம் போயப் படிக்கேல்ல. ஏதோ அஞ்சாம் வேப்போட படிப்பை விட்டிட்டன் அதுக்காக, ஏன்ரீ நான் தெரியாமத்தான் கேக்கிறன் உந்த மாணிக்கத்தாற்ற பேத்தி என்ன படிச்சவள் ங... அவளும் எட்டாம் வேப்புத்தான் ஆனா அவளின்ர பணம்பகட்டு அவளுக்கு மாப்பிளையா வாச்சவன் போய்ஸ்றமாய்ற்றர். அவன் தேப்பன்காறன் "அய்யோ என்ரபிள்ளை என்னோட இருக்குமட்டும் வெயில்குளிச்சு உந்த தோட்டந்துரவெல்லாம் பாத்தவள். உத்தியோகக்காறனக் கட்டிக் குடுத்தாலாவது பிள்ளை எப்பன் ஆசறுதியா இருக்கும் எண்டுதானே கட்டிக் குடுத்தவன். மாப்பிளை வந்த நேரம் ஆள் தங்கக்கட்டி பிறகு பிறகு பாத்தா வெறிக்குட்டி. என்ன மனிசியின்ர சீதனக்காணியள பங்கு போட்டு எப்பன் எப்பனா வித்து குடிக்க துவங்கினான்.

பெட்டை கெட்டிக்காறி பிள்ளையள விடாப்பிடியா கம்பேசுக்கெல்லாம் அனுப்பி படிப்பிச்சுப் போட்டாள். பின்ன மூத்தவள் டாக்குத்தருக்கு படிச்சிட்டு ஊருக்கையே உள்ள ஆசுப்பத்திரியில வேலை. மற்றவன் இஞ்சினியராம். ஏதோ போகட்டும் எண்டில்ல பெடிச்சி வேலேய்த இடத்தில ஒரு டாக்குத்தர விரும்பியிட்டாள். லவ்வெண்டா சும்மாயிரு எண்டிட்டு கூடி வாழுறது இப்ப ஏழைபாளையள் செய்யிற சாகசம். படிச்சவை விடுகினமே அப்பவே பத்துலெச்சம் கேட்டவையாம் மாப்பிளை பகுதி. இங்சினியர் பெடியன் தமக்கைய கரை சேர்க்க தான் கலியாணம் முடிக்க வெளிக்கிட்டு வந்த பெடிச்சியிட்ட எட்டுலெச்சம் வாங்கி தமக்கையின்ர கலியாணத்தை ஒப்பேற்றியிருக்கிறான். எப்பிடி யாவாரம்.? என்னடா ஊருக்கதை உனக்கேன் வாய வச்சுக்கொண்டு சும்மாயிரோ.?

அவன் கிடக்கிறான் நீங்கள் கேளுங்கோ டாக்குத்தர்தானே பெட்டையும் அதுக்கார் சீதனங்குடுக்கிறது அதுகும் சிலவழிச்சு படிப்பிச்சு உந்த கல்வித்தரப் படுத்தலுக்க முட்டிமோதி சீற்றெடுத்து கண்முழிச்சு படிச்சு பாஸ் பண்ணின பிள்ளைதானே. கடைசியில நடந்த கதையக் கேளுங்கோ கலியாணம் முடிஞ்ச கையோட பெட்டைய வேலைய விடச்சொல்லிட்டாங்கள். அதுகும் சரியெண்டு விட்டிட்டு ரெண்டு பிள்ளையளப் பெத்து வளக்கிறதோட கணவனே கண்கண்ட தெய்வமெண்டு குடும்பக் குத்து விளக்கா மாறிட்டுது. பின்ன வீடுவாசல் கூட்டி சமையல கவனிச்சு பிள்ளையும் பெத்து வளக்க டாக்டர் பட்டம் குடுக்கிறதெண்டு ஆரும் சொல்லுகினமே. ச்சைக் அல்லது டாக்டர் பட்டம் வாங்கினாத்தான் உதெல்லாம் செய்ய ஏலுமெண்டு ஏதும்.... சரியெடா சரி நான் உதொண்டும் பறையேல்ல. விடு மெய்யேடா காத்தால மா முடியுது ஒரு அஞ்சு கிலோ மா வாங்கிக் கொண்டு வா எண்டெல்லே சொன்னான். ங்கா... என்ன மாவோ அரிசிமாத்தான் உவன் சுக்றுவன்ர மில்லில வறுத்தமா கிடக்காம் மலிவெண்டாங்கள். அரிசிமாவுக்க தவிட்டக் கலந்து விக்கிறான். அவிச்சா குரக்கன் பிட்டுக்கணக்கா சொரசொரண்டிருக்கிது. எட உந்த நெல்லுக்கு கொன்றோல்விலை கொன்றோல் விலை எண்டுறாங்கள். பாழ்படுவான் நூத்திப்பத்து ரூவாக்கு ஒரு கிலோ நெல்லுத்தாறான் பின்ன சொல்லுறியள். மூடைக்கு கணக்கபாருங்கவன் அய்யோ அதிலயும் சப்பி எக்கச்சக்கம். அவன்ரபாடும் இப்ப ஆள்கிடைக்கிறது கயிட்டமாம் மனிசிக்காறி பலாலியில் ரீச்சரா இருந்தவள் கலியாணம் முடிச்ச கையோட அவளையும் மில்லுக்க இறக்கிப்போட்டான் வேலை போயே போச்சு. இப்ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹிஹி இஞ்ச கிட்ட வா கதை சொல்ல, தான் தன்ர மோளவைய விழுந்து விழுந்து படிப்பிக்கிறார் கேட்டா அதுகள் பட்டம் வாங்க வைக்கப் போறாராம். நான் துருதுருத்த வாய் கிடவாமை கேட்டும் போட்டன் எட பேயா நான் அஞ்சாம் வேப்பு படிச்சிட்டு செய்யிற வேலை யளத்தானே அதுகள் செய்யப்போகுது. அதுக்கேன் விழுந்து விழுந்து படிப்பிக்கிறாய். ஏண்டு...

என்னங்கோ இப்ப கடைக்கு கடை ஒவ்வொரு விலை. மூக்குப் போன செம்மைக்கு விலை வைக்கி றாங்கள். இனி பழைய கொம்பனியள் எல்லாம் மூடிட் டாங்களோ புதுபுதுக் கொம்பனியளால சாமானுகள் வருது. என்ன பக்கேற்றில வாற சாமானுகள் எல்லாம் கொஞ்சம் மெலிஞ்சு போச்சு.

என்னடா வெளிக்கிடுறியே மாவப் பாத்து வாங்கு தம்பி மெய்யேடா சதொசாவில முட்டை முப்தைஞ்சுரூ வாயாம். மறந்தும் வாங்கிப் போடாதை...என்ன மலிவோ அவன் முட்டைய கொள்வனவு செய்ய ஒரு கிழமை பிறகு கப்பலுக்க ஒரு கிழமை பிறகு துறைமுகத்துக்க ஒருகிழமை அது கடைகடையா வந்திறங்க ஒருகிழமை. ஆச்சே இன்னும் முட்டை கெட்டுப்போகாட்டி அவனும் பழயாவாரியள்மாதிரி ஏதோ தெளிக்கிறான் போல.

இந்த வயசிலயும் எனக்கு ஓய்வெங்க கிடக்கு காத்தால எழும்பி காலைச்சமையல் முடிச்சு பிறகு மத்தியான சமையலையும் கையோட செய்தாத்தான் பிள்ளையளின்ர பாடு பாத்து பெடியனுக்கும் வேலைக்கு போகயுக்கை கட்டிக் குடுத்துவிடலாம். அதுக்க சின்னவனுக்கு சிநேக்வேணுமாம் நாங்கள் சிற்றுண்டி பலகாரம் எண்டு சொல்லுறதுகள் அதுகள் சிநேக் எண்டு சொல்லுதுகள். ஏன்னடா...சிநேக் எண்டா பாம்போ பின்ன "சிநாக்" சரியே

"உனக்கு வராது வாயவச்சுக் கொண்டு சும்மாயிரு.

எதெதுக்குத்தான் சும்மாயிரெண்டு அதட்டு வியள். ஏட என்ர ஆத்திக்கு நான் புறுபுறுத்துக் கொண்டு திரியிறன்.

"அய்யா கடவுளே இந்த வாய ஊமையாக்கு இல்லாட்டி எதிரில நிக்கிறவைய செவிடாக்கு." எட என்னடா விடிஞ்சாப் பொழுது பட்டா உந்த ஸ்பீக்கருகள் கத்தி உலையுதது. உதுகள் உங்கள ஓண்டுஞ்செய் யேல்லயே மூலைக்கு மூலை கோயிலை வச்சுக் கொண்டு மாறிமாறி பீக்கருகளப் போட்டு உயிரெடுக் கிறாங்கள் அதுகள போய் கேளாங்கள். எட கோயில் கலியாணவீட்ட சாமத்திய வீட்ட விடு இப்ப செத்த வீட்டமட்டும் விடுறாங்களே பறை ஒருபக்கம் பாண்ட் ஒருபக்கம் பீக்கர் ஒருபக்கம் தேவார திருவாசகங்கள் முழங்குது. அட சிவத்துக்கும் தேவாரம் பாடி சவத்துக்கும் தேவாரம் பாடுற ஒரே சாதி நாங்கதான். முன்னை நான் சின்னனா இருக்கயுக்க அப்பு சொல்லுற வர். கிளிநொச்சிக்க சாணுக்கொரு பாம்பும் முழத்துக் கொரு பேயுமெண்டு. எட இப்பவும் அத நம்பித்தான் உவள கோயிலுகள உண்டாக்கி வச்சிருக்கிறாங்கள் போல.

கொஞ்சம் பொறடா தேத்தண்ணி கேட்ட உடன தர அதென்ன பிறிச்சிலயே கிடக்கு. அடுப்பெல்லேபத்த வைக்க வேணும். இது ...எனக்கு வந்த வாழ்மானமோ ஊழ்வினையே அரசாங்க வேலை செய்யிறவனுக்கு ஞாயித்துக்கிழமை லீவு அடுப்படி வேலை செய்யிற எங்களுக்கு அண்டைக்குத்தான் ரெட்டிப்பு வேலை. அவைக்கு அம்பத்தைஞ்சு வயதில பெஞ்சன். எங்களுக்கு அடுப்படியில கைகால் ஓயுறமட்டும் வேலைதான் பெஞ்சனோ...? சம்பளமே இல்லை. பெஞ்சன் ஆர்தாற. ங்ஙா...எங்கடா... மருமேளுக்கு கண்டியில வேலை மோனுக்கு கிளிநொச்சியில வேலை பிள்ளையள் இஞ்சதான் படிக்கிதுகள் அப்ப அடுப்படி பிள்ளைவளப்பு எல்லாம் நான்தானே அப்பிடி இருந்தாலும் அவற்ற கெப்பர் சும்மாயிராம். அடுப்பூதி ஊதி வாழ்நாள் போகுது. காஸ் கிடக்குத்தான் எட ஏன்ரா என்ர வேலிவிராயளால மா பிலா கழிக்கிறதால வாற கொப்புகள விறகாகாக்கி சமைச்சா என்ன உடம்பும் நல்லாயிருக்கும் காசும் மிச்சம். பின்ன மருமோள் வாற நேரம் மட்டும் காஸ் பத்த வைப்பா. சட்டி பானையெல்லாம் கரியாக்கிப் போட்டனெண்டு ஒரே கடுப்புத்தான்.

மெய்யோடா உந்த தேங்காப் பொச்சில சாம்பலத் தொட்டு ரெண்டு இழுப்பு இழுத்தா கரி பறக்கிது. இனி அடிப்பாத்திரத்தில கரி பிடிச்சாத்தானே பாத்திரம் கனகாலத்துக்கு உழைக்கும். அது தெரியாது கரியாம் உந்த காஸுகளை எப்ப கண்டவை. எடேய் இவளவு வைக்கலும் இவள தும்பும் நாசமாப் போகுது எங்கட பொண்டுகளுக்கு பாத்திரந் தேக்கவெண்டே சவுக்காரம் தும்பெல்லாம் சீனாவில செய்து பக்கற்றில அடைச்சு வருதடா. நீ உதைப்பறையிறா நாக்குவழை க்கிறனெண்டு.... பொடியா உந்த டங் கிளீனர் டங்கிளீனரெண்டு ஒண்டு வருதெடா காலம பல்லுத் தீட்டக்க நாக்க வழிச்சுப்போட்டு கழுவி பத்திரமா வெக்கினமெணை கூய். நீ நாக்கு வழிக்கிறேல்லயோ எண்டே கேட்டாய் ஹ வழிக்காம அண்டண்டைக்கு நாக்கு வழிக்கறதை தூக்கி எறிஞ்சு போடுவன் நாளைக்கு புதுசுதான்ரா. எங்கட கொல்லைக்க வடலியள் நிக்குமட்டும் எனக்கு புதிசுதான்ரா.

"ஓம்... இந்தா வந்திட்டன்" மருமேள்தான் கூப்பிடுறா லீவில வந்து நிக்கிறாவெல்லே எங்கயும் வெளியில போகப் போகினம் போல பொறுங்கோ வாறன்." பின்ன பெடியா நீ நெச்சியோ மருமேள் வந்ததால எனக்கு லீவெண்டு. எடேய் நாளைக்கு அவா போகயுக்க கொஞ்சம் நொறுக்குத் தீனியள் கட்டிக் குடுக்க வேணும் தனிய ரூம் எடுத்து தங்கிறவ...நெடுக சமைக்க ஏலாதுதானே. ஙா...இப்பவோ...சொப்பிங் போகினயாம். பெண்களுக்கு சுதந்திரம் வந்திருக்கடா அதை கொண்டாடுகினம். பின்ன நானும் பொம்பிளை தான் ஆனா நான் அந்தக்காலத்தில பிறந்திட்டனே எனக்கெல்லாம் அது இல்ல நான் உரிமை கேட்டனோ வீடு நாறிப்போம். பின்ன எங்களை வச்சுக் கொண்டு தானே அதுகளின்ரை சுதந்திரத்தை நிலை நாட்ட வேணும். "எடஎட நீ போடா நான் என்ர பாட்டில புறுபுறுக்கிறன் உனக்கென்ன."


இந்த முழக்கால் சில்லுக்க விடுவிடெண்டு பெரியவலி நானும்ஒருக்கா டாக்குத்தரிட்ட போவமெண்டு தான் யோசிக்கிறன் எங்க நேரம்? வயசும் ஆச்சே வாற மாயம் வந்தா எழுவதாச்சு. உந்த நோவெண்ணைய எங்கயோ கைமாறி வச்சிட்டன் எப்பன் பொறுடா தேடிக்கொண்டு வாறன் கதை சொல்ல போகிடாதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ வ.ந.கிரிதரன்

# தமிழ்க்கவியின் "ஊழிக்காலம்"




தமிழ்க்கவியின் ஊழிக்காலம் முள்ளிவாய்க் காலில் யுத்தம் முடிவுக்கு வந்தபின்னர் வெளியான நாவல்களில் முக்கியமானதொன்று. முள்ளிவாய்க் காலில் முடிந்த யுத்தக் காலகட்டத்தில் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய சிரமங்களை வெளிப்படுத்தும் காணொளிகள் அழிவுகளைத்தாம் காட்டும். ஆனால் அக்காலகட்டத்தில் அங்கு வாழ்ந்த மக்களின் அன்றாடச் செயற்பாடுகளை, அழிவுகளை அவர்கள் எதிர் நோக்கியது எவ்வாறு போன்றவற்றை அக்காணொளிகள் காட்டுவதில்லை. இதனை அக்காலகட்டத்தில் அங்கு வாழ்ந்த ஒருவரின் நாட்குறிப்புகள் அல்லது பதிவுகள் தாம் புலப்படுத்தும். தமிழ்க்கவியின் ஊழிக்காலம் அக்காலகட்டத்தில் மக்கள் எவ்விதம் போர்ச்சூழலை எதிர்கொண்டார்கள் என்பதை விரிவாக வெளிப் படுத்தும் நாவல்.

இந்த நாவலைப் பொறுத்தவரையில் ஏனைய முக்கியமான நாவல்களைப் போல் பாத்திரப்படைப்பு, கதைப்பின்னல், உரையாடல், கூறும்பொருள், மொழி என்பவற்றின் அடிப்படையில் அணுக முடியாது. இதன் முக்கியத்துவம் நடந்து முடிந்த பேரழிவினை ஆவணப்படுத்தும் பதிவுகள் என்ற வகையில் தானிருக் கின்றது. யூதச்சிறுமி ஆன் ஃப்ராங்கின் புகழ்பெற்ற "தினக்குறிப்புகள்" எவ்விதம் ஆவணச்சிறப்பு மிக்கவை யாக இருக்கின்றனவோ (அத்தினக்குறிப்புகள் அச்சிறுமி யின் பதின்ம வயது உள்ளத்துணர்வுகளை வெளிப் படுத்தும் வகையில் இலக்கியச்சிறப்பும் மிக்கவை) அது போல்தான் தமிழ்க்கவியின் "ஊழிக்காலம்" நாவலும் ஆவணச்சிறப்பு மிக்கதாகவிருக்கின்றது. அதன் காரணமாகவே ஈழத்தமிழர் இலக்கியத்தில் முக்கியமான தொரு படைப்பாகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்கின்றது.

இந்த நாவலில் யுத்தக்காலகட்டத்தில் மக்களின் இடம்பெயர்வுகளை, கூவிவரும் எறிகணைகளிலிருந்து தப்புவதற்காக அவர்கள் படும் சிரமங்களை, அன்றாட வாழ்வியற் பிரச்சினைகளை, இயக்கத்தவரின் செயற்பாடுகளை, இயக்கத்தைக் காரணமாக வைத்துச் சிலர் அடையும் ஆதாயங்களை, ... இவற்றையெல்லாம் தமிழ்க்கவி இயலுமானவரையில் பதிவு செய்திருக் கின்றார். இயக்கத்தின் செயற்பாடுகளைப் பாராட்ட வேண்டிய இடங்களில் பாராட்டியும், கண்டிக்க வேண்டிய இடங்களில் கண்டித்துமுள்ளார். இறுதிக் கட்டம் வரையில் புலிகள் போராடிக்கொண்டிருந்ததை பதிவு செய்யும் "ஊழிக்காலம்", இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் செல்ல முயன்றவர்கள் மீது புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததையும் விபரிக்கின்றது. இதற்குப் படகில் தப்பிச்சென்ற பாலகுமாரின் மனைவியும், மகளும் கூட விதிவிலக்கான வர்களல்லர். பாலகுமாரின் மகளும் இவ்விதமானதொரு சூழலில், துப்பாக்கிச்சூட்டில் பலத்த காயங்களுக் குள்ளாகவதாக "ஊழிக்காலம்" விபரிக்கின்றது. இவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்ததால் ,




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



விடுதலைப்புலிகள் பற்றிய இவரது விமர்சனங்கள் பற்றி மாற்றுக்கருத்தினர் நிச்சயம் தத்தமது பார்வையில் விமர்சனங்களை வைக்கத்தான் செய்வார்கள்.

தமிழ்க்கவியின் "ஊழிக்காலம்" என்னுமிந்த ஆவணப்பதிவில் என்னை மிகவும் பிரமிக்க வைத்தது மக்கள் இருப்பினை எதிர்நோக்கிய இயல்பு. பல்வேறு பட்ட எறிகணைகள் மக்கள் வாழ்ந்த பிரதேசங்க ளெல்லாம் சீறிப்பாய்கின்றன. பலரைப் பலிகொள் கின்றன. இலங்கை இராணுவத்தின் கைகளில் ஒவ்வொரு புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமும் விழுந்தவுடன், மக்கள் மீண்டும், மீண்டும் இடம்பெயர்கின்றார்கள். யுத்தத்தின் இறுதிவரையில் மக்கள் பலியாகிக் கொண்டி ருக்கின்றார்கள். அதே சமயம் தமிழீழ வைப்பகம் போன்ற அமைப்புகள் இயங்கிக்கொண்டுதானிருக் கின்றன. மக்கள் வைப்பகங்களில் வைத்திருந்த பணத்தை அவ்வப்போது எடுத்து, உணவுக்காக, பங்கர்கள் கட்ட உதவும் பொருட்களைக் காவி வருவதற்கான கூலி போன்றவற்றுக்காக என்றெல்லாம் செலவழிக் கின்றார்கள். விலை அதிகமாகக்கொடுத்துப் பொருட் களை வாங்குகின்றார்கள். வியாபாரிகளும் அதிக விலைக்கு விற்கின்றார்கள். சங்கக்கடை போன்ற அமைப்புகள் யுத்தநிலைக்கேற்ப சந்திக்குச் சந்தி இடம் மாறி தம் சேவைகளை வழங்கிக்கொண்டுதானிருக் கின்றன. குழந்தைகள் பங்கர்களுக்குள் சதுரங்கம், தாயத்து போன்ற விளையாட்டுகளை விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொருமுறை இடம் மாறும்போதும், புதிய இடங்களில் பங்கர்கள், மலசலக் கூடங்கள் அமைத்துத் தம் வாழ்வினைத் தொடர் கின்றார்கள். இவ்விதமான அழிவுகளுக்கு மத்தியிலும், மக்கள் ஒழுங்கிழந்து, சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. அழிவுகளை எதிர்நோக்கி, மீண்டும் நம்பிக்கையுடன் யுத்தத்தினை எதிர்கொள்கின்றார்கள்.

இவ்விதமான யுத்தச்சூழலில் மக்களின் அன்றாட இருப்பினை நன்கு பதிவு செய்துள்ளார் தமிழ்க்கவி. அது இந்நூலின் ஆவணச்சிறப்பினை அதிகரிக்கின்றது. பொதுவாக அமைப்பைச் சார்ந்தவர் களின் பதிவுகளில் தனிப்பட்ட மன உணர்வுகளைத்தான், அதுவும் ஒருபக்கச்சார்பாகப் பதிவு செய்திருப்பார்கள். ஆனால் தமிழ்க்கவியின் "ஊழிக்காலம்" இயலுமான வரையில் யுத்தச்சூழலில் வாழ்ந்த மக்களின் அன்றாட வாழ்வினைக் குறை, நிறைகளுடன் பதிவு செய்திருக் கின்றது.

நூலில் தமிழ்க்கவி நூல் நல்ல முறையில் வெளிவருவதற்குக் காரணமாக எழுத்தாளர் இளங்கோ (கனடா), "ஆறா வடு" சயந்தன் ஆகியோர் இருந்ததாக நன்றி நவின்றிருப்பார். அதற்காக அவர்களையும் பாராட்டலாம் இவ்விதமானதொரு நூல் வெளிவரக் காரணமாகவிருந்ததற்காக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி வானம் வெளிச்சிரும் : தமிழ்க்கவியின் எழுத்தின் மீதான ஒரு வாசிப்பு

■ தி.செல்வமனோகரன்




ஈழத்துத் தமிழ்ப் படைப்புலகம், பெண் படைப்பாளிகளை அதிகம் கொண்டிருக்கவில்லை. ஆரம்பத்தில் மீனாட்சி அம்மாள், மங்களநாயகம் தம்பையா, பத்மாசினி அம்மாள் எனக் குறிப்பிட்ட சிலரே எழுதத் தொடங்கினர். நவீன கல்வியின் ஊடாக வளர்ந்த படைப்பாளிகளாக கோகிலம் சுப்பையா, கோகிலா மகேந்திரன், பாலேஸ்வரி, தாமரைச்செல்வி, ராஜேஸ்வரி போன்றவர்களைக் குறிப்பிலாம். சாரங்கா, தாட்சாயணி, குமுதினி, அனார், சுலைகா, சர்மிளா சய்யித், மனோகரி, ஆதிலஷ்மி, தமயந்தி என இன்னும் சிலரையும் குறிப்பிடலாம். (இப்பட்டியல் முழுமையானது அல்ல. இவை வெறும் உதாரணங்களே).

வெகு சாதாரண குடும்பத்தில் வவுனியா மாவட்டத்தில் சின்னப்புதுக்குளம் என்ற கிராமத்தில் 1947ஆம் ஆண்டு ஜூலை 19ஆம் திகதி, கந்தப்பு - லட்சுமி தம்பதிகளுக்கு தமிழ்க்கவி பிறந்தார். இவரது இயற்பெயர் தமயந்தி. 14 வயதிலேயே திருமணமாகி ஒன்பதாம் வகுப்பு வரை மட்டுமே கற்று, விவசாயம் பார்த்து பிள்ளைகளுக்கு பிள்ளைகளைக் கண்டபின் போராளியாகி எழுத்தாளராகி யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின் தான் வரித்துக்கொண்ட கருத்தியலோடு தானே சுயமுரண் கொண்டு எதிர்த்தளம் சார்ந்து இன்றும் எழுதி வருகின்ற - எம்மோடு வாழ்ந்து வருகின்ற ஒரு எழுத்தாளராகத் தமிழ்க்கவி விளங்குகின்றார்.

தமிழ்க்கவியின் முதல் எழுத்தாக, கதையாக "இனி வானம் வெளிச்சிரும்" நூல் அறிவமுது வெளியீடாக 2000 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. தன் மகனைப் போராட்டத்துக்கு ஈந்து வித்துடலும் காணவே காணாது தன்னையும் தமிழ்த் தேசியத்திற்காக அர்ப்பணித்திருந்த ஒரு பெண்மணியின் உள்ளார்ந்த சொற்களினால் பின்னப்பட்ட யதார்த்தப் படைப்பாகவே இவ்வெழுத்துத் திகழ்கிறது. இங்கு எந்த கோட்பாட்டாக்கமும் இல்லை பிரசாரமோ இலட்சிய வாதமோ முதன்மை பெறவில்லை வாழ்வை அதன் போக்கில் வாழ்ந்து கழித்த மனிதர்களின் கதை இது. சமூகத்தின் பெண்கள் மீதான அனைத்து ஒடுக்குமுறை வடிவங்கள் ஊடாகவும் பயணித்துத் தன்னை நிலைநாட்ட முயற்சிக்கும் ஒரு பெண்ணின் கதை இதுவாகும்.

இக்கதையில் பார்வதி, மணியம், அவர்களுடைய 6 பிள்ளைகள், பார்வதியின் தாய் தந்தையர், சகோதரர்கள், ரகுநாதன், குணம் என இன்னும் பல்வேறு பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன. பிறப்பிலேயே ஏனைய சகோதரர்களை விட கருப்பாய் பிறந்து எல்லோராலும் கருப்பியென ஒதுக்கப்பட்ட பெண், கல்வியில் ஆர்வமும் தந்தை கந்தப்புவுடன் அனைத்து வேலைகளையும் சேர்ந்து செய்கின்ற இயல்பும் வாய்க்கப் பெற்ற சுட்டிப் பெண்ணான பார்வதியைச் சுற்றியே இக்கதை பின்னப்பட்டுள்ளது. பருவமடைந்த போது அவள் கல்வியால் நிறுத்தப்படுகிறாள். அத்தான் ரகு, இவளது இளமையை அடையத் துடிப்பதும் அதனை இவள் தற்துணிவோடு எதிர்த்து நிற்பதும் கட்டாயத்தின் பெயரில் 14 வயதில் திருமணம் செய்து கொடுக்கப்படுவதும் உழைப்பில் அக்கறையில்லாத, நித்தமும் இரவில் பெண் சுகம் தேடும் கணவன் மணியத்தின் இயல்பும் அவளை, அவளது உணர்வுகளை வன்கொடுமைப்படுத்துகின்றன. ஆறு பிள்ளைகளோடு போராடி உழைத்து, சமூகசேவைகள் பலவற்றில் ஈடுபட்டு, அக்கிராமத்தில் துவிச்சக்கரவண்டி ஓடிய முதற் பெண்மணியாக, புரட்சி செய்து நிமிர்ந்து வாழத்தலைப்பட்ட போது அவள் "ஆட்டக்காரியாக, சோரம்போனவளாக" சித்திரிக்கப்படுகின்றாள்.

கணவன் இவளை விட்டு விட்டுப் போகிறான். அவன் பிள்ளைகளையும் கைவிடுகிறான். வாழ்வே போராட்டமாகி, வீடு கட்டி, ஓரளவு செழிப்பாக வாழ முற்பட்டபோது இந்திய இராணுவத்தின் வருகை, அதனால் விளைந்த துயரம், இடப்பெயர்வுகள், பிள்ளையின் (மது) துர்மரணம், காட்டு வாழ்க்கை என அவலம் தொடர்கிறது. இறுதியில் பிள்ளைகளை போராளிகள் ஆக்கி தன்னையும் போராட்டத்தோடு இணைத்துக் கொள்கிறாள்.

50 களின் நடுப்பகுதியில் இருந்தே வாழ்வில் போராடிப் போராடியே தன்னை, தன் குடும்பத்தை கட்டமைத்து நிற்கும் ஒரு பெண்ணின் கதையாக இது அமைந்திருக்கிறது. இக்கதை ஈழத்துத் தமிழ் பெண்களின் கதை அதுவும் சிங்களக் கிராமங்களோடு எல்லைப்பட்டு இருந்த கிராமத்து மக்கள் பட்ட அதிகார ஒடுக்கு முறைகளின் பல்வடிவங்களை இக்கதையில் நாம் காண முடிகின்றது. மலையகத்தில் வன்புணர்வுக்குள்ளான சிறுமியின் நிலையிலிருந்து கோவில் குளத்தில் ஆடு, மாடு மேய்த்துக் கொண்டிருந்த கிழவியை வன்புணர்ந்த கடைச்செயல் வரை இக்கதை ஆவணப்படுத்துகின்றது. கணவனால் உறவுகளால் சமூகத்தால் உடல் - உள ரீதியாக ஒடுக்கு முறைக்கு உள்ளாகும் பெண்களின் குறிப்பாக கருப்பு நிறப் பெண்களின் மனவடுக்கள் என "வடுக்களின்" சாட்சியமாக இந்தக் கதை அமைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள பௌத்த பேரினவாதம் இந்திய அமைதி காக்கும் படை எனும் பெயரில் வருகை தந்த இந்திய ராணுவம் தமிழர் தாயகத்தை குலைத்துப் போட்டனர் சிதறடித்தனர்; பொருளாதார அடிக்கட்டுமானங்களை முற்றாக அழித்தனர் என்பதை கதாசிரியர் மிகத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். துயரமே வாழ்வாகிப்போன பல குடும்பங்களின் இக்கதையில் "கஷ்டத்தின் போது யார் யார் துணை நின்றார்களோ அவர்களே உறவினர்கள்" என பார்வதி கூறுவது வாசகர் மனதைத் தொடத்தக்க விடயமாகும்.

இலங்கையில் 1956இல் உருவான தனிச் சிங்கள சட்டத்தின் வழி உருவான பல்வேறு குழப்பங்கள், அதன் பின்னரான இனவிகிதாசார வாக்கெடுப்பு, பரீட்சை வெட்டுப்புள்ளி, தனி அதிகாரம் எனத் தமிழர்கள் மீது இலங்கை இனவாத அரசு பல ஒடுக்குமுறைகளை அவிழ்த்து விட்டது. இதனால் மலையகம் தொட்டு யாழ்ப்பாணம் வரை பல்வேறு வன்முறைகள் இனக் கலவரங்கள் உருவாகின. சகோதரர்களாய் நண்பர்களாய் வாழ்ந்த மக்கள் பரமவயிரிகள் ஆயினர். பகை நிதந்தரமாயிற்று அன்றே இலங்கை பொருளாதாரமும் தொங்குநிலைக்கு உள்ளாகத் தொடங்கியது.

இப்படைப்பில் சிங்கள சட்டம், மலையகத்தில் நடைபெற்ற கலவரம், சிங்கள "ஸ்ரீ" எதிர்ப்பு, தமிழ்த் தலைமைகளின் இரட்டைநிலை, சிங்கள அரசின் தமிழர் மீதான பன்முக ஒடுக்குமுறை, போராட்ட இயக்கங்களின் எழுச்சியும் உள்நாட்டு யுத்தமும், இந்திய இராணுவத்தின் அட்டூழியங்கள், தமிழர்களின் ஆயுதப் போராட்டம் எனும் அரசியல் இயங்கு நிலை எனப் பல விடயங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றினால் பாதிக்கப்பட்ட எல்லை கிராமங்களில் வாழுகின்ற தமிழ் மக்களின் அவலமும் வவுனியா மண்ணை மையம் கொண்டு பேசப்பட்டுள்ளது. அதேபோல

- பெண்களின் பெருந்துயரம் - குடும்பம், சமூகம், அந்நியர் ஒடுக்கு முறைக்குள்ளாதல் - வயது வேறுபாடு இன்றி பாலியல் பலாத்காரத்துக்கு அல்லது ஒடுக்கு முறைக்கு அல்லது வன்கொடுமைக்கு உள்ளாதல்.
- யுத்தத்தின் ஒரு பகுதி, பெண்களை வன் கொடுமைக்கு உட்படுத்துதல்
- பெண்களின் வாழ்வுப் போராட்டம் - உடல், உள ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாதல்
- தாய்மை உணர்வு
- நடுத்தர வயதுப் பெண்ணின் பாலியல் உணர்வு

எனப் பல தளங்களில் பெண்களின் வாழ்வு பதிவு செய்யப்படுகின்றது. இவை தவிர வவுனியா மண்ணும் அங்குள்ள நீர், நீல வளங்கள், நிலவியல் தொடர்புகள், விவசாய வாழ்க்கை, காட்டுப்புற வாழ்க்கை, கல்வி நிலைகள், வணிகச் செயற்பாடுகள், வாழ்வியல் முறைகள், நம்பிக்கைகள், சடங்குகள் எனப் பலவும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதேவேளை சிறிய சிறிய விடயங்களாக அரசியல் தலைவர்கள், ஆத்மஜோதி முத்தையா அவர்களின் பேச்சுக்கள், இளைய தலைமுறை, சினிமா, உணவுகள், மனிதர்களின் பல்வேறு குணாதிசயங்கள், இயக்கம், இயக்கச் செயற்பாடுகள், தமிழ் தேசிய ராணுவ உருவாக்கம், இளைஞர்கள் கடத்தப்படுதல், ராணுவத்தின் வன்கொடுமை போன்றன போகிற போகிற போக்கில் ஆங்காங்கே பதிவிடப்பட்டுள்ளன.

தமிழ்க்கவியின் மொழி எளிமையானது. ஒற்றை வாசிப்புக்குரியது. நேரடியாக, யதார்த்தமாக உரைக்கும் கிராமத்து மனிதரின் மொழியில் பேச்சு வடிவத்தில் எழுதப்பட்டுள்ளது. வாசிப்பவரை உடனடியாக இறுகப் பிடிப்பது ஒரே மூச்சில் வாசிக்க தூண்டுவது இதுவே இக்கதையின் பலமும் பலவீனமும் ஆகும்.

> "இவளாலை குடியிருக்க வழியில்லை. அவள் அலங்காரம் கேட்ட கேள்விக்கு... எனக்கு சீல உரிஞ்சு விழுந்த மாதிரி இருந்தது. என்னத்துக்கு இந்த மானம் கெட்ட நாய, கூப்பிட்டு நாலு குடுங்கோ பாப்போம். இவள் என்ன பெம்பிளையோ பேயோ" நீண்ட உரை முடிவில்லாது போகவே பார்வதிக்கும் பயம் பிடித்தது." (ப.66)

கிராமத்து மொழியில் அமைகின்ற அதேவேளை பல இடங்களில் உரையாடல்களில் எழுத்து மொழியையும் கலந்து தமிழ்க்கவி எழுதியுள்ளமை கவனத்திற்குரியது. இது கதையின் உரையாடல் போக்குக்கு தடையாக அமைந்துள்ளது.

அதேவேளை கதையின் இலட்சியப் பாங்கிலான ஒன்றாகவும் அமைந்துள்ளது. பெற்றவர்கள் தாமும் போராட்டத்தில் இணைந்து தம் பிள்ளைகளையும் போராட்டத்தில் இணைக்க வேண்டும் என்ற எண்ணத்தை விதைக்கின்ற அல்லது தூண்டுகின்ற படைப்பாக இது அமைந்துள்ளது. அக்காலத்தின் ஒரு பிரசார உத்தி முறையாக இக்கதை அமைந்தது. போராளியாகிப் போன மகனை மகனைத் தேடியலைந்து காணாது, எப்போதும் கண்களினால் காணாது - காணவே காணாது போன மாவீரனது தாயினுடைய மனநிலையை உள்ளார்ந்த உணர்வை வெளிப்படுத்துகின்றது. "இனி படிச்சு என்ன செய்கிறது" எனக் கூறி தேச விடுதலையே யாவற்றுக்கும் அடிப்படையென நம்பும் இளைய மகனைத் தானே போராளிகளின் முகாமுக்கு அழைத்துச் சென்று போராளியாக்கி எல்லா போராளிகளையும் தன் பிள்ளைகளாக வரித்துக் கொள்ளும் பார்வதியின் இலட்சிய வாழ்வோடு கதை நிறைவுறுதல், தேச விடுதலையை அவாவும் மனிதர்களின் குரல் களாகவே அமைந்துள்ளது. இவ்வாறு எழுதியும் வாழ்ந்தும் நின்ற தமிழ்க்கவி, யுத்த மவுனத்தின் பின் திசை மாறிய பறவை யானது வேறு ஒரு கதையாகும்.

"இனி வானம் வெளிச்சிரும்" எனும் தமிழ்க் கவியின் இப்படைப்பு தற்கொலையை தோல்விகளின் தீர்வு என நம்பும் மனிதர்களின் எண்ணங்களுக்கு சாவு மணி அடித்து "போராடி வாழ்" என்பதை சத்தம் இன்றி வாழ்ந்து காட்டுகின்றது. தோல்விகளில் துவண்டு போகாத மனிதர்களின் குறிப்பாக பெண்களின் கதையாய் நேர் மனப்பாங்குடன் எழுதப்பட்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டில் இறுதி 50 வருட ஈழத் தமிழர்களின் வாழ்வை வவுனியா மண்ணில் காலூன்றி நின்று ஓரளவேனும் படம் பிடித்துக் காட்ட இக்கதை முற்பட்டுள்ளது. நீண்ட காலப் பகுதியை ஆவணப்படுத்தினும் இக்கதை ஆழ்ந்த அகன்ற விடயங்களை தன்னுள் எடுத்தாளவில்லை. தடுமாறும் மனதுடன் வாழ்வை வீம்புடன் எதிர் கொள்ளும் பெண்ணின் கதையாக, ஒற்றைத் தன்மையுடனே இது எழுதப்பட்டுள்ளது.

தேசியத்தின் பால் உள்ள ஈர்ப்பு உள்ளார்ந்ததாக இன்றி மேம்போக்கான, உணர்ச்சிவசப்பட்ட தன்மையுடனையே இக்கதையில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமராசா அஜந்தகுமார்

# தமிழ்க்கவியின் நாவல்கள்


## தமிழ்க்கவி ஓர் அறிமுகம்

வவுனியாவில் உள்ள சின்னப்புதுக்குளம் என்ற சிறிய கிராமத்தில் கந்தப்பு, லட்சுமி ஆகியோரின் இரண்டாவது பிள்ளையாக 19.07.1947 இல் பிறந்தார். இவரது இயற்பெயர் தமயந்தி சிவசுந்தரலிங்கம். பதினொரு உடன் பிறப்புகளுடன் வளர்ந்தார். தந்தையாரினால் கிடைத்த வாசிப்புப் பரிச்சயத்தின் விளைவாக பத்திரிகைகள், சஞ்சிகைகளுடன் அறிமுகம் ஏற்பட்டது. அதனால் 13, 14 வயதிலேயே எழுத்துத்துறைக்குள் புகுந்துவிட்டார். வீரகேசரி, சிந்தாமணி ஆகியவற்றில் இவரின் ஆரம்பகாலப் படைப்புகள் பிரசுரமாகின. ஐந்தாம் வகுப்பிற்கான அரசாங்கப் பரீட்சையில் மாகாணத்தின் முதல் மாணவியாகத் தேறியிருந்தபோதும் ஒன்பதாம் வகுப்புடன் இவரது கல்வி தடைப்பட்டுப் போனது. பதினான்கு வயதில் திருமணம் செய்து பதினைந்து வயதிலேயே தாயாகிய இவர் முப்பத்தியிரண்டு வயதில் பாட்டி யும் ஆகிவிட்டார். ஆனால் 43 வயதில்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைகின்றார். இயக்கத்துடனான இவரது இணைவு சிறுவயதில் இருந்த கலையார்வத்தை மூண்டெரியச் செய்தது. 1956 இல் தமிழரசுக்கட்சியின் மாநாட்டில் எட்டுவயதுச் சிறுமியாகக் கலந்துகொண்டது முதல் 62 வயதில் முள்ளிவாய்க்காலின் இறுதிநாட்களை அனுபவித்தவர். அந்தக் காலங்களையும் கணங்களையும் படைப்பில் கொண்டுவரும் துணிவும் துடிப்பும் மிக்கவராக இன்றும் தொடர்ந்தும் இயங்கிவருகின்றார்.

மிகச்சிறிய வயதிலேயே பெரிய அனுபவங்கள் இவருக்கு வாய்க்கத்தொடங்கின.

"ஏழுவயதிலேயே சேனைப்புலவுக்கு குரங்குக் காவல். மந்துக்காடுகளில் மாடு கலைக்க, வட்டுக்காய் குருவித்தலைப் பாகற்காய் ஆய, வற்றுக்குளத்தில் மீனுக்கு கரப்புக் குத்த, சீலைவார, ஊர்ப் பொடியளோடு கிட்டியடிக்க, மாபிளடிக்க, அப்பு பன்றிக்கு வெடிவைத்தால் நெருப்புமூட்ட, வாட்ட, மான்மரைக்கு வெடிவைத்தால் இறைச்சி விற்பனையைப் பார்க்க, காடுகளில் கதிகால் வெட்ட, அப்புவோடு காட்டுக்குப் போக என்றெல்லாம் இயங்கியவள் மேலதிகமாக ஒருமைல் தொலைவிலிருந்த பாடசாலைக்கும் போவேன். பாடசாலை விட்டு வந்ததும் சாணியள்ளி பட்டிகூட்ட, மாடுகளைச் சாய்த்துப் பட்டியடைக்க என்று முடிக்க எப்படியும் இருளும். இருண்டதும் சாப்பிட்டுவிட்டு நேரத்தோடு படுத்து நேரங் கழித்து எழுவேன். அப்பு செல்லம், அவரோடுதான் உறங்குவேன். அவரோடு காடு கரம்பையெல்லாம் திரிவேன். வேட்டைக்காடுகளில் தடயம் பார்ப்பது எல்லாம் அத்துப்படி."

மாற்று இயக்கமொன்றில் இருந்த மகனை விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்து மீண்டும் கிடைக்காமல் அவர்களிடம் தேடியலைந்து திரிந்தும் மீண்டும் ஒரு மகன் இயக்கத்திற்குச் சென்றுவிட அவனைத்தேடி அலைந்தும் விடுதலைப்புலிகள் அமைப்பினரை அடிக்கடி அவர் சந்திக்க நேர்ந்தது. சிறுவயதில் இருந்து சிங்களமக்கள் பற்றி அறிந்திருந்த கதைகளும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவலச்சித்திரங்களும் எதிர்ப்புணர்வை அவரிடம் இயல்பாகச் சேர்த்திருந்த. இரண்டு மகன்களும் விடுதலைப்புலிகளுடன் இருந்து வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்கள். இறுதியில் இவரும் இயக்கத்தில் இணைந்துகொண்டார்.

> அப்படி அழுதாலும் மற்றவர்கள் புகழ, வீரத்தாயாக வீரத் திலக மிட்டு மகவையும் மற்றவர்களையும் போருக்கு அனுப்பி விட்டு வீட்டிலிருந்த புறநாநூற்றுத் தாயாக நான் இராமல் நானும் தொடர்ந்து போர்ப்பணிகளில் ஈடுபட்டேன். ஏனென்றால் என்னிடம் மீதமிருந்த ஒரேமகனும் தானும் இயக்கத்துக்குப் போகப்போவதாகச் சொன்னான். "என்ன மசிர் வாழ்க்கை! இவங்களுக்காக இவங்களைக் காப்பாற்ற நான் எவ்வளவு துன்பமனுபவித்தேன். இவங்களுக்காகத் தானே வாழ்ந்தேன். இவங்களே போனா நான்?... இயக்கத்துக்குப் போக எனக்கும் தெரியாதா" என்ற வீம்பு அதுவரை இயக்கத்தின் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிறு ஊதியத்துக்காக வேலை செய்துகொண்டிருந்த என்னை முழுமையாக இயக்கத்திற்குப் போக வைத்தது.

சிறுவயதிலேயே எழுத்து ஆர்வம் இருந்தாலும் 14 வயதிலே இல்லறத்துள் நுழைந்துகொண்ட சுமையின் அழுத்தத்தால் எழுத்தை மறந்து இருந்தவர்க்கு விடுதலைப்புலிகள் அமைப்பினருடனான இணைவு கலை இலக்கிய ரீதியில் எழுச்சியொன்றுக்கு ஆட்படுத்தியது எனலாம். அரசியல் தேவைகளுக்காக மேடை நாடகங்களை எழுதத்தொடங்கினார். அரசியல் துறைக்கு சென்றதும் குறிப்பாக, நூலகப்பகுதிக்கு மாற்றப்பட்டதும் அவரது வாசிப்பு தீவிரமாகியது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இதழியல் பட்டயக்கற்கை, தமிழீழ நீதிமன்ற சட்டவாளர், கணினிக்கற்கை என்று முதிர்வயதிலும் தன்னைப் புதுப்பிக்கும் ஆளுமையாக இருந்திருக்கின்றார். சிறுவயதில் எழுதிய இவர், மீண்டும் புலிகளின் குரல் மூலம் மக்கள் மத்தியில் அறிமுகமாகத் தொடங்கினார்.நாடகங்களில் நடிக்கத்தொடங்கினார். நாட்டார் வழக்காற்றியல் சார்ந்து அருமையான தேடல்களில் ஈடுபட்டவராகவும் விளங்கினார். இவரது வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அதற்குச் சான்றாக விளங்கின. "ஈவ்" என்ற நாவலைப் படித்ததும் தனது அனுபங்களை எழுதவேண்டும் என்று தீவிரம் கருக்கொள்ள "இனிவானம் வெளிச்சிரும்" என்ற நாவலை எழுதினார். *1995* ஆம் ஆண்டு அந்நாவல் எழுதப்பட்டாலும் பலரது வாசிப்புக்குப் பின்னர் *2002* இல் நூல்வடிவத்தில் வெளிவந்ததும்தான் தமிழ் இலக்கிய உலகில் "தமிழ்க்கவி" என்ற பெயர் சற்று ஆழமாக அறிமுகமாகியது எனலாம்.

போரின் பின்னரே இயக்கத்தில் இருந்தவர்களும் மாற்றுக்கருத்துகளை முன்வைக்கின்றார்கள் என்று அவர்களது அரசியலையும் வாழ்வையும் கேள்விக்கு உள்ளாக்கி வருவதனைக் காணும் எமக்கு, தமிழ்க்கவி அவர்கள் இயக்க காலத்திலேயே தன்னுடைய சுபாவத்தினால் மாற்றுக்கருத்துகளை எழுதிவந்தவர் என்பது கவனத்திற்குரியது.

> ஈழநாதம் எனக்கொரு பத்தியை ஒதுக்கியது. "காரசாரம்" என்ற பெயரில் இயக்கத்தின் பலதுறைப் பொறுப்பாளர்களுக்கு மறைமுகமாகச் சூடு வைக்கவும் மக்களுடைய பிரச்சனைகளை வெளியே கொண்டுவரவும் முடிந்தது. நான் யாருக்கும் அஞ்சவில்லை! தலைவர் எனக்கு ஆதரவாக நின்றார்! சம்பந்தப்பட்டவர்களுக்கு கூட்டங்களுக்கு அழைப்பும் அறிவுறுத்தல்களும் போனதையும் அறிவேன். "தமிழ்க்கவி அன்ரியா.. அவ அறிஞ்சா பேப்பரில வரும் கவனம்" என்ற கருத்து பொதுவாக நிலவியது. மக்களுக்கு எதிராக இயக்கப் பொறுப்பாளர்கள் அநீதி இழைத்தபோதெல்லாம் அதைத் தலைவர்வரை கொண்டுசென்று தீர்வு பெற்றுக் கொடுத்திருக்கிறேன். அது இன்றைக்கும் எனக்குப் பெருமையாக உள்ளது. அதே மரியாதையுடன இன்றும் என்னை மக்கள் நடத்துகிறார்கள்.

சிறுவயதிலேயே வாழ்க்கையென்னும் போராட்டத்துக்குள் அகப்பட்டுக்கொண்ட தமிழ்க்கவி பிள்ளைகளை போராட்டத்தில் பறிகொடுத்து தானும் அந்தப் போராட்டத்தில் இணைந்துகொண்டவர். தனது மாற்றுக்கருத்துகளை அச்சமின்றிப் பேசியும் எழுதியும் வருபவர். ஒரு பெண்ணாகவும் வரலாற்றின் சாட்சியாகவும் போராளியாகவும் அவரது குரல்கள் படைப்புகளின் வழி உன்மத்தங்கொண்டு வெளிவருகின்றன. அவரது சிறுகதைகள், நாவல்களின் ஊடாக அவரது ஆளுமையை இனங்காட்டுவதே இந்த ஆய்வின் நோக்கமாகின்றது.

**தமிழ்க்கவியின் படைப்புகள்**

இனி வானம் வெளிச்சிரும் *(2002)*, இருள் இனி விலகும் *(2004)*, ஊழிக்காலம் *(2013)*, இனி ஒரு போதும் *(2017)* ஆகிய நான்கு நாவல்களும் நரையன் *(2022)* என்ற சிறுகதைத்தொகுப்புமே நூலாக வெளிவந்த தமிழ்க்கவியின் படைப்புகள். கரும்புலிகள் பற்றிய "தாழமுக்கம்" என்ற நாவல் உள்ளிட்ட பிரசுரமாகாத படைப்புகள் இன்னும் இவரிடம் உள்ளன. எழுபத்தைந்து வயதிலும் தொடர்ந்து எழுதிவருகின்றார். நாட்டார் வழக்காற்றியல், புனைகதை, கவிதை, நாடகம், பேச்சு, பத்தி என்று பல வகைகளிலும் தனது ஆளுமையை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் வழி வெளிப்படுத்தி வருகிறார்.

**தமிழ்க்கவியின் நாவல்கள்**

தமிழ்க்கவியின் நாவல்களில் இனி வானம் வெளிச்சிரும், இருள் இனி விலகும், ஊழிக்காலம், இனி ஒரு போதும் ஆகிய நான்கு நாவல்களே நூலுருப் பெற்றுள்ளன. தாழமுக்கம் என்ற கரும்புலிகளைப் பற்றிய நாவல் நூலுருப்பெறவில்லை. தனது முதலாவது நாவலிலேயே பலரது கவனத்தையும் பெற்றது மட்டுமல்லாமல் பரிசில்களையும் தமிழ்க்கவி அவர்கள் பெற்றிருந்தார்.

மிகச்சிறிய வயதிலே தமிழரசுக்கட்சியின் மாநாட்டில்*(1956)* பங்குகொண்டது முதல் தனது கிராமத்தில் சிங்கள ஆக்கிரமிப்பையும் வன்முறையை யும் அனுபவித்து அவர்களின் மீது கோபத்தைச் சேகரமாக்கிக்கொண்டிருந்த ஒருவர், தனது பிள்ளைகளை விடுதலைப் போரிற்குக் கொடுத்துத், தானும் *43* வயதிலே போராளியாகி *2009* போரின் முடிவென்னும் ஊழிக் காலம் வரை பலதுன்பங்களைத் தொடர்ந்து அனுப வித்து வலியேறிக் கிடந்த உள்ளத்தில் இருந்து கரை புரண்டோடிய அனுபவங்களே நாவல்களாகத் தோற்றங் கொண்டன.

இவரது நாவல்கள் உண்மை அனுபவத்தில் இருந்து வரலாற்றின் சாட்சியமாக மேற்கிளம்புகின்றன. சுயசரிதையைப் படிப்பதைப் போன்ற விவரணத் தன்மையும் புனைகதைகளை விட திருப்புமுனைகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட வாழ்க்கை அனுபவங்களும் நாவல்களில் வெளிப்படுவதைக் காணலாம். பார்வதி என்ற முதிர்பெண்ணே (இனி இருள் விலகும் தவிர) மூன்று நாவல்களினதும் பிரதானமான பாத்திரம். இந்தப் பாத்திரங்களின் தொடர்ச்சித்தன்மையும் யதார்த்தமும் வாசகனை எளிதில் பிணைத்துவிடுகின்றன. இறுதிப் போருக்கு முந்திய நாவல்களில் வெளிப்பட்ட தமிழ்த் தேசியத்தின் குரல் பின்னைப்போர் நாவல்களில் மங்கி மாற்றுக்குரலாகவும் மாறும் தோற்றத்தையும் இனங் காணமுடிகின்றது. போர்வாழ்வுக்குள் ஒரு பிரதிநிதியாக இரத்தமும் சதையுமாக வாழ்ந்த தமிழ்க்கவியின் நாவல்கள் இனவரைவியல் ஆவணங்களாக மாறும் இயல்புகொண்டவை என்பதற்குத் தமிழ்க்கவியின் நாவல்களும் சான்றாகிநிற்கின்றன.

**இனவரைவியல்**

ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தை அல்லது அவர்களின் பண்பாட்டை விவரிக்கும் கலை அல்லது இனவரைவியல் ஆகும். ஒரு தனிப்பட்ட சமூகத்தின் பண்பாட்டை முழுமையாகப் புரிந்துகொண்டு அவற்றைப் புரிந்து கொண்டு அவற்றை முறையாகத் தொகுத்து வழங்குதல் இன வரைவியலின் நோக்கமாதலால், இது அடிப்படையில் வருணனைத் தன்மை கொண்டதாகவே அமையும் என்று பக்தவத்சல பாரதி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

ஒரு சமுதாயத்தின் தெளிவான வரைபடத்தை இனவரைவியல் கூறுகள் சேர்ந்து உருவாக்கும் போது பண்பாடும் நாகரிகமும் உருத்திரண்டு இருப்பதைக் காணலாம். சமூகப் பிராணிகளில் விசேட அம்சமுள்ள எழுத்தாளன் இந்தச் சமூகத்தில் ஜீவித்துக்கொண்டு கண்டும் கேட்டும் உற்றும் உணர்ந்தும் ஆக்கும் படைப்பு களில் இனவரைவியலும் உருத்திரள்வது இயல்பு ஆகும். ஆயினும் ஆக்குபவனின் எழுத்து அரசியல் ஊடுபாவாய் செயற்படும் போது பார்வைகளும் கணிப்புகளும் நினைக்கமுடியாதவாறு மாற்றம் அடையலாம்.

**இனவரைவியலும் இலக்கியமும்**

இனவரைவியலுக்கும் இலக்கியத்துக்கும் இடையில் ஒற்றுமைகளும் தனித்து நிற்கும் வேறுபாடு களும் காணப்படுகின்றன. இனவரைவியல் விஞ்ஞான பூர்வமானதாக விளங்க இலக்கியம் அழகியல்பூர்வமாய் படைப்பாளியின் பார்வைக்கு ஏற்ப உருவாக்கப்படுகிறது. படைப்பாளி ஒருவன் தன் கருத்தொன்றை வெளிப் படுத்தும் அதற்கேற்ற சூழலுடன் பண்பாட்டுடன் பொருந்தக் கூடிய மொழியுடனே தனது கருத்தைப் புலப்படுத்த முடியும். கண்டு கேட்டு உற்று உணர்தலில் அவனது உள்ளே கரந்திருக்கும் அறிவும் இயங்கும்போது தன்னை அறியாமலே இனவரைவியலின் பல்வேறு கூறுகளைப் பயன்படுத்துகின்றான்.

**இனவரைவியலும் நாவலும்**

நாவல் என்பது பரந்த களம், காலம், பாத்திரங் களுடன் இயங்குவது. ஒரு நாவலுக்கு கடின உழைப்பும் ஒரு வகையான கள ஆய்வும்புத்தியும் அனுபவமும் தேவைப் படுகின்றது. திட்டமிடுதல் என்பதற்கான சாத்தியம் நாவலில்தான் அதிகம் உண்டு. இன வரைவியல் என்பது கடினமான கள ஆய்வின் மூலம் திரட்டப்படுவது அதுபோலவே நாவலும். இந்தவகையில் நாவல் ஒன்றிலேதான் இனவரைவியலின் திரட்டிய அம்சங் களை அதிகம் இனங்காணலாம். படைப்பாளி யாலும் பயன்படுத்த முடியும். இனவரைவியல் அம்சங்களை ஒரு நாவலாசிரியன் தனது சுய அனுபவத்துக்கு ஊடாகவும் களஆய்வு முறைக்கு ஊடாகவும் நூலறிவு மூலமாகவும் அறிந்து எழுதப் புகுகின்றான் எனபதே ஆய்வாளர்களின் கருத்து.

ஏனைய இலக்கியவகைகளை விட இன வரைவியலை முழுமையாகப் பிரதிபலிக்கக் கூடியது நாவலே ஆகும். இதனை ஆ.சிவசுப்பிரமணியன்,

> "ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பில் வாழும் மனிதர் களின் வாழ்வியல் பிரச்சினைகளையும், உளவியல் பிரச் சினைகளையும் மையமாகக் கொண்டெழும் நாவலானது அம்மனிதர்களினதும் சமூகத்தினதும் பண்பாடு, பழக்க வழக்கங்கள், சமயவாழ்வு மற்றும் வாழ்வியல் அம்சங் களை முழுமையாகப் பிரதிபலிப்பது அவசியமாகும். அப்பொழுதுதான் அந்நாவலைப் படிக்கும் வாசகன் அதில் இடம்பெறும் சமூகச் சூழலோடு ஒன்றிவிட முடியும். அத்துடன் அந்நாவலில் இடம்பெறும் பாத்திரங்கள், அவை சித்திரிக்கப்படும் காலச்சூழலோடு பொருந்தி நிற்கும்."

என்று குறிப்பிடுகின்றார்.

இங்கு தமிழ்க்கவியின் நாவல்கள் தமிழர் வரலாற்றோடு பின்னிப் பிணைந்து இனவரைவியல் ஆவணமாக நிற்கும் தகுதியுடையனவாகின்றன என்பதை முற்குறிப்பாகவே சொல்லிவிடுகின்றேன்.

**இனி வானம் வெளிச்சிரும்**

தமிழ்க்கவி என்னும் படைப்பாளியைத் தமிழுலகம் அறியவைத்த முதலாவது படைப்பாக 2002 ஆம் ஆண்டு அறிவமுது வெளியீடாக "இனி வானம் வெளிச்சிரும்" என்ற நாவல் வெளிவந்தது. புற நானூற்றில் நாம் படித்த வீரத்தாயாய் தமிழ்க்கவி நமக்குத் தோற்றம் தருகின்றார். தன் பிள்ளையின் வீரமரணத்தை கொண்டாடும் தாயாகவும் ஒவ்வொரு போராளியிலும் தன் மகனைக் காணுகின்ற தாயாகவும் தமிழ்க்கவியைக் காணவைக்கின்றார். பார்வதி என்ற தாயின் வாயிலாக விரியும் போராட்ட வரலாற்றைக் கூறு கின்றது. அதில் வெளிப்படும் அவரது மனப்போராட்டங் களும் அனுபவங்களும் வியப்பினையும் பெண்மையின் புதிய இயல்புகளையும் எமக்குக் காட்டுவன. சங்க காலத் தாய் விலகி நின்று " உவகைக் கலுழ்ச்சி " அடைந்தாள். ஆனால் பார்வதியோ தானும் இணைந்து உவகைக் கலுழ்ச்சி அடையும் புத்தனுபவத்தை உண்மையின் சாட்சியாய் நின்று தருகின்றார். இது தமிழ் நாவலின் புத்தனுபவப் பக்கம்.

> இது எனது முதலாவது கதை. இது என்னுடன் இருந்து என்னைத் தாக்கி என் உணர்வுகளைக் கிழித்துத் தைத்த ஒரு விவகாரம்.என் அனுபவங்களைக் கலந்து இக்கதையை எழுதினேனா? இக்கதையில் எனது அனுபவங்களைக் கலந்தேனா என்பதும் புதிரல்ல. இனவாத அரசின் செயற்பாடுகளால் எழும் வன்முறை கள். அடிமனதில் ஆழப் புதையுண்டு போய் அதுவே சந்ததி வழியாக காவிச் செல்லப்பட்டு இயலுமை உண்டான போது வெளிப்போந்து வீரியம் பெறுகிறது. என் மகனும் இவ்வெளிப்பாட்டின் ஒரு குறியீடே. இவன் போராடப்போனபோது நான் எனக்குள் வருந்தியதுண்டு எனக்குச் சொல்லாமல் போய்விட்டான் என்பதற்காக. ஒவ்வொரு போராளியின் பின்னணியிலும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திரம் உண்டு. அந்தப் பிஞ்சு உள்ளத்தின் ஆதங் கத்தை மதித்தேன். ஒரு நாள் அவனைத் துப்பாக்கி ஏந்தியவனாய் சீருடையில் பார்க்கத் துடித்தேன். ஆகாயக்கடல் வெளிச்சமரில் அவன் ஆகுதியான செய்தி தான் கிடைத்தது. இது எனது மகனின் கதை; (இனிவானம் வெளிச்சிரும்:1)

இந்த நாவலில் ஆண்களின் பொறுப்பற்ற தன்மையையும் பெண்களின் வலியையும் வலிகடந்த பெண்களின் வலிமையையும் துணிவையும் வறுமை யோடு போராடுவதையும் விவசாயத்தில் காட்டும் நாட்டத்தையும் தமிழரசுக் கட்சியின் 1956 இல் நடந்த மாநாட்டுப் பதிவுகளையும் 1958 இல் இடம்பெற்ற இனக் கலவரத்தையும் சிங்கள மக்களுடனான நல்லுறவை யும் அவற்றிற்கு வந்து சேர்ந்த விரிசல் களையும் தாய்மையின் பரிவையும் ஏக்கத்தையும் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைதலையும் இயக்கங்களின் அடாவடித்தனங்களையும் இந்திய இராணுவத்தின் செயற்பாடுகளையும் எனப் பல விடயங் களை கண்முன் கொண்டு வந்துள்ளார். இந்த எழுத்து களில் பெருமிதம் என்ற மெய்ப்பாடு கரந்து வெளிப்படும் ஊற்றினைத் தெற்றென உணரமுடிகின்றது.

**ஆண்களின் பொறுப்பற்றதன்மை**

வறுமையின் கோரப்பிடியில் ஊரெல்லாம் கடன்பட்டு சாப்பாடு தேடி சமைத்துப் போட சாப்பிடுவான். உழைப்பிலும் நாட்ட மில்லை. வீட்டுவேலையிலும் நாட்டமில்லை. தெரிந்ததெல்லாம் மனைவியின் கடமைகள் என்னென்ற பழைய விதிகள்தான்.(6)

**பெண்ணின் உழைப்பு**

நீர்பாய்ச்ச மருந்தடிக்க பசளை வீச, காவலுக்கு எனப் பெரும்பொழுதை வயலில் பார்வதியே கழித்தாள். (11)

**ஆணின் பாலியல் தொல்லை**

அவனை எதிர்க்க அவளால் முடியவில்லை. கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக அருவருக்கத்தக்க இந்த வதையை அவள் அனுபவித்துத்தானே வருகிறாள். வயிற்றைப் புரட்டியது. கண்களை நீர் மறைத்தது. ஒரு மரம்போல விழுந்து கிடந்தாள்(15)

**1958 இனக்கலவரம்**

தமிழர்கள் உரிமைக்குரலெழுப்பிச் சிலநாட்களிலேயே இனப்படுகொலை தொடங்கிவிட்டது. கோவில்குளத்துக்கும் சின்னப்புதுக்குளத்துக்கும் இடையே கூட பதற்றம் நிலவியது. (28)

சில நாட்களின் பின் ஏராளமான மலையக மக்கள் வவுனியாவுக்கு வந்தனர். ஏராளமான பயங்கரமான கதைகளை யெல்லாம் கூறினார்கள். அவர்களில் காயமடைந்தவர்களும் இருந்தார்கள். (29)

பார்வதிக்கு பூவாயி ராமாக்கா இருவரும் அழுவதற்கு சிங்களவன் காரணம் என்று தெரிந்தது. விவரம் புரிய வில்லை(30)

**சீதன எதிர்ப்பு**

"உங்களால உழைச்சுக் காப்பாத்த ஏலு மெண்டாக் கட்டுறதேயொழிய ..பொம்பிளைச் சொத்திலவாழ நினைக்கிறது கேவலம்"(126)

**ஆண்மையம் பற்றிய எதிர்ப்பு**

"என்ன பிள்ள" என்று கேட்டார் கந்தப்பு

"ஆம்பிளப்பிள்ள"

"ஆருக்கம்மா"

"கபிலண்ணைக்கு"

"அது சரி சுமந்து, நொந்து பெத்தவள் ஆரோ. "கபி லண்ணைக்குப் பிள்ளை பிறந்திருக்காம்" மது நக்கலடித் தான்(145)

**வன்னி மக்களின் உணவு**

வன்னிப்புற கிராம விவசாயிகளுக்கே உரியதான உணவுப் பெருமையது. பச்சையரிசிச் சோறும் தயிரும் மான், மரை, பன்றி இறைச்சியும் வத்துக்குளத்து மீனும் பாலைப்பாணி இலுப்பப் பாணி தேன் வகையும் காளான் அல்லையும் கொட்டியும் தேவையான மரக்கறி, இலக்கறி... என்ன குறை? வன்னி மண்ணின் வளம் இயல்பாகவே அங்கு வாழும் மக்களுக்கு கர்வத்தை ஏற்படுத்துவது என்பது நூறுக்கு நூறு உண்மை(152)

**அப்பாவியாக கொல்லப்பட்ட மகன் பற்றிய தாயின் பதிவு**

"இல்ல நான் காப்பாத்தேல்ல... நீ கேட்ட நேரம் இயக்கத்துக்கு விடுவன் எண்டு சொன்னனான்... நீ கேக்கையுக்கை விடேல்ல.. நான் பாவி உன்ரை ஆசையை நிறைவேற்றியிருந்தா... நீ இப்படி நிராயுத பாணியா...ஏதும் செய்ய முடியாதவனா..ஒரு சாவு உனக்கு வந்திருக்காது. ..இனி என்ரை ஆயுளுக்கும் நான் வேதனைப்பட வைச்சிட்டன்...எல்லாம் என்னால. உன்னைக் கொண்ட பாவி நான்தான்."தூக்கம் வரும்வரை அழுதாள் பார்வதி. (154)

**மகனைப் போராட்டத்தில் சேர்க்கும் தாய்**

படிக்கவைச்சு உத்தியோகம் தேடி நிறைய சம்பாதித்து நல்ல மனைவியை அடைந்து, சற்புத்திரர் களைப் பெற்று, அவர்களை வளர்த்து, பேரப்பிள்ளை களைத் தோளிலும் மடியிலும் போட்டு ஆராட்டி பாட்டி கதை சொல்லி பாலும் சோறும் ஊட்டி கொஞ்சி மகிழ்ந்து அவர்களின் பாசத்தில் திணறி...சாதாரண மனிதமனம் விரும்பும் சாதாரண ஆசைகள் பார்வதிக்கும் இருந்தது. ஆனால் அவளுக்கு அன்பான கணவன் கிடைக்க வில்லை. பல மடங்கு உயர்வான பிள்ளைகள் கிடைத் தார்கள். ஆனால் அவர்களோடு சேர்ந்து வாழத்தான் கொடுத்துவைக்கவில்லை. அவளுடைய கஸ்டங்களை யெல்லாம் நீக்க அவர்கள் முன்வந்த போது தாயினும் மேலான லட்சியம் அவர்களைத் தன்னோடு சேர்த்துக் கொண்டது. பொங்கிவந்த கண்ணீரை அடக்க முடியாமல் பார்வதி தவித்தாள். ஆனாலும் சுதனை அழைத்துக் கொண்டு முகாமுக்குப் போனாள்.

"இவன் உங்களோட வாறானாம் சேர்த்துக் கொள்ளுங்கோ." என்றவனை வியப்புடன் பார்த்தான் அவன். "அம்மா இப்ப இவர் மட்டும்தானே உங்களோட இருக்கிறார். "ஓம் ஆனா இனி நீங்கள் எல்லாம் என்னோட இருப்பியள்தானே.." (180)

**வீரமரணம் அடைந்த மகனைப் பற்றிய தாயின் நினைவு (உவகைக் கலுழ்ச்சி)**

"என் பெருமைக்குரிய மகனே..." என்றாவது ஒரு நாள் உன்னை மலர்மாலையுடன் சந்திப்பேன். அந்தச் சந்திப்பிற்குரிய தைரியத்தை மனத்துணிவைத் தாங்கும் வலிமையை எனக்குத்தா என்று ஒவ்வொரு நாளும் இறைவனை வேண்டினேன். ம்...இறைவன் எனக்கு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அந்தத் துணிவை தர முடியாது என்று நினைத்தானோ என்னவோ ஈச்சங்குளத்தில் உனக்கு இடமில்லாமலே செய்துவிட்டான். நாலு புலிவீரர் உன்னைச் சுமந்துவரும் காட்சி என் என் கனவோடு நிறைவடைந்து போனது. நடு கல்லாய் நீ....

இறுதியாக என்ன பேசியிருப்பாய். இனி எப்போதும் காணமுடியாத உன் அம்மாவை, உன்னைத் தேடி ஒவ்வொரு களமாய் அலைந்தும் காணமுடியாமல் போய்விட்ட அம்மாவை நீ எண்ணிக் கலங்கியிருப் பாயா? கண்ணீர் விட்டு அழுதிருப்பாயா? இல்லை இருக் காது. நீதான் இலட்சியப் பயணம் போனவனாயிற்றே. தமிழீழ மண்தானே உன் தாயைவிடப் பெரிதுனக்கு. உன் தமிழீழ வேட்கைக்கு உயிருடன் சேர்த்து உடலையும் கொடுத்துவிட்டாய். இதயத்தில் குண்டு பாய்ந்ததோ? இல்லை உடலையே சிதறவைத்துக் குண்டு பொழிந்ததோ? எப்படியோ உன் உறுதியை அது சிதைக்கவில்லை என்றுமட்டும் உணர்கிறேன். (182)

"மீன் உண் கொக்கின் தூவி அன்ன
வால் நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்
களிறு எறிந்து பட்டனன்" என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும் பெரிதே கண்ணீர்
நோன் கழை துயல்வரும் வெதிரத்து
வான் பெயத் தூங்கிய சிதரினும் பலவே.

என்ற புறநானூற்றுப் பாடலில் உள்ள தாயின் உவகைக் கலுழ்ச்சியைத் தாண்டிய செய்தியை இந்நாவல் வழி தமிழ்க்கவி வெளிப்படுத்தியுள்ளார்.

**இருள் இனி விலகும்**

"இருள் இனி விலகும்" தமிழ்க்கவியின் இரண்டாவது நாவல். 2004 ஆம் ஆண்டு அறிவமுது பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. இனிவானம் வெளிச்சிரும் நாவலில் புறநானூற்றுத் தாயிலும் வீரமும் தெளிவும் கொண்ட பார்வதியைத் தரிசித்ததைப் போலவே வீரம் மிக்க பெண் போராளிகளின் வாழ்வை மையமாகக் கொண்டு அவர் களின் இலட்சியத்தையும் போர்க்குணத்தையும் வெளிப் படுத்துவதாக இந்நாவலைப் படைத்துள்ளார். "முந்நீர் வழக்கம் மகடூஉவொடு இல்லை" என்ற வட்டங்களைத் தாண்டிய புதிய பெண்களின் எழுச்சியை இந்நாவல் வழி சித்திரித்துள்ளார்.

"இது ஒரு வரலாற்றுப் பதிவு. என்றென்றும் என துள்ளத்தில் அழியாமல் நிலைத்துவிட்ட வடு. இக்கதை யில் வரும் கதா பாத்திரங்கள் கற்பனையல்ல. என்னுடன் உண்டு, உறங்கி, உறவாடிக் களிப்பில் சிரித்து, கனவில் மிதந்து, கோபத்தில் குதித்து, பிரிவில் அழுது அடிப்படை மனித உணர்வுடன் வலம் வந்தவர்கள்."

கடலிலே பயிற்சிசெய்பவர்களாய் தம் குடும்பத்தின் இன்ப துன்பங்களை மறந்தவர்களாய் ஆண்களே சோர்ந்து ஒதுங்கும் பயிற்சிகளில் கூட தமது ஆற்றல் களை வெளிப்படுத்துகின்றவர்களாய் உளவிலே நுண் ணாற்றல் கொண்டவர்களாய் பலதுறையிலும் தமது ஆளுமையைக் காட்டுபவர்களாய் இந்நாவலில் வரும் பெண்கள் நிரூபித்துநிற்கின்றார்கள். அவர்களின் வாழ்வு தரும் சித்திரமும் போராட்டமும் களங்களும் உயிர்த் துடிப்புமிக்கவை. இந்நாவலில் வரும் பாத்திரங் கள் என்று பின்னிணைப்பாக வீரமரணம் அடைந்த 20 போராளிகளின் புகைப்படங்களும் தகவல்களும் தரப்பட்டுள்ளமை இந்நாவலின் உண்மைத்தன்மையை வெளிப்படுத்துகின்றது. இவ்விடத்திலே பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் கருத்துகள் ஞாபகத்திற்கு வந்துசேர்ந்து விடுகின்றன.

"புறமெய்ம்மையில் நடைபெறும் நிகழ்ச்சியைத் தள மாகக் கொண்டு அவற்றை உந்துபீடமாகக் கொண்டு, தான் எடுத்துக்கொண்ட பொருளை (விடயத்தை) முனைப்புறச் சித்திரிப்பதற்கான படிம உலகை அவன் நிர்மாணிப்பது இந்தக் கட்டத்திலேயே. இந்நிலையில் அவன் புறமெய்ம்மை படிமங்களாக்கி நிஜ உலகின் உணர்ச்சிக் கொந்தளிப்புகளை வன்மையுடன், இரத்தத்துடனும் சதையுடனும் உண்மை சொட்டத் தருவனவாக்கி யதார்த்தமாகத் தருகின்றார். புற மெய்ம்மையை அப்படியே பிரதிசெய்தல் யதார்த்தம் ஆகாது என்பதனை அவதானித்துக்கொள்க.

திறமையுள்ள படைப்பாளியின் ஆக்கங்கள் அவனது ஆக்க ஆளுமையை அறிந்துகொள்ளத் தூண்டும். அவ்வாறு அறிந்துகொள்வதற்கான மூலமாக அவனது எழுத்துகள்/ஆக்கங்கள், அந்த ஆக்கங்களின் அமைப்பு கள், அவற்றின் தன்மை, பாணி, அமைப்ப தற்குக் காரணமான அவனது உளவியற் பண்புகள், இந்தப் பண்புகளுக்குக் காரணமான அவனது உளவியற் பண்புகள், இந்தப் பண்புகளுக்குக் காரண மாக அமையும் அவனது வாழ்க்கைப் பின்னணி எனப் பல்வேறு அமிசங்களைத் தொகுத்து நோக்கும்போது தான் ஒரு கலைஞனுடைய ஆக்க ஆளுமை தெரியவரும். (உயிர்ப்புகள்:126-127)

நடைபெறும் ஒரு சமூகநிகழ்வு படைப்பாளியின் ஆக்க ஆளுமையில் விழுகின்ற பொழுது அவனது மனதில் ஆக்க உந்துதற் சக்திநிலையில் அது எந்த எந்தச் சிந்தனைகளை படிமங்களைத் தோற்றுவிக்கின்றது. என்பது இக்கொள்கையின் (Theory of reflection) சாரமாகும். (அப்படி இல்லாது இது வெறுமனே பிரதி பலிப்புக்கொள்கைதான் எனின், கலைஞர்கள் யாவரும் ஒருவகையான படைப்பையே தருபவர்களாக அமைதல் வேண்டி வரும். (உயிர்ப்புகள்:125)

இங்கு யதார்த்தத்தை - உண்மையை - வர லாற்றைப் புனைவாக்குவதில் தமிழ்க்கவியின் இடத்தை மதிப்பிடவேண்டியது அவசியமானது ஆகும். போராளி என்ற வகையில் - அதைவிட ஆட்சேர்ப்பிற் கான பிரசாரத்திற் கூட இயங்கியவர் என்ற வகையில் அதீத புனிதப்படுத்தல் - அதீத புனைவாக்கம் இங்கு இடம் பெற்றிருக்கின்றதா என்ற கேள்வியை ஒரு வாசகன் எழுப்பிக்கொள்வதைத் தவறாக நோக்கமுடியாது. ஆனால் ஒரு கலைப்படைப்பு உருவாக்கித்தரும் மெய்ம்மையும் - உணர்ச்சிப் போராட்டங்களும் இப் படைப்பின் வழி வாசகனை வந்து சேர்ந்துவிடுகின்றன. "பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்" என்று பாரதியார் கூறியதைப் போல அறியாத உலகத்தின் ஆசா பாசங்களின் நுண்ணுணர்வுகளை இப்படைப்புகள் மக்கள் மத்தியில் சுமந்து வந்திருக்கின்றன. ஆயுதந் தாங்கிய மனிதர்களுக்குள் இருக்கும் உணர்ச்சிகளையும் இலட்சியங்களையும் இவ்வகை நாவல்கள் எமக்கு வாசிக்கத் தருகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி கனவு கண்ட புதுமைப்பெண்கள் இங்கு நடமாடித் திரிந்ததை கண்முன்னே கண்டவர்கள் நாங்கள். "எட்டுமறிவினில் ஆணுக்குப் பெண் இங்கு இளைப்பில்லை காண் என்று கும்மியடி" என்ற குரலை இந்த நாவல் முழுவதும் நாம் கேட்கலாம்.

"நளினி பெரிய பிள்ளையாகிற்றாவெல்லே"

"ஆ...வாழ்த்துகள்"

"இது இப்ப வாழ்த்துக்குரிய விசயமில்லை"

பூமணி அம்மாவை ஆச்சரியமாகப் பார்த்தாள்.

"ஓம் பிள்ளை. இது குமருகளை வைச்சிருக்கக் கூடிய பாதுகாப்பான இடமில்ல. ..பிள்ளை பள்ளிக்குப் போகவர பாது காப்பில்ல...சுண்டுக்குழியில மாமியார் வீட்டில நிண்டு படிக் கிறாள்." (54)

என்று பெண்பிள்ளைகளின் வளர்ச்சியை நினைத்து பயந்து நடுங்கும் அதே இடத்திலேதான் இன்னொரு பக்கம் பெண்கள் புதிய கதைகளை உருவாக்கும் ஆற்றல் உடையவர்களாக மாறினார்கள். இராணுவத்தை எதிர்த்துப் போராடும் புது வியூகத்துடன் வீழ்த்தத் துடிக்கும் வீராங்கனைகளாக மிளிர்ந்து கொண்டிருந் தார்கள்.

"ஆனைக்கோட்டை, மானிப்பாய் வீதியில் உள்ள சின்ன நிசாந்தியும் ராகினியும் சேர்ந்து ஒரு இலக்கைத் தெரிவு செய்தனர். இந்த வீதி கல்லுண்டாய் வீதி கடந்து வட்டுக்கோட்டைச் சந்தியை அடைந்து அங்கிருந்து வடக்கே சங்கானை, சித்தங்கேணியை நோக்கித் திரும்பும். இங்கே இந்தப் பெரு வயல் வெளியின் நடுவே இராணுவப் பயிற்சி முகாம் ஒன்று அமைக்கப் பட்டிருந்தது. இந்த இராணுவத்தை கிளைமோர் வைத்து வீழ்த்தத் திட்டமிட்டனர். (83)

மக்களின் ஆதரவும் மக்களின் எதிர்ப்பும் காணப்படும் இடத்திலே எப்படிப் போராளிகள் இடரவும் தொடரவும் முடிகின்றது என்பதனை அனுபவங்களின் வழி தமிழ்க்கவி நமக்கு வெளிப்படுத்துகின்றார். மர்மநாவல் ஒன்றினைப் போன்ற விறுவிறுப்பும் சில நேரங்களில் விவரணக்கட்டுரை ஒன்றைப் படிப்பதைப் போன்ற போதாமையும் இந்நாவலில் இருப்பதையும் குறிப்பிட வேண்டும். இராணுவம் தேடி வரும் போது பூசை யறையில் மறைந்துநின்ற தருணத்தை வெளிப்படுத்தும் விறுவிறுப்பைக் குறிப்பிடலாம்.

**ஊழிக்காலம்**

தமிழ்க்கவி எழுதிய மூன்றாவது நாவல் "ஊழிக்காலம்". தமிழினி பதிப்பகத்தின் வெளியீடாக 2013 இல் வெளிவந்தது. போர்க்காலத்தில் – பிரசாரக் காலத்தில் தனது முதல் இரண்டு நாவல்களையும் தமிழ்த்தேசிய உணர்வுடன் ஒரு போராளியாக வெளி யிட்ட இவர், போரின் இறுதிநாட்களின் துயரங்களால் ருசிபார்க்கப்பட்ட பின்னர் எழுதிய நாவலாக ஊழிக் காலம் விளங்குகின்றது. போரின் இறுதிநாளில் சரண் அடைந்து முகாமின் விசாரணக்கு முகங்கொடுப்பதில் இருந்து தொடங்கும் இந்தநாவல் பிள்ளைகள் பேரப் பிள்ளைகளுடன் ஒவ்வொரு இடமாக இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்து அலைந்துலைந்த கதையை அதற்கே உரிய வலியுடன் பேசிநிற்கின்றார். ஊழிக்காலம் கண் முன் திரண்டெழும் காட்சி கலங்கிய எம் கண்கள் வழி புலப்படுத்தப்படுகின்றது. விடுதலைப்புலிகள் அமைப் பினரைப் பற்றிய விமர்சனங்களும் பழிகளும் இங்கு இவரால் சுமத்தப்படுகின்றன. இறுதிக்கால முரண் களை, இருண்ட மனங்களின் இறுகிய காலங்களை உருவாக்கித்தர இவர் எழுத்துகள் இந்த நாவலில் முயன்றுள்ளன. ஆயினும் எழுத்து ஆவணங்களை கலை ஆக்கப்பிரதியாக கொள்ளலாமா? அதற்குரிய உயர்ந்த தகுதி இந்த நாவலுக்கு இருக்கிறதா? என்ற வினாவை வாசகரிடம் தொற்றவைக்கின்றன.

"கொடும் போர்க்குற்றங்களுக்கான மெய்யான நேரடிச் சாட்சி இந்தப் படைப்பு. இனவெறியின் ஊழிக்கூத்து. இறுதி முற்றுகைக் கால களப்பலி நாட்களின் பேரவலச் சித்திரிப்பு. துன்பக்காட்டாற்று வெள்ளத்தின் சுழலில் இழுபட்ட தவிப்பு. எல்லாம் முடிவடைந்த பின் சாம்பல் படுகை மீதிருந்து 60 வயதைக் கடந்த ஒரு அம்மம்மா வின் உறைபனியான நெஞ்சில் கசியும் துன்ப நினைவுகள். வாழ்ந்து பெற்ற அனுபவங்களின் பதை பதைக்கும் அன்றாடப் பதிவுகளின் நம்பிக்கையின் மூச்சுத் தருணங்களின் இறுதிப் பிணவாடை" (பதிப்புரை:7)

இடம்பெயர்ந்து கொண்டும் பதுங்குகுழிகளைத் தேடிக்கொண்டும் உயிரைச் சுமந்து வலியைச் சுமந்து நாட்களின் கணங்களை அதே வலியுடன் பெயர்க்க முயல்கின்றன தமிழ்க்கவியின் எழுத்துகள். ஆயினும் தொடர்ச்சியான இடம்பெயர்வுப் பதிவுகளின் அதிகரித்த விவரணமும் உண்மையின் அழுத்தமான பதிவுகளும் புனைவாக படிப்பதற்கு அனுமதிக்கவேயில்லை. மொழி யும் துளைத்தெடுத்தும் கலைதேர் மொழியாக ஆழப்பட வில்லை. எந்த உத்திகளை நோக்கியும் நாவல் பயணப் படவும் இல்லை. உண்மையான மனிதர்களை அவர் களின் பெயர்களுடனோ சிறுசிறு மாறுதல்களுடனோ இங்கு பதிவு செய்துள்ளார். எந்த மக்கள் புலிகளைக் கொண்டாடினார்களோ அதே மக்கள் அவர்கள் மீது கொள்ளும் கோபத்தையும் தலைவர் பற்றிய விமர் சனத்தையும், போராளிகளின் அடாவடித்தனங் களையும் விமானக்குண்டு வீச்சுகளையும் இந்த நாவலில் பதிவுசெய்துள்ளார்.

தனது முதல் இரண்டு நாவல்களிலும் விடுதலைப்புலிகள் பற்றிய சாதகமான அதீதமான கருத்துகளையே பதிவு செய்த தமிழ்க்கவி அவர்கள், தன்னுடைய கடுமையான மாற்றுக்கருத்துகளை இந்நாவலில் பல இடங்களில் முன்வைத்துள்ளார்.

இவ்விடத்திலே சமூகவியலாளரான எமில் டுர்கைம் அவர்கள் தற்கொலையின் வகைமைபற்றிக் கூறுவதற்குப் பயன்படுத்திய "அனோமி" எனபது எம் கவனத்தைக் கோருகின்றது. நியம மறுநிலையின் சமூகநிலைமையே அனோமி எனப்படுகின்றது. சமூக உறவுகளில் நியமம் பின்பற்றப்படாத நிலைதான் அனோமி. குற்றவியல் ஆய்வுகளில் அனோமி என்பது சடுதியான சமூகமாற்றத்தால் ஏற்படும் சமூகசீர் குலைவு கள் எல்லாவற்றையும் குறித்துநிற்கின்றது. அந்த வகை யில் போரின் இறுதிநாட்களும் தலைமைத்து வத்துடன் தொடர்பு களற்றுப் போன சூழலும் தன்னிச்சை யான முடிவெடுக்கத் தூண்டும் அதி கார மமதையும் இயக்கம் ஒன்றினை நியமமறு நிலைக்கு இட்டுச் சென்றன. இதுவே விடுதலைப்புலிகள் அமைப்பினரின் இறுதிக் கட்ட தவறுகள் சிலவற்றுக்கு அடிப்படையாயின. ஆயினும் இச்சூழல் பற்றிய கண்டனத்தைத் தனது நாவல்வழி தமிழ்க்கவி புலப்படுத்துகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாற்றுக்கருத்துகள்**

உந்தத் தனிநாடு ஆருக்கு? இஞ்ச நாங்கள் ஓடிக்கொண்டிருக்கிறம். திருக்கிணாமலையில் தமிழன் என்ன செய்து கொண்டிருப்பான்? சிங்களவனோட மீனுக்குப் பேரம் பேசிக்கொண்டிருப்பான். கண்டியில கொழுந்தெடுப்பான். கொந்தரப்புக் கவ்வாத்து வெட்டு வான். கொழும்பில் சினிமாத்தியேட்டரில் படம் பார்க்க வரிசையில் நிற்பான். சூரியன் சக்தி எப். எம்முகள்ள பிறந்தநாள் வாழ்த்து, கலியாண வாழ்த்து நேயர் விருப்பம் எண்டு ரெலிபோனில் கதைப்பான். சூப்பர் ஸ்டாருக்கு எஸ்.எம்.எஸ் அனுப்புவான். கோவில் வழிய தேர்த்திருவிழாவும் கூத்தும் நடக்கும். எந்தத் தமிழனுக்கு தனிநாடு? இல்ல போராடிக்கொண்டிருக்கிறவையள்ள தன்னும் எத்தினை பேருக்கு புலிகளின் தனிநாட்டுக்கை இருக்க விருப்பம்? (119)

புலிகள் பொதுநிர்வாகங்களை ஆரம்பித்த பின்னர் தலைதூக்கிய கீழ்மட்ட ஊழல்களில் மனமிடிந்து போனார் பாலகுமாரன். இருபது வருட காலத்தில் அவர் எந்தப் பதவியிலும் அமர்ந்தது இல்லை. விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் என்பதோடு சரி. (155)

நீதித்துறை பற்றிய விமர்சனம் (20) கூட இடம்பெற்றிருந்தது.

"அந்த நிலத்தின் சொந்தக்காரர் யாரென்று தெரியவில்லை. அந்த நிலத்தில் வேலிபோட்டு அதைத் தன்னுடையது ஆக்கிய ஒரு தளபதி அதில் ஒரு பகுதியை வேறொருவருக்கு நல்லவிலைக்கு விற்றிருந்தான் (25) என்று புலிகளின் நில அபகரிப்புப் பற்றியும் பேசியுள்ளார்.

"முந்தாநாள் சம்பவம் கேள்விபடயில்லையே... கடவுளே சனம் அடிச்சுக் கலைக்கிற அளவுக்கு நிலைமை வந்திட்டுது. அவன் ஒருவன் போட் எடுத்துக்கொண்டு தொழிலுக்கு வெளிக்கிட அவனுக்குச் சுட்டுட்டாங்கள். சுக்.. பாக்க மாட்டியள்.. மூளை கொட்டுப்பட்டுப் போச்சு.! சிமியோனுக்கு மருமேன் காரனும் அதிலயே சரி. இப்ப அந்தக் குடும்பம் ஆர்ற நிழல்ல நிக்கற.? பெடியனும் காயமெல்லே.. நீட்டிமுழுக்கி அழுவாரைப்போல அவள் குற்றப்பத்திரிகை வாசித்தாள்.

இயக்கஞ்சுட்டதோ...?

பேந்து பறையிறியள்.?..சூசையும் வந்து பாத்திட்டுத் தான் போறார்.

இது என்ன வேலை ஏதும் பிள்ளைபிடி அலுவலோ?

அதுக்குந்தான். ஆனா மூண்டு பேர் வீண் சாவுதானே? என்றாள் அவள்.

தொழிலுக்குப் புறப்பட்டவர்களை ஆட்களைக் கடத்துகிறார்கள் என்றெண்ணிச் சுட்டிருக்கிறார்கள் என்பது தெரிந்தது. விசாரணை எதுவுமின்றி கண்ட இடத்தில் சுடும்படியான கட்டளையை யார் எப்போது இட்டது? (201)

தாயும் தம்பிமாரும் தலையிலடித்துக்கொண்டு கத்தினார்கள். பார்வதி எட்டிப் பார்த்தாள். இன்னொரு பத்துப் பன்னிரண்டு கிலோமீற்றர் பரப்புத்தான் புலி களிடம் இருக்குது. அதுக்குள்ளும் தினமும் எறிகணை களும் விமானங்களும் உயிர்களைக் குடிக்கின்றன. இதுக்குள்ள பிள்ளையளைப் பிடிச்சு பயிற்சி கொடுத்து இனிமே சண்டைக்கு விட இவங்களுக்கு அவகாசம் இருக்கா? சும்மா சாகத்தானே போறம் இருக்கிறதுகளை யும் முடிச்சுப்போட்டு போவம் எண்டு செய்யிறாங்க போல(226)

பொக்கணைக்கும் ஆனந்தபுரம் பச்சைப்



புல்வெளிக்கும் இடையேயுள்ள கண்டல் பற்றைக்குள் படுத்திருந்து அதிகாலையில் மலசலங் கழிக்கவரும் இளைஞர்களைப் பிடித்துச் சென்றார்கள். அதிலிருந்து தப்ப இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஓடும் சனங்களின் தொகை அதிகரித்தது. அப்படி ஓடுகிற சனங்களின் மீது வேட்டுகள் தீர்ந்தன. மக்களைக் காப்பாற்ற ஏந்தின துவக்குகள்தானோ? (236)

அங்கால ஓடிவிட்டால் தப்பிவிடலாம் என்ற உயிராசையில் ஓடியவர்கள் புலிகளால் பிடிக்கப்பட்ட சம்பவங்கள் நிறைய. பிடிக்க முடியாதோரின் முதுகு களை குறிவைத்து புலிகளது துப்பாக்கிகளும் நீண்டன. சொந்தச் சன்னங்களுக்குப் பலியான நிறைய உடல்கள் மாத்தளன் வைத்தியசாலையில் கிடத்தப்பட்டிருந்தன.

என்ன நடக்குது இஞ்ச? இது யார் போட்ட கட்டளை? வெளியே கேட்கமுடியாது உள்ளம் கொதித்தது. செத்தழிஞ்சு போறதைத் தாங்கலாம் ஆனா யாருக்காகப் போரானாங்களோ யாருக்காகத் தங் களைக் கொடுத்தாங்களோ அந்த சொந்த மக்களிட் டையே ஏச்சும் பேச்சும் திட்டும் வாங்கிக்கொண்டு அழியப்போறாங்களே? வரலாற்றில இந்தக்கறை அழியவே அழியாது, (252)

இந்த ஊழிக்காலம் முழுவதும் இடம்பெயர்ந்து கொண்டும் பதுங்குகுழிக்குள் இருந்துகொண்டும் உணவுக்காகப் போராடிக்கொண்டும் புலிகள் மற்றும் இராணுவத்தினரிடம் இருந்து தப்பித்துக்கொண்டும் அவலத்தை மூட்டையாக்கிச் சுமந்துகொண்டே ஓடும் மக்களையே காட்டுகின்றார். தமிழர்களின் தொடங்கிய போராட்டம் வாழ்வின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகப் போராடிக்கொண்டே இருக்கும் தேவையைக் காட்டிநிற்கின்றார்.

**வீடு மாற்ற அவலம்**

அவள் பிறந்த ஊரை, பூர்வீக மண்ணைத் தனது நாற்பத்தியிரண்டாவது வயதில் விட்டுவந்தாள். இருபது வருடங்களாகிவிட்டன. இந்த வருடங்களில் பதினேழு வீடுகள் மாறியாயிற்று. ஒவ்வொரு இடமும் இராணுவ நடவடிக்கைகளை அடுத்தே மாறவேண்டியிருந்தது. இந்தவீடும் ஊருமாவது சாகும்வரை சொந்தமாக இருக்க வேண்டும் என்று பார்வதி எண்ணிக்கொள்வாள். (36 -37)

**கிளைமோர் கண்ணிவெடிகள்**

வன்னிவீதியெங்கும் கிளைமோர் கண்ணி வெடிகள் பல பெறுமதியான உயிர்களைப் பலிவாங்கி யிருந்தன(37)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவியியல் வரைபடமாகும் எழுத்து

மல்லாவிக்கு ஏ 9 பாதை வழியாக மாங்குளம் வரை சென்று மேற்கே பதினைந்து கிலோமீற்றரில் அடையும் வழியும், கனகபுரம் வீதி வழியே அக்கராயன் குளம் ஸ்கந்தபுரம் வழியாகத் தெற்கே திரும்பிச் செல்லும் வழியும் முறிகண்டி கடந்து கொக்காவில் சந்தியில் திரும்பி ஐயன்கண்குளம், புத்துவெட்டுவான் வழியாக ஆலங்குளம் கடந்து செல்லும் வழியும் உண்டு. அனைத்துப் பாதைகளிலுமே கிளைமோர் கண்ணிகள் வெடித்திருந்தன. இவ்வழிகளில் செல்லும் ஏதோவொரு பேருந்தில் ஏறித் துணுக்காய் கிராமத்தில் இறங்கி அருகே பனங்காமம் வீதியில் தெற்கு நோக்கி நடந்தால் ஒன்றரைக் கிலோமீற்றரில் பாலியாறு குறுக்கிடும். பெரிய இரும்புப் பாலத்தினூடாக அதனைக் கடந்தால் பாலியம்மன் கோயில். பிறகு பெரும் வயல்வெளி பச்சைப் பசேலென வரவேற்கும்.வயல்வெளியின் முடிவில் வரும் சின்னஞ்சிறுக் குடியிருப்புக் கிராமம் ஒட்டங்குளம். (37 -38)

இனி ஒரு போதும்

"இனி ஒரு போதும்" தமிழ்க்கவியின் நான்காவது நாவலாக அமைகின்றது. சென்னையில் உள்ள மேன்மை பதிப்பகத்தின் வெளியீடாக 2017 இல் வெளி வந்தது. பார்வதி, மீனா, மது என்ற பாத்திரங்களால் கதை உரைத்துச் செல்லப்படும் நாவலாக இது அமைகின்றது. போரின் நெருக்கடிக்காலத்தில் தொடங்கும் இக்கதை போராட்டத்தில் இணைந்துகொண்ட பேர்த்தியைக் காண்பதில் தொடங்கி அவளின் காதல் நினைவுகளுக்கு அழைத்துச் செல்வதாயும் இறுதியில் தனது பேர்த்தியை தவறவிட்ட அவளின் உள்ளவேதனையுடன் இந்த நாவலை நிறைவு செய்கின்றார். இனி ஒரு போதும் அவளைக் காணமுடியாதோ என்ற கேள்வி முதிய பார்வதியின் நெஞ்சில் கவிய, இனி ஒரு போதும் அவளைத் தேடும் தேடல் குறையாது என்று நிறைவு பெறுகின்றது. வீட்டில் பெற்றோருடன் ஒழுங்காக வாழ முடியாத மீனாவை தன்னுடன் அழைத்துவந்த பார்வதி அன்பையும் துணிவையும் ஊட்டி அவளைத் தன்னோடு இசைவாக்குகின்றாள். பதுங்கி வாழ்ந்தவள் மதுவைக் காதலிக்கும் அளவிற்கு முன்னேறுகின்றாள். மதுவின் வீட்டாரின் எதிர்பார்ப்புகளும் செயற்பாடுகளும் அவளுக்கு எதிராக அமைந்துவிட்டதால் விரக்தி அடைகின்றாள். அந்த விரக்தியும் நாட்டுநிலைமையும் இணைந்துகொள்ள போராட்டத்தில் தன்னை



இணைத்துக்கொள்கின்றாள். பாட்டியினதும் பேர்த்தியினதும் மனப்போராட்டங்கள் இந்த நாவல் முழுவதும் அழுத்தமாக இடம்பெற்றுள்ளன. "இனி வானம் வெளிச்சிரும்" நாவலில் தன்னுடைய பிள்ளையைப் போராளியாகக் கண்ட, அனுப்பிய பார்வதி என்ற தாய் தனது பேர்த்தியையும் போராளியாகக் கண்ட அனுபவத்தைப் பேசுகின்ற தன்மையை இந்த நாவலில் காணலாம். தானும் ஒரு முதிய போராளியாக இருந்து கொண்டு கதையுரைக்கும்போது அவர் காட்டும் பாதைகள் வழியேதான் நாம் நம்பிப் பயணிக்கவேண்டியுள்ளது,

ஆணாதிக்கம் இன்னும் குடும்பங்களில் கோலோச்சுவதையும் விவசாயிகளின் வாழ்வையும் போராளிகளின் எண்ணங்களையும் வன்னியில் அக் காலத்தில் நிலவிய கட்டுப்பாடுகளையும் கட்டுப்பாடுகளை மீறிய மக்களுக்குக் கிடைத்த தண்டனைகளையும் போரின் சீற்றம் வன்னியையும் மக்களையும் பாதித்த தன்மைகளையும் வெளிப்படுத்துகின்றார். ஒரு பக்கம் போராளிகளின் தியாகத்தைப் பேசும் இந்தநாவல் ஊழிக்காலம் என்ற அவரது மூன்றாவது நாவலைப் போலவே பல மாற்றுக்கருத்துகளையும் முன்வைக்கத் தவறவில்லை.

"பாருங்க, பனைமரத்தில தேள் கடிச்சா தென்னை மரத்துக்க வலிக்குதாம். அதுபோல வன்னியைக் காப்பாற்ற படையைப் பலப்படுத்த புதிய வழிமுறையைக் கடைப்பிடிச்சிட்டாங்கள். படையணிக்கு ஆள்காணா தெண்டு வீட்டுக்கொருவர் கட்டாயமா படையில இணைக்கவேணும் எண்டு துவங்கினாங்கள் இயக்கம். வீடுவீடா குடும்பப் பட்டியல் தயாரிச்சு பிள்ளையளை இனங்கண்டுபதினாறு வயதுக்கு மேல எண்டா கட்டாயம் ஒரு பிள்ளையை இயக்கத்தில கொடுத்தே ஆக வேணும்.

இந்தச் சட்டம் வந்த உடன பிள்ளைகளைப் பெற்றார் மறைத்து வைக்கப் படாதபாடுபட்டனர். பலர் அழுதும் தொழுதும் பிள்ளைகளை மீட்கப் பார்த்தனர். பிள்ளைகளை வெளியே அனுப்பமுடியவில்லை. ஏராளமான வீடுகளில் பிள்ளைகளை உயிருடன் பறி கொடுத்தனர். (153-154)

"ம்...உங்களுக்கு இந்த வீட்டுக்கொருவர் படைசேர்ப் போட நல்ல கொத்தல்தான் போல" என்றேன் சிரித்தபடி.

சொன்னா நம்ப மாட்டாயக்கா .போன கிழமை மட்டும் ஆறு கலியாணம் பொருத்திப் போட்டம். எழுத்தும் முடிஞ்சது... என்றவர் தன் வெற்றிலைச் சிப்பத்தைப் பிரித்து இரண்டு பாக்குப் பிளகை எடுத்துக்கொண்டு சரையை என்னிடம் நீட்டினார்"(159)

காவல்துறை மீதான விமர்சனம்

காவற்துறை இப்ப குற்றத்தடுப்பில இல்லை. குற்றம் செய்யிறதில இறங்கியிருக்குது. அவைதான் ஆட்சேர்ப்பின் முக்கிய அதிகாரியள். அதாவது ஆள்பிடிதான் இவைக்கான வேலை(167)

ஆட்சேர்ப்பிற்கான தந்திரம்

உண்மையில் எதுவும் களவு போகவில்லை. அதை ஒரு சாட்டாக வைத்து ஆட்சேர்ப்பை நடத்தியிருந்தார்கள் என்பது தெளிவானது (169)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வன்னி வாழ்வின் நிலையாமை**

அந்நியோன்னியமாக என்னுடன் பழகிய நண்பர்கள் யுத்தத்தில் கொல்லப்பட்டு சடலங்களாய் வந்தனர். கடற்புலிகளின் துணைத்தளபதி கொல்லப் பட்டதைப் போல பலர் கிளைமோர் கண்ணிகளில் மாண்டனர். அரச ஊழியர்கள் பாடசாலைச் சிறுவர்கள், கோவிலுக்குப் போனோர், கலியாண வீட்டுக்குப் போனோர் என பல வகையிலும் கொல்லப்பட்டனர். அன்றாடம் மரணம் அழுகை, தோல்வி என்பதான செய்திகளுடன் வாழ்க்கை நகர்ந்தது.

**மரணத்துள் வாழ்தல்**

அரசினர் வைத்தியசாலையின் பின்புறம் பாரிய தாக்குதல் நடந்து ஒரு வாரமாகியிருந்தது. அதனைத் தொடர்ந்து திருநகர், வட்டக்கச்சி,உருத்திரபுரம் பகுதி களிலும் முகாமென நினைத்து அதன் சுற்றாடல்களே தாக்கப்பட்டன. பங்கர்கள் பாதுகாப்பற்றதாகிவிட்டன. எனவே கட்டடங்கள் அற்ற வெளிக்குள் ஓடிப் பதுங்குவதே எமது வழமையாக்கிவிட்டோம் *(174)*

**காதலைமறக்கவைக்கும் போர் ( போராளி) வாழ்வு**

இன்றுடன் வந்து நான்கு நாட்களாகின்றன. குளிக்கவில்லை. மாற்றுடுப்பு இல்லை. மாலை வரை ஏதோ வேலை. காடுவெட்டவும் பதுங்குகுழி வெட்டவு மாக கஸ்டப்பட்டோம். எங்களிற் பலர் பாடசாலைச் சிறுமிகள். ஒரு போதும் வேலை செய்திராதவர்கள். அடித்து வேலைவாங்கப்பட்டனர். என் கைகளெல்லாம் கொப்பளித்துக் கிடந்தது. என்றாலும், எனக்குள் இப்போது மதுவின் நினைவுகள் இல்லை. இந்தச் சிறுமிகளின் வேதனை அதைவிடப் பெரிதாக இருந்தது. எப்போதாவது அவனுடைய நினைவு வந்தாலும் அது என்னை வருத்தவில்லை. *(181)*

**நாவல் எடுத்துரைப்புமுறைகள்**

ஏற்கெனவே சிறுகதைகள் பற்றிக் கூறியதைப் போல எடுத்துரைப்புமுறை என்பதே விடயத்தைப் படைப்பாக்கும் கலைநுட்பம் ஆகும். இவரது நான்கு நாவல்களின் வழி அவற்றின் எடுத்துரைப்புமுறை பற்றியும் கலையாக்கம் பற்றியும் கூறவேண்டியது அவசியமானது ஆகும். நாவல் என்பது காலம், களம், தத்துவம் என்பற்றின் பின்னணியில் உருவாக்கப்படும் வாழ்க்கையின் தரிசனம் ஆகும்.

> "..ஒரு படைப்பாளியை இனங்காட்டுவதும் அவர்க்கு ஒரு இடத்தை நிர்ணயிப்பதும் எது? அது உயிரோட்ட மான எடுத்துரைப்புத்திறனும், எடுத்துரைக்கும் பொருளின் அடர்த்தியும், அதன் நோக்கத்திலேயுள்ள தெளிவும் வாசிப்புகளுக்காகத் திறந்துவிட்டிருக்கிற வெளியும் உண்மையும்தான்." (நடராசன், தி.சு.தி. ஜானகிராமனின் ஒரு மறுவாசிப்பு அனுபவம்: 57)

**1. பார்வதி என்ற பிரதான பாத்திரம்**

நாவல்களில் மையக்கருவுக்குச் சமாந்தரமாக அழுத்தம்பெறவேண்டியது பாத்திரவார்ப்பு ஆகும். அந்தவகையில் "இருள் இனி விலகும்" என்ற நாவலைத் தவிர்ந்த ஏனைய மூன்று நாவல்களிலும் பார்வதி என்ற பாத்திரமே பிரதான பாத்திரமாக அமைகின்றது. இனி வானம் வெளிச்சிரும் என்ற முதலாவது நாவலில் தாயாகவும் ஊழிக்காலத்தில் தாயாகவும் பாட்டியாகவும்



இனி ஒரு போதும் நாவலில் பெரும்பாலும் பாட்டியாகவும் தனது பாத்திரவார்ப்பை அழுத்தமாக உருவாக்கி விடுகின்றார் தமிழ்க்கவி. அந்தப் பார்வதி தமிழ்க்கவி தான் என்பதை வாசிப்பவர்கள் இலகுவாக அறிந்து கொள்ளமுடியும். கருணாகரன் அவரைப் பற்றி எழுதிய கட்டுரையின் வழியாகவும் சேஷாபாசகத்திக்கு வழங்கிய விரிவான நேர்காணல் மூலமாகவும் இதனை நாம் ஒப்பிட்டு அறிந்துகொள்ளமுடியும்..

**2. விவரணம்**

வன்னிக்காடுகளையும் போர்க்களங்களையும் தனது எழுத்துத்திறமையால் ஆசிரியர் பதிவு செய் துள்ளமையைக் காணலாம். இடங்கள் பற்றிய சித்திரிப் பும் மனிதர்கள் பற்றிய சித்திரங்களும் அவை அவற்றி னது ஓட்டத்துடன் எம்மைப் பிணைத்து விடுகின்றன.

**3. கதைப்பின்னல்**

கதைகளை உருவாக்குவதற்கு கதாபாத்திரம், சூழமைவு, போராட்டம்(முரண்), கதைப்பின்னல், கதைக் கரு என்ற ஐந்து கூறுகள் பயன்படுகின்றன. இவற்றுள் கதைப்பின்னல் என்பது கதையின் முக்கிய மான போராட்டத்திற்கு தொடர்பான சம்பவங்களின் தொடர்ச்சி, கதாபாத்திரம் செய்யும் செயல்களின் தொடர்ச்சி ஆகும். அதாவது தமது அடிப்படைக் கருத்தை வளர்க்க எப்படிச் சம்பவங்களை ஒழுங்கமைக் கின்றார் என்றும் இதனை விளங்கிக் கொள்ளலாம். கதைப் பின்னலுக்குள் அறிமுகம், செயல் எழுச்சி, உச்சக் கட்டம், செயல்வீழ்ச்சி, முடிவு ஆகிய ஐந்து அம்சங்கள் உள்ளடங்குகின்றன. சிறந்த கதைப்பின்னலை இனி வானம் வெளிச்சிரும் நாவலிலும் இனி ஒரு போதும் நாவலிலும் அவதானிக்கமுடிகின்றது. மற்றைய நாவல் களின் எடுத்துரைப்பு முறையில் சற்று பலவீனம் காணப் படுவது புலனாகின்றது. ஆயினும் அவை இரண்டினதும் உள்ளடக்கம் மிக வலிமை பொருந்தியதாக உள்ளமை யும் குறிப்பிடத்தக்கது.

**4. உண்மைத்தன்மை**

தமிழ்க்கவியின் நேர்காணல்களில் சொல்லப் படும் சொந்தக்கதைகளும் நாவலின் கதைப்போக்கு களும் ஒத்திருப்பதை அவதானிக்கமுடியும். "என்னுடன் இருந்து என்னைத் தாக்கி என் உணர்வுகளைக் கிழித்துத் தைத்த ஒரு விவகாரம்" என்று இனி வானம் வெளிச்சிரும் நாவலில் கூறுகின்றார். "இக்கதையில் வரும் பாத்திரங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் கற்பனையல்ல" என்று கூறி தன்னுடன் உறவாடியவர்களின் உண்மைப்பதிவு என்று கூறி பின்னிணைப்பாக அவர்களின் புகைப்படங்களும் தகவல்களும்கூடத் தரப்பட்டுள்ளன. ஊழிக்காலம், இனி ஒரு போதும் நாவல்களிலும் பார்வதி என்பது தமிழ்க்கவி என்பது சொல்லாமலே விளங்கும். ஊழிக்காலம் நாவலில் பல உண்மையான பிரபலமான மனிதர்கள் அவர்களின் பெயர்களிலேயே இடம்பெற்றுவிடுகின்றார்கள். பாலகுமாரன். சாந்தன், சுகுமார், சத்தியமூர்த்தி என்று... இவையெல்லாம் வாசகரை ஈர்க்கக் கூடிய விடயமே. போர் வாழ்வையும் போரின் பின்னரான வாழ்வையும் சத்தியத்துடன் படிக்க நினைக்கும் ஒருவரை இப் படைப்புகள் தம்முள் சங்கமமாக்க அழைத்து நிற்கின்றன.

**5. கதை கூறல்**

இனி ஒரு போதும் நாவலைத் தவிர மற்றைய நாவல்கள் படர்க்கைநிலை நின்று கதையுரைக்கின்றன. ஆனாலும் பாத்திரங்களின் உரையாடல்கள் அவற்றை உயிர்ப்படையச் செய்துவிடுகின்றன. பேச்சு மொழி வாசகரை ஈர்த்துவிடுகின்றது. இனி ஒரு போதும் நாவலில் மீனா, பார்வதி, மது ஆகிய பாத்திரங்களின் பெயர்களில் அத்தியாயங்கள் ஆரம்பித்து அவர்கள் கதை சொல்வதாய் வளர்ந்து செல்லும் உத்தியை ஆசிரியர் கையாண்டுள்ளார். ஒரு சம்பவம் பற்றிய வெவ் வேறு பாத்திரங்களின் மனஉணர்வுகளை உளவியல் விகற்பங்களை உணர்ந்துகொள்ளும் வாய்ப்பினை வாசகர்களுக்கு இவ் உத்தி வழங்கிநிற்கின்றது. ஏனைய நாவல்களோடு ஒப்பிடுகையில் "இனி ஒரு போதும்" நாவல் அமைப்பில் பெரிதும் வெற்றி பெற்றிருக்கின்றது என்று தோன்றுகின்றது.

**6. கலந்துரைத்தல்**

ஊழிக்காலம் நாவலிலே தொடர்ச்சியாக இடம் பெயர்ந்து அலைந்து உலைந்த பார்வதியின் நெஞ்சினிலே "ஆ ஈன மழை பொழிய இல்லம் வீழ..." என்ற பாடல் தோன்றுகின்றது. "நித்தம் சாவாருக்கு நித்தம் அழுவதுண்டோ" போன்ற தொடர்கள் பயன்படுத்தப்படுகின்றன. கணையாழியில் வந்த குதிரைக் காரன் கதை நினைவுபடுத்தப்படுகின்றது. இவ்வாறு பலதையும் கலந்து அனுபவத்தை உரைக்கும் உத்தி யினைக் காண முடிகின்றது.

**7. மொழிநடை**

ஊழிக்காலம், இருள் இனி விலகும் ஆகிய நாவல்களின் மொழிநடையில் சற்றே போதாமை காணப்படுவதை உணரலாம். ஆனால் இனி வானம் வெளிச்சிரும், இனி ஒரு போதும் ஆகிய நாவல்கள் புனைவின் வசீகரத்தை உயர்த்தக்கூடிய மொழிநடை உடையனவாக விளங்குவதைக் காணலாம்.

**நிறைவாக...**

இருதசாப்தங்களாகப் புனைவுலகில் அறியப்படும் "தமிழ்க்கவி" அவர்கள் போராளியின் படைப்புகள் என்று முதலில் கவனத்தைப் பெற்றவர். ஊழிக்காலத்தின் பின்னர் போரின் இறுதிநாட்களின் அவலங்களை அனுபவித்த ஒருவரின் எழுத்துகள் என்றும் கவனத்தைப் பெற்றவர். தனக்குக் கிடைத்த அனுபவங்களை அந்தந்த உணர்ச்சித்தடத்தில் நின்று எடுத்துரைக்கும் உண்மை அதிகம் கலக்கப்பெற்ற படைப்புகளைத் தந்தவர். அழுகையும் - கோபமும் - நகையும் என்று பல மெய்ப்பாடுகளை ஒரு பெண் கதைசொல்லி என்ற வகையில் எமக்குள் கடத்திவிடும் தன்மை இவரது எழுத்துகளுக்குள் ஒளிந்திருக்கின்றது.

இவரது சிறுகதைகளில் பாலியல் என்பது சற்றே அதிகமாக வேண்டுமென்றே கலக்கப்பெற்றுள்ளதோ என்று ஐயுறவைக்கின்றார். உள்ளடக்க அதிர்ச்சி என்பது எழுத்தாளரைப் பிரபலமாக்கும் உத்திகளில் ஒன்றாகும். இவரது சிறுகதைகளை விட நாவல்களே அதிகம் கவனத்தைக் கோருவன என்று கூறலாம். சில இடங்களில் உண்மையான பெயர்களைச் சொல்லும் இடங்களில் அந்தச் சூழமைவில் வெளிப்படும் கருத்தைச் சொல்லும்போது காழ்ப்புணர்வுடன் சொல்லப்படுகிறதோ என்ற தொனியையும் தந்துவிடுகின்றது. (சத்தியமூர்த்தியின் மனைவி பற்றி வரும் விடயங்கள்)

இவரிடம் காணப்படும் அஞ்சாமை ஒளிவு மறைவற்ற வகையில் சில செய்திகளைக் கொண்டுவந்து சேர்த்துவிடுவதையும் குறிப்பிட்டேயாகவேண்டும். தமிழ்க்கவியின் எழுத்துகள் இனவரைவியல் ஆவணமாகவும் இனமொன்றின் சுதந்திரவேட்கையையும் அவை தேய்ந்து மௌனமாகிப் போன சோகத்தையும் காலத்தின் சாட்சியாய் நின்று சொல்லிக்கொண்டே இருக்கப் போகின்றன.

## தமிழ்க்கவி பற்றிய சிறிய தகவல்கள்

தந்தை - கந்தப்பு

தாய் - லட்சுமி

இயற்பெயர்- தமயந்தி

சகோதாரங்கள் - பத்து

பிறந்த இடம் - வவுனியா - சின்னப்புதுக்குளம்

பிறந்த திகதி -19.7.1947


வெளியீடு செய்த நூல்கள் :

1. இருள் இனி விலகும்
2. இனி ஒரு போதும
3. இனி வானம் வெளிச்சிரும்
4. ஊழிக்காலம்
5. நரையன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org